

கல்கி
மணியம்
KALKI
ஜூன் 5, 1955
4 அணா

''எவ்வளவு மனோகரமானது'' என்கிறார் ஷீலா ரமானி



'' லக்ஸ் டாய்லட் சோப்பின் புது மணத்தை



நான் விரும்புகிறேன்.''

''எனக்குப் பிடித்த மலர்களை அது நினைவூட்டு கிறது — அது மிகவும் கவர்ச்சியுடையது — இனி மையானது! லக்ஸ் டாய்லட் சோப்பின் உத்தம மான, மிருதுவான நுரையில், தங்கி வீசும் அந்த நறுமணத்தை நான் மிகவும் விரும்புகிறேன்.''

தலைமுதல் கால் வரை கவர்ச்சி அளிக்க பெரிய சைஸிலும் கிடைக்கிறது.



லக்ஸ் டாய்லட் சோப்



இந்திய நட்சத்திரங்களின் சுத்தமான, வெண்மையான, அழகு தரும் சோப்

LTS. 440-50 TM

மலர் 14
இதழ் 45

மன்மத ௵
வைகாசி 22

கல்கி

பொருளடக்கம்

1955 ஜூன் 5

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





ஏ சி சி

தி செமெண்ட் மார்கெடிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்
9, மௌண்ட் ரோடு, மதராஸ். 4/12, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர்.
கம்பெனி பில்டிங், பங்களூர்.



மலர் 14
இதழ் 45

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மன்மத ௵
வைகாசி 22

வான்புகழ் கொண்ட வள்ளுவர் திருநாள்

இன்று, வைகாசி அனுஷம் வள்ளுவர் திருநாள்.

தமிழ் நாட்டிலும், இலங்கையிலும், தமிழர் வாழும் தொலை தூரங்களிலும்கூட வள்ளுவர் திருநாள் கொண்டாடுவது கேட்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

நம்மில் சிலர் வள்ளுவர் திருநாளை என்றைக்குக் கொண்டாட வேண்டும் என்ற ஆராய்ச்சியில் முனைந்து, வேறு சில தினங்களிலும் கொண்டாடுகிறார்கள் என்று தெரிகிறது. ஆண்டு முழுதும் நாள்தோறும் கணம்தோறும் நெஞ்சகத்தில் வைத்துப் பூஜித்துப் பின்பற்ற வேண்டிய ஒரு மேதையின் தினத்தை, வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாளில் எந்த நாளில் கொண்டாடினாலும் நமக்கு மகிழ்ச்சியே. என்றாலும், நாடு முழுதும் ஒருமித்து ஒரு குறிப்பிட்ட தினத்தில் திருநாள் கொண்டாடுவது நலம். மகா கவிஞர் ஒருவருடைய நினைவுக்கு உகந்த முறையில் விழாவும் மகத்தாகக் கொண்டாடப்படுவது நம்முடைய கடமையாகும். ஆனால் விழாக்கள் கொண்டாடுவதோடு நின்றுவிடாமல் வாழ்க்கைக்கு உபதேசிக்கப்பட்ட அறமாக அவர் வாக்கை எண்ணி நடக்கவேண்டும் என்பதே மிகவும் முக்கியம்.

திருவள்ளுவர் ஒரு ஞானி. கற்ற கலைகளும், கல்லாத பெருங் கலைகளும் அவருடைய வாக்கில் சன்னதமாகும். வெறும் ஆராய்ச்சி அறிவாக மட்டும் இல்லாமல், காலத்தையும் இடத்தையும் மொழி வரம்பையும் கடந்து நின்று, அகில உலக நிலையிலே உலக மக்கள் அனைவருக்கும் எக்காலத்துக்கும் பொருந்திய முறையில் அறிவுச் செல்வத்தை வழங்கியுள்ள மகா புருஷர் திருவள்ளுவர். அவருடைய திருக்குறள் மாண்பு நிரம்பிய நூல்.

தமிழ் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இந்தப் பெரியார், எல்லா சமயத்தினருக்கும் ஒப்ப அமைந்த நீதி முடிவுகளை உள்ளத்திலே தேக்கி உணர்வு கண்டார். தமிழ் நாட்டில் எத்தனையோ நூற்றாண்டுகளாகக் குரு பரம்பரை முறையில் வழங்கப்பட்டு வரும் ஞான இரகசியத்தை அறியப் பெற்று, அந்த ஞான நோக்கின் துணை கொண்டு உறுதிப் பொருளைப் பாடினார். சிவ நேசச் செல்வர்கள் அவரைத் 'திரு வள்ளுவ நாயனார்' என்று கொண்டு வழிபட்டாலும், உலகின் எல்லாச் சமயத்தினரும் அவரைத் தம் தம் சமய குருவாகக் கொள்ளத் தக்க வாய்ப்போடு அமைந்திருக்கிறது அவருடைய தமிழ் மறை. இதனால் சில சமயத்தினர் வள்ளுவரைத் தம் சமயத்தினரே என்றுகூட வாதாடுகிறார்கள்.

தமிழ் நாட்டுப் பெரும் புலவர்கள் பலரும், தங்கள் நூல்களில் வள்ளுவரை மேற்கோளாக எடுத்துச் சொல்லும் போது "......... என்று அறம் கூறிற்று" என வள்ளுவர் வாக்கை "அறம்" என்ற அருவப் பெயராலேயே குறிப்பிடுகின்றனர்.

கம்பரைப் போன்ற மகா கவிஞருடைய வாக்கிலும் வள்ளுவரின் மொழிகள் அங்கங்கே பொதியப்பட்டிருப்பதைக் காணலாம்.

இலைத்த வெறும் நீதி வாசகமாக இராமல், எத்தகையோனும் வாழ்க்கையில் ஏற்று நடத்தும் வகையான உபதேசப் பொருளை உன்னதமான கவிதையிலே செவ்விய சொல்லில் நுட்பமாக ஆண்டு கொடுத்ததே இதன் கவர்ச்சிக்குக் காரணம்.

திருக்குறளின் முதலாவது சிறப்பு அதனுடைய வடிவழகு. இரண்டு வரிக்குள் ஒரு சிலையைச் செதுக்கி நிறுத்தின மாதிரி ஒரு கருத்தை அமைத்துக் கொடுப்பது நுட்பமான ஒரு சிற்ப முறை. இந்தக் கலையை நின்று நின்று நினைந்து ஆனந்தமடைந்து கொண்டேயிருக்கலாம். ஒரு குறளை எடுத்துக் கொண்டு அதைத் திரும்

பத் திரும்ப ஓதிப் பார்த்தால் இந்த வடிவ நுட்பம் புலனாகும்.

சொல்லழகும், இசைப் பண்பும் மட்டும் இருக்கும் கவிதையை, பிற பாஷைகளிலே மொழிபெயர்த்து அதன் அழகு முழுவதையும் உணர்த்துவது சாத்தியமாகாது. வள்ளுவர் வாக்கின் சிறப்பு அதன் வடிவத்தோடு, அதன் கருத்திலேயே உள்ள ஆழமும் அந்தக் கருத்தை வெளியிடும் விதத்தில் உள்ள உருவமும் ஆகும். இது காரணமாகவே திருக்குறள் பிறபாஷைகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டு அன்னியர்களும் ஓரளவு அனுபவிக்கக்கூடிய அரிய இலக்கியமாக நின்று நிலவுகிறது. கருத்தாழம் நிரம்பி யிருப்பதால், வடிவழகைப் பெயர்த்துத் தர முடியா விட்டாலும் திருக்குறளின் அன்னிய பாஷை மொழி பெயர்ப்புக்கள் உயர்ந்த இலக்கியமாக இருக்கின்றன.

"எல்லாப் பொருளும்
இதன்பால் உள:இதன்பால்
இல்லாத எப்பொருளும்
இல்லையால்—"

என்று மதுரைத் தமிழ்நாகனார் என்னும் புலவர் ஒரே உத்சாகமாகப் பாடுகிறார் இந்தச்சிறப்பை!

இந்தக் காலத்தில் திருக்குறளைப் பலரும் படிக்கிறார்கள். சொற்கள் சுருக்கமாக இருப்பதால், சொல்லுவதற்கும் நினைவு வைத்துக் கொள்ளுவதற்கும் எளிதாக இருக்கிறது. ஆனால் எளிமைக்குள்ளே நிற்கும் பொருளோ!

பாபநாசத்தில் பாண தீர்த்தம் என்று உண்டு. கரையில் நின்று பார்த்தால். தண்ணீர் தெள்ளத் தெளிந்து நின்று அடித்தளத்தின் மணல் மேலே தெரியும். ஆழமே இல்லாதது போலத் தோன்றும். இறங்கிப் பார்த்தால் தான் புரியும். இறங்க இறங்க உள்ளே போய்க் கொண்டே யிருக்கும், அதன் ஆழம்!

ஓதற்கு எளிதாய்
உணர்தற்கு அரிதாகி
வேதப் பொருளாய்
மிகவிளங்கி—தீதற்றோர்
உள்ளுதொ(று) உள்ளுதொ(று)
உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி
மாண்பு!

வாழ்க்கைக்கு அறிவு மட்டும் போதாது. அறிவுடன் பக்தியும் இருந்தாலொழிய, அறிவு பயன்படாது. பக்தியும் பயமும் அன்பும் கலந்து ஏற்படும் மனநிலையைத்தான் 'பயபக்தி' என்று நம்முடைய பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆண்டவனை மனத்தில் கொண்டு அவன் திருவடியில் பயபக்தி செலுத்த வேண்டும். பழகப்பழக அந்தப்பயம் அன்பின் வடிவம் எடுத்துக் கொள்ளும். ஆண்டவனை மறந்தாலும், அதாவது பரம்பொருளை மனத்தில் உருவாக்கிக் கொள்ளும் சக்தி நமக்கு இல்லாமற் போனாலும், புத்தர் அல்லது ஞான சம்பந்தர், மாணிக்க வாசகர், நம்மாழ்வார் அல்லது திருவள்ளுவர் என்று ஒரு குருநாதனைக் கருத்தில் நிலவச் செய்து பய பக்தி செலுத்த வேண்டும். பக்தி இல்லாத அறிவு வெற்று அறிவேயாகும். அது பயன் படாது. வியாசங்கள் எழுதப் பயன்படுமே தவிரச் சீலம் தராது. உயிருக்குத் துணையாகாது.

"வேதத்தைத் திரும்பத் திரும்ப ஓதி இந்த ஆத்மாவை அடைய முடியாது. படிப்பதால் உண்டான அறிவைக் கொண்டு ஆத்ம தரிசனம் பெறமுடியாது. பண்டிதர்கள் சொல்லக் கேட்டும் அடைய முடியாது. ஆத்ம ஞானம் வேண்டுமென்று தன் உள்ளத்தில் விருப்பம் பொங்குகிறவனே, ஆத்மாவைக் காணப் பெறுவான். அத்தகைய உள்ளம் கொண்டவனுக்குத்தான் அப்பொருளும் தன் உள்ளத்தைக் காட்டும்" என்பது உபநிஷத்து வாக்கு— "ந அயம் ஆத்மா" என்கிற மந்திரம்.

தமிழ் நாட்டில் உயிருக்குத் துணையாக நிற்கிற சமயங்களில் கூறப்படும் அத்தனை உறுதிப் பொருளும் திருக்குறளில் காணலாம். வியாச மதம், ஜைமினி மதம், பதஞ்சலி மதம், கபில மதம், கணாத மதம், அக்ஷபாத மதம் என்றும் இன்னும் பலவாறாகவும் ஆறு சமயங்கள் தமிழ் நூல்களில் கூறப்படுகின்றன. இவை யெல்லாம் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றினாலும் வள்ளுவ குருநாதனும், அந்த குரு நாதன் குறளில் காட்டுகிற ஒற்றுமையும், எல்லாருக்கும் நன்றாக இசைந்த ஒரு பக்தி மார்க்கமாகும். இதை மனத்தில் கொண்டே கல்லாடர் என்ற பெரும் புலவர் திருக்குறளை வியந்து பாடினார்.

திருவள்ளுவர் திருநாளாகிய இன்று கல்லாடர் வாக்கைக் கருத்தில் கொண்டு வள்ளுவர் நாமத்தை வாழ்த்துவோமாக!

ஒன்றே பொருள்எனின்
வேறுஎன்ப; வேறுஎனின்
அன்றுஎன்ப ஆறு
சமயத்தார்—நன்றென
எப்பா லவரும்
இயைபவே, வள்ளுவனார்
முப்பால் மொழிந்த
மொழி!

அட்டைப்பட விளக்கம்

ஒரு குறள் மலர்

வெள்ளத் தனைய மலர் நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய(து) உயர்வு

தடாகத்தில் தாமரை மலர்ந்திருக்கிறது. தண்ணீருக்குள் அதன் தண்டு வளர்ந்து மலரைத் தாங்கிக் கொண்டு நிற்கிறது. அதன் நீளம் தண்ணீரின் ஆழத்தைப் பொறுத்தது. எத்தனை அடி ஆழம் இருக்கிறதோ அத்தனைக்குத் தண்டு வளர்ந்து மலரைத் தாங்குகிறது. மனித உள்ளத்தின் மலர்ச்சியும், அந்த மலர்ச்சியைத் தாங்கி நிற்கும் உள்ளப் பண்பின் ஆழமும் இது போலத்தான் என்கிறார் குறளாசிரியர்.

வெள்ளத்தின் ஆழத்துக்குத் தக்கபடி அமைகிறது, மலரின் நீளம். அவரவர் உள்ளப் பண்புக்குத் தக்கபடி அமைகிறது மனிதர்களின் உயர்வு.

வள்ளுவருடைய இதயத் தடாகத்தில் மலர்ந்த இந்த அற்புதமான குறள் மலரை மூவர்ணத்திலே இவ்விதம் அட்டைச் சித்திரமாகச் சித்திரித்திருக்கிறார் நமது ஓவியர் மணியம்.

ருஷ்ய விஜயம்

பாரதப் பிரதம மந்திரி திரு நேரு ஜூன் 5-ம் தேதி ருஷ்யாவுக்குப் புறப்படுகிறார். அவருக்கு ருஷ்யாவில் அமோகமான வரவேற்பு ஏற்பாடுகள் செய்து வருவதாக அங்கிருந்து செய்திகள் வருகின்றன. ருஷ்ய மக்கள் அவர் வரவை மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

நமக்கு அணுகுண்டு, ஜலஜ குண்டு முதலியன கிடையாது. இருந்தாலும் பாரத நாட்டுக்கு உலக நாடுகளில் தனி கௌரவத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் நேரு. இதற்குக் காரணம், அந்தரங்க சுத்தமாக உலகில் அமைதி நிலவ வேண்டும் என்று பாரத தேசத்தின் சார்பில் நம் பிரதமர் பாடுபட்டு வந்ததேயாகும். இதன் பயனாக உலக நாடுகளின் நட்புரிமை நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் சென்ற யுத்தத்தில் தோளோடு தோள் சேர்ந்து நின்ற அமெரிக்காவும் ருஷ்யாவும் இன்று ஒன்றைப் பார்த்து ஒன்று 'உர்' என்று உறுமிக் கொண்டு நிற்கின்றன. ருஷ்யாவின் கம்யூனிஸ முறை அமெரிக்காவுக்குப் பொறுக்க முடியவில்லை. ஆனாலோ, நம் பிரதமர் நேரு எந்த நாடு எந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தாலும், ஒன்றுக்கொன்று அன்யோன்யமாக வாழலாம் என்று சொல்லுகிறார். இது எப்படிச் சாத்தியம் என்று மேல் நாட்டு வல்லரசுகள் சந்தேகிக்கின்றன. ஆனால் பாண்டுங்கில் நடந்த மகாநாடு இதற்கு வழி காட்டியிருக்கிறது. மேல்நாடுகளில் குமைந்து வரும் பூசல்கள் எல்லாம் நேருஜியின் ருஷிய விஜயத்தின் பயனாக ஒழிந்து, உலக சமாதானத்துக்கு வேண்டிய மனப்பான்மை ஏற்பட்டு நேருஜியின் யாத்திரை வெற்றியடைவதாக!

ஜெர்மனி பிரச்னை

'எந்தக் கட்சியிலும் சேராமல் சுகமாகவும் யோக்யமாகவும் இருங்கள்' என்று ருஷிய ஸோவியத்தார், ஆஸ்திரியாவுக்குச் சொல்லி விடுதலை தந்து விட்டார்கள். இந்த நிகழ்ச்சியினால் ஜெர்மனி விஷயத்தில் எந்த விதமான நிலை, மாறுதலும் ஏற்படக் கூடாது என்பது மேற்கு அரசுகளின் தீர்மானம். ஜெர்மனி இப்போது இரண்டாகப் பிரிந்திருக்கிறது. அப்படி இருந்தாலே தற்போது க்ஷேமம் என்பது அவர்கள் அபிப்பிராயம். மேற்கு ஜெர்மனிக்கு ஆயுத உரிமை ஒருவிதமாகக் கொடுத்து, மேற்கு அரசுகளின் படைகளோடு ஒன்றுபட்டு அவர்கள் கட்சியில் சேர்ந்து 'சுதந்திரம்' அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று சொல்லி ஒப்பந்தம் முடித்திருக்கிறார்கள். இதன்படி ஜெர்மனியின் ஆள் பலம் மேற்கு அரசுகளுக்குக் கூடுதலாயிற்று. ஒப்பந்தத்தைத் தீர்மானமாக மேற்கு ஜெர்மனி அரசாங்கம் ஒப்புக் கொண்டு விட்டது. இதைப் பற்றி மேற்கு அரசுகள் பெரு மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

இது எங்கேயாவது கெட்டுப் போகுமோ என்பது மேற்கு அரசுகளின் பெரும் பயம். ஜெர்மனி இரு பகுதிகளிலும் ஒன்றாகச் சேர்ந்து ஆஸ்திரியாவைப் போல் தனித்து நின்று சுதந்திரம் அடைந்து விடலாம். எந்தக் கட்சிகளிலும் சேராமல் தடஸ்தமாக நிற்கலாம். தங்களுக்கும் ஆபத்து இல்லை, பிறருக்கும் அவர்களால் கஷ்டமில்லை என்று ஜெர்மனி நினைத்து விட்டால், தங்கள் ஆள் பலம் குறைந்து விடுமே என்பது மேற்கு அரசுகளின் கவலை. "ஆஸ்திரியாவின் அபாயம் தீரவில்லை. நீங்கள் உறுதியாக எங்களோடே இருப்பதுதான் நலம். ஆஸ்திரியாவைக் கண்டு ஏமாந்து போக வேண்டாம்" என்று மேற்கு ஜெர்மனிக்கு மேற்கு அரசுகள் சொல்லி வருகிறார்கள்.

'தடஸ்த மண்டலம் பெருகினால் உலகுக்கு க்ஷேமம்' என்பது ஒரு கொள்கை. 'ருஷியாவுக்கு விரோதிகளாக நிற்பவர்களுடைய பலம் பெருகினால் உலகுக்கு க்ஷேமம்' என்பது மற்றொரு கொள்கை. இரு பட்சத்திலும் உலக க்ஷேமத்தையே கோருகிறார்கள். ஆனால் உலகத்தின் கவலையோ தீர்ந்தபாடில்லை!

"ஆஸ்திரியாவைப் பின்பற்ற வேண்டாம்" என்பது ஜெர்மனியில் தற்போது ஒரு பிரசாரம். "ராணுவத்தால் நமக்கு ஒரு லாபமும் இல்லை. ராணுவ பலத்தின் அனுபவத்தை நாம் பார்த்தாகிவிட்டது. இனிமேல் அது நமக்கு வேண்டாம், கட்சிகள் போட்டுக் கொள்வோர் போட்டுக் கொண்டிருக்கட்டும். நாம் சுகமாக, தனியாக, சுதந்திரமாக இருக்கலாம்" என்பது மற்றொரு பிரசாரம். இந்த இரண்டில் முடிவாக எது வெற்றி பெறுமோ தெரியவில்லை. தற்போது மேற்கு அரசுகளுடன் சிநேகமாக இருக்கலாம் என்கிற கட்சித் தலைவரே மேற்கு ஜெர்மனியில் பெரும்பாலோர் சம்மதி பெற்றுத் தலைவராக இருந்து வருகிறார். ஆனால் அவருக்கு எதிர்க்கட்சியும் இருந்தே வருகிறது.

உலக சமாதான நிலைக்கு ஜெர்மனி பிரச்னை மிகவும் முக்கியமான விஷயம். வல்லரசுகளின் இரண்டு தலைவலிகளுக்குள் இது ஒரு பெரும் தலைவலி. மற்றொன்று ஆலாகல குண்டுகளை என்னசெய்வது என்பது. ஜெர்மனியை யுத்தம் செய்து அழித்து விட்டும் அந்தத் தலைவலி தீரவில்லை. அணுகுண்டுகளை மிகக் கஷ்டப்பட்டும் ரகசியமாகவும் செய்தார்கள். அதனால் கவலையே தவிர லாபம் இல்லை. ஆண்டவனுடைய விநோத விளையாட்டுகளை யாரே அறிவார்!

உலக இலக்கியம்

"வடிவத்தின் நேர்த்தி, எண்ணத்தின் விரிவு, உணர்ச்சியின் மேம்பாடு, அறத்தின் பரிவு ஆகியவற்றில் திருக்குறளோடு ஒப்பிடக் கூடத் தகுதி வாய்ந்த நூல்கள் உலகிலேயே மிகச் சிலவே."

— வ. வே. சு. ஐயர்.

என்ன சேதி

யூகோஸ்லாவியாவில் ருஷ்யத் தலைவர்கள்

வல்லரசுகளின் கட்சிப் போட்டா போட்டியில் சிக்கிக் கொள்ளாமல் நடு நிலைமை வகிக்கும் ஒரு சில நாடுகளில் இந்தியாவைப் போல் யூகோஸ்லாவியாவும் ஒன்று.

இரு பக்கத்திலும் பலமாக இழுக்கப் பட்டபோதிலும் மார்ஷல் டிட்டோவின் தலைமையில் யூகோ நாடு நடுநிலைமைக் கொள்கையைக் கைவிடவில்லை. சென்ற சில வருஷங்களாக யூகோஸ்லாவியாவை வெறுத்து வந்த ருஷ்ய சர்க்கார்த் தலைவர்கள் இப்போது அதன் நட்பை நாடி அந்த நாட்டுக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். ஏற்கனவே ஆசியாவில் இந்தியாவும் இந்தியாவின் வழியைப் பின்பற்றிய பர்மா, இந்தோனீஷியா முதலிய நாடுகளும் நடுநிலைமைக் கொள்கையை அனுஷ்டிப்பதன் மூலம் அமைதி தத்துவத்துக்குப் பலம் ஏற்பட்டிருக்கிறது. அது போலவே யூகோஸ்லாவியாவைப் பின்பற்றி ஐரோப்பாவில் உள்ள நாடுகளும் வல்லரசுகளின் போட்டியில் சிக்காமல் நடு நிலைமை வகிக்குமாயின், ஐரோப்பாவில் அரசியல் கொந்தளிப்புகளும் நெருக்கடிகளும் தீருவதற்கு வழி உண்டாகும்.

விமான விபத்துக் கமிட்டியின் தீர்ப்பு

சீனப் பிரதமர் இந்தோனீஷியா செல்ல விருந்த இந்திய விமானத்தை நாசப்படுத்திய சூழ்ச்சியைப் பற்றி விசாரணைக் கமிட்டியார் தீர்மானம் கொடுத்து விட்டார்கள். தீர்மானத்தை யாரும் ஆட்சேபனை செய்யவில்லை. செய்ய இடமுமில்லை. ஹாங்காங்கில் விமானம் தங்கிய போது இந்த மோசம் நடந்திருக்கிறது என்பது வியக்தம். சீன விரோதிகள் செய்த விஷமம் என்பதும் வியக்தம். படுகொலைக்கார வஞ்சகர்கள் என்பதும் வியக்தம். இதனால் சியாங்காய் ஷேக் கட்சியின் மதிப்பு உயரவில்லை.

திருச்சியில் அருணகிரி விழா

திருப்புகழில் உள்ள பக்தி ரஸத்தையும் தமிழ்ச் சுவையையும் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இசைக் கலைக்கு ஏற்ற படி அமைந்துள்ள அருமையான சந்தம் திருப்புகழின் தனிச் சிறப்பாகும். தாள இயலின் நுணுக்கங்களுக் கெல்லாம் சிறந்த பொக்கிஷமாக விளங்குவது இந்த நூலே யாகும். திருப்புகழைப் பாடிய வாய் தேனூறும். கேட்போர் இதயம் பக்திப் பெருக்கால் பரவசமடையும். அத்தகைய சக்தி வாய்ந்த பக்திச் சுவையுடைய திருப்புகழைத் தந்த ஸ்ரீ அருணகிரிநாதரின் திருநாளைத் திருச்சித் தில்லை நகரில் இசை விழாவாகவே கொண்டாடுகிறார்கள்.

ஜூன் மாதம் 4ம் தேதி 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்கள் தலைமையில் விழா நடைபெறும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தலைவர் திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை எம். எல். ஸி. அவர்கள் விழாவை ஆரம்பித்து வைக்கிறார்கள்.

திருவாவடுதுறை திரு இராஜரத்தினம் பிள்ளை உள்ளிட்ட பல இசைக் கலைஞர்கள் இசை விழாவில் கலந்து கொள்கிறார்கள்.

குறளாசிரியர் வகுக்கும் குடியரசு

குடியரசு என்றால் மக்களாகச் சேர்ந்து ஒரு அபிப்பிராயம் கொண்டு அரசியலை வகுக்கிறகாரியம். நிர்வாகம் அதை ஒட்டிய நிர்வாகம். ஆகவே மக்களை ஒரு அபிப்பிராயத்துக்குக் கொண்டுவர வேண்டும். தற்போது அரசியல் பிரமுகர்கள் எல்லாரும் (ஏன் இரண்டாயிர வருஷமாகவே) சொல் வன்மையினாலே மக்களுடைய அபிப்பிராயத்தை ஒன்றுபடுத்தி வந்திருக்கிறார்கள். குறளாசிரியர் காலத்திலும் சொல்வன்மையின் ஆதிக்கம் அப்படி இருந்திருக்கிறது. வேறு எந்த சக்தியோடும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாத சக்தி, சொல் வன்மை என்பது குறளாசிரியரது அனுபவம். அவர் சொன்னார்:

நாநலம் என்னும் நலனுடைமை: இந்நலத்து
யாநலத்(து) உள்ளதூஉம் அன்று

[நாநலம் என்னும் நலனுடைமை: சொல்வன்மை என்னும் சக்தியைக் கொண்டிருத்தல்; இந்நிலத்து: இந்தப் பரந்த உலகத்தில் காணுகிற; யாநலத்து உள்ளதூஉம் அன்று: எந்த சக்தியோடும் சேர்த்துச் சொல்லக் கூடிய சக்தி அன்று.]

தமிழ் நாட்டில் பழைய காலத்தில் பேசுகிறது உண்டா? பேச்சில் வன்மை உண்டா? என்று பலர் கேட்கிறார்கள். ஏதோ பேச்செல்லாம் கப்பலேறி இங்கிலீஷோடு இங்கிலீஷாக வந்ததாகத்தான் எண்ணம்!

—டி. கே. சி.

திருவள்ளுவர் திருவிழா

—கொழும்பு, மே 28உ

தமிழ் மறைக் கழக ஆதரவில் மூன்றாவது திருக்குறள் மகாநாடு இவ்வருடம் இலங்கையின் புராதனத் தலைநகரான அனுராதபுரியில், அனுராதபுரம் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில், அடுத்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களிலும் நடைபெறுகின்றது. இம் மகாநாட்டைச் சிறந்த தமிழ் அறிஞரும் தபால் தந்தி இலாகா அமைச்சருமான ஸ்ரீ எஸ். நடேசன் ஆரம்பித்து வைக்கிறார். இந்தியாவிலிருந்து சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு மா. பொ. சிவஞான கிராமணியார், மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், வித்துவான் தியாகராஜ தேசிகர் முதலிய அறிஞர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து மேற்படி விழாவில் சொற்பொழிவாற்றுகிறார்கள்.

சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரி இலட்சிய ஜயந்தியில் பல தமிழ் அறிஞர்களும், பேராசிரியர்களும் இலக்கிய மணம் கமழும் சொற்பொழிவுகளாற்றி, யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்களைப் பரவசத்தில் ஆழ்த்தினார்கள். சென்னை தத்துவப் பேராசிரியர் டாக்டர் மகாதேவன் அவர்கள் பேசிய பொழுது ஆரியர், திராவிடர் என்ற சொற்கள் இரு தனி இனங்களைக் குறிப்பதாகத் தவறாக எண்ணிக் கொண்டு விபரீதமான சர்ச்சைகள் நடப்பதை எடுத்துக் காட்டி இச்சொற்கள் இரு பகுதிகளைக் குறிக்குமே தவிர இனங்களைக் குறிக்காதென்றும் 'ஆரிய' என்ற சொல் வடமொழி நூல்களில் பெரியாரைக் குறிக்கும் சொல்லாகவே உபயோகிக்கப்பட்டு வந்துள்ளதென்றும், வடமொழி கிரந்தங்கள் பலவற்றை இயற்றி அகில உலகப் புகழ் பெற்ற ஆதி சங்கரர் திராவிட நாட்டில் பிறந்தவரென்றும் அழகாகப் பேசினார். சங்க காலத் தமிழ் மக்களின் சிறப்பான வாழ்க்கையையும் சமய நெறியையும் பண்பாட்டையும் பற்றிப் பேராசிரியர் ஸ்ரீ டி. பி. மீனாட்சி சுந்திரனார் அருமையான சொற்பொழி வாற்றினார். மந்திரி ஸ்ரீ நடேசன் திருமறை கண்ட தமிழ்நாட்டில் நாஸ்திகம் ஒருபோதும் நிலைக்க மாட்டாதென்றார்.

இலங்கையிலுள்ள தமிழ் எழுத்தாளர்களைச் சங்கிலியில் பிணைக்க ஏற்கெனவே பலமுறை முயற்சி செய்யப்பட்டுப் பயனில்லாமற் போயிற்று. இப்பொழுது தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டித கா. பொ. இரத்தினம், 'சுதந்திரன்' ஆசிரியர் ஸ்ரீ சிவநாயகம் ஆகிய சிலர் மீண்டும் எழுத்தாளர் சங்கத்தை ஸ்தாபிக்க முயற்சி செய்து வருகிறார்கள்.

இதற்கிடையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் இலக்கிய நண்பர்கள் கொழும்பில் கூடி விருந்து வைத்து அளவளாவினார்கள். அதன் பிறகு நான்கைந்து தடவை இவர்கள் கூட்டம் நடத்தியிருக்கின்றனர். இப்பொழுது இலக்கிய நண்பர்கள் சங்கத்தின் 12வது ஆண்டு விழாவை நடத்தி அதையே தமிழ் எழுத்தாளர் சங்கமாக்க வேண்டுமென்றும் தீவிரமாக முயற்சி நடந்து வருகிறது.

—ரஜனி

ஹைதராபாத் ஸ்டேட் பாங்க்

அங்கத்தினர்கள் பொறுப்பு வரம்புக்குட்பட்டதாக ஹைதராபாத் ஸ்டேட் பாங்க் சட்டப்படி நிறுவப்பட்டுள்ளது

○●○

செலுத்தப்பட்ட மூலதனம்	... O. S. ரூ.	75,00,000
ரிசர்வ் நிதி	... O. S. ரூ.	76,00,000
டெபாசிட்டுகள் 30-9-54ல்	... O. S. ரூ.	16,48,35,000

ஹைதராபாத் ஸ்டேட்டிலுள்ள 49 ஆபீஸ்கள் மூலமாகவும் மற்றும் பம்பாய், சென்னை முதலிய இடங்களில் உள்ள ஆபீஸ்களின் மூலமாகவும் பரிபூரண பாங்கிங் சேவை அளிக்கிறது

தலைமை ஆபீஸ்: ஹைதராபாத் (டெக்கான்)


சென்னை ஆபீஸ்: 41, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1

○●○

- எங்கள் மூன்று வருஷ ரொக்கப் பத்திரங்கள் ரூ. 100/-, 500/-, 1,000/-, 5,000/- மதிப்புக்குக் கிடைக்கும். (ரூ. 100/- மதிப்புள்ள பத்திரத்தின் விலை ரூ. 90/8/-) முதலீடு செய்த தொகைக்கு வருஷம் ஒன்றுக்கு 3½% நல்ல வருமானம் அளிக்கிறது. யாவருக்கும் மிக பத்திரமான லாபகர முதலீடு.
- எமது சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் மாதா மாதம் ரூ. 5/-ம் அல்லது அதைப் போல் பன்மடங்குள்ள தொகைகளை செலுத்துவதின் மூலம் ஒரு திட்டமான சேமிப்பு நிதியைப் பெற வசதியுண்டு.
- சகலவிதமான வெளிநாட்டு வியாபார அலுவல்களையும் ஏற்று நடத்தப்படும்.
- எமது இதர சேவைகளைப் பற்றியும் டெபாசிட்டுகளுக்கு சமீபத்தில் உயர்த்தப்பட்ட வட்டி விகிதங்களைப் பற்றியும் எமது ஆபீஸ்களின் மூலம் அறியலாம்.


கே. பி. ஆர். மேனன், மானேஜிங் டைரக்டர்

பொருளற்ற பூசல்களை நிறுத்தப் போகிருர்; பூமகள் வாழ்த்துகிருள்!




நேருஜி ஜூன் மாதம் 5-ந் தேதி ருஷ்யாவுக்குச் செல்கிருர்.

நமது பறக்கும் தட்டு!




ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமேனன் அமெரிக்காவுக்குச் செல்கிருர்.

பறவைகள் பயந்து பறந்தோடுகின்றன !



"அமெரிக்காவின் சமாதானப் பிரார்த்தனை நாள் மே மாதம் 30-ம் தேதி"—ஐஸன்ஹோவர்.



பிரபல திருமணம்

வலையபட்டி ஸ்ரீ க. சாம. அ. பெரி. பெரிய கருப்பன் செட்டியார் பேத்தியும், ஸ்ரீ அன்னமலை செட்டியார் புதல்வியுமான செல்வி பாப்பாயிக்கும், செல்வன் மெய்யப்பனுக்கும் 25-5-55ல் வலையப்பட்டியில் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. பந்துக்களும் அன்பர்களும் ஏராளமாக வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர். சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா, ஸி. சுப்பிரமணியம், எம். பக்தவத்சலம், ஜே. சிவஷண்முகம் பிள்ளை, டாக்டர் அழகப்பச் செட்டியார், ராஜா சர் முத்தையா செட்டியார், சென்னை மேயர் எம். ஏ. சிதம்பரம் ஆகிய பல பிரமுகர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்தன.

சென்னை ஹைகோர்ட் நீதிபதி கனம் பி. வி. பாலகிருஷ்ண ஐயர், I. C. S. பின்வருமாறு எழுதுகிறார் :-

"ஜயா ஹாரஸ்கோப் எக்ஸ்சேஞ்ஜ் எப்படி வேலை செய்கிறது என்று அறிய ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதை நடத்தும் நபர் நல்ல தனவந்தர். ஹாரஸ்கோப் எக்ஸ்சேஞ்சைப் பிழைப்புக்காக அவர் நடத்துவது இல்லை. அந்த ஸ்தாபனம் மிகவும் உபயோகமான ஒரு சேவையைச் செய்து வருகிறது."

காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் இந்த எக்ஸ்சேஞ்சுக்குத் தமது ஆசிகளை வழங்கி இருக்கிறார்கள்.

தென் இந்திய ஸ்மார்த்த, வைஷ்ணவ, மாத்வ பெற்றோர்கள் கலியாண வயது வந்த தங்கள் பெண் அல்லது பிள்ளை ஜாதகங்களை முழு விவரங்களுடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள். சொற்ப செலவில் உங்களுக்குத் தகுந்த பெண் அல்லது பிள்ளையின் ஜாதகத்தை அனுப்பி வைக்கப்படும்.

●

JAYA HOROSCOPE EXCHANGE,
POST BOX NO. 1834, MADRAS-1

கலைக் கூட மலர்

விற்பனைக்குத் தயார்

எமது உழைப்பினில் உருவாக்கிய மணமிகு வண்ண மலர் மாலையைத் தமிழன்னையின் தலைமகனார் — திருவள்ளுவர் திருமுன் படைக்கின்றோம்.

புலவர் பலரும், அறிஞர் பலரும் தீட்டிய நற்றமிழ் கட்டுரைகளும், எமது கலைக்கூடத்திலுள்ள ஓவியங்களும் உள்ள கலை மணத்துடன் தமிழ் மணமும் வீசும் மலர்.

மலர் அளவு 10×7½ பக்கங்கள் 220

ஆறு வண்ண முகப்பு, ஏழு வண்ண பின் அட்டை, எட்டு 3 வண்ண ஓவியங்கள்

மற்றும் கட்டபொம்மன், தமிழ்ப் பெரியார்கள், திருக்குறள், புறநானூறு ஓவியங்கள் 50-க்கு மேல் உள்ளன.

மலர் முழுதும் நல்ல ஆர்ட் காகிதத்தில் அச்சாகியுள்ளது.

தனி மலர் விலை ரூ. 3
தபால் கட்டணம் 0-14-0

10 மலர்களுக்கு மேல் வாங்குவோர்க்கு தக்க கழிவு உண்டு. ஏஜண்டுகள் தேவை.

பாலு பிரதர்ஸ் ஆர்ட் காலரி,
2, தாயார் சாகிபு தெரு
மவுண்ட் ரோடு :: சென்னை - 2



"ராஜா" விசேஷ வளையல்கள்

அல்லாய் உலோகத்தில் கெட்டித் தங்கத் தகட்டால் மூடப்பட்டது. 10 வருஷ உத்தரவாதம்

விசேஷ தயாரிப்பு: ½ பவுனில் ஒரு ஜதை வளையல்கள் ரூ. 19/- ¼ பவுனில் ஒரு ஜதை ரூ. 12/- (கூலி உள்பட) 5 வருஷம் உபயோகித்த பின்பும் பாதி விலையில் திருப்பி எடுத்துக் கொள்ளப்படும். பட்டியலிலேயே எமது உத்தரவாதம் தரப்படும்.

சாதாரண வளையல்கள் : 2·2" சைஸ் ஜதை ரூ. 7/2/- 2·1" சைஸ் ஜதை ரூ. 6/8/- 2·0" சைஸ் ஜதை ரூ. 6/-

பாகிங், தபால் செலவு ரூ. 1/2/- தனி. கேட்லாக் வேண்டுவோருக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படும்

ராஜா கோல்டு கவரிங் கம்பெனி
தலைமை ஆபீஸ் : மசூலிப்பட்டினம்
விற்பனை கிளை : 430, தங்கசாலை, சௌகார்பேட்டை, சென்னை-1



71. சண்டைக்கு இழுக்கிறான்

சீதையிடம் விடை பெற்றுக் கொண்டு போன ஹனுமான் வடக்கே சென்று மதில் மேல் உட்கார்ந்து யோசித்தான்.

'சீதைக்குத் தைரியம் ஊட்டவும், ராவணனுக்கும் அவன் அரக்கர் கூட்டத்துக்கும் சரியான பயம் உண்டாக்கி அவளை எந்த விதத்திலும் துன்பப் படுத்தாமலிருக்க என்ன செய்யலாம்? சும்மா நான் திரும்பி விட்டால் ராவணனுக்கு நான் வந்தது கூடத் தெரியாது. அவன் பாட்டுக்கு முன்போல் கர்வம் கொண்டவனாகவே இருப்பான். நான் ராமனுக்குச் செய்தியைச் சொல்லிச் சேனையுடன் லங்கைக்குத் திரும்பி வரும் வரையில் சீதை க்ஷேமமாக இருக்க வேண்டுமல்லவா? சீதையை ராவணன் துன்புறுத்தாமலிருப்பதற்காக அவன் உள்ளத்தில் போதிய பயத்தை உண்டாக்க வேண்டும். அதைச் செய்து விட்டுத்தான் நான் திரும்ப வேண்டும். அரக்கர்களைச் சமாதான முறையில் நல் வழியில் நிற்கச் செய்ய முடியாது. இந்த மூர்க்கனிடம் அளவற்ற செல்வம் இருக்கிறது. இவர்களுக்குள் பேதம் உண்டாக்குவதும் ஆகாத காரியம். சாம தான பேதம் இவை பயனில்லை. மேல் நடக்க வேண்டிய காரியம் கெட்டுப் போகாத அளவில் இவர்கள் உள்ளத்தில் போதிய பயத்தை உண்டாக்கி விட்டு நான் போக வேண்டும். அப்படிச் செய்தால் சீதையின் க்ஷேமம் காக்கப்படும். இந்தக் காரியத்தையும் முடித்து விட்டு, வேகமாகத் திரும்புவேன்' என்று நிச்சயித்தான்.

உடனே பெரிய வடிவம் கொண்டு அந்த அழகிய அந்தப்புரப் பூந்தோட்டத்தை நாசம் செய்ய ஆரம்பித்தான். மரங்களைப் படபட வென்று வீழ்த்தித் தள்ளி, கொடிப் பந்தல்களை நாசம் செய்து, வாவிகளையும் செய்குன்றுகளையும் அலங்காரங்களையும் எல்லாவற்றையும் கெடுத்துப் பாழாக்கினான். மிக அழகுடன் விளங்கிய அசோக வனம் தன் அழகை முற்றிலும் இழந்தது. அங்கிருந்த மான்களும் பறவைகளும் பயந்து கூவிக் கொண்டு வெளியேறி விட்டன. ராக்ஷசிகள், தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எழுந்து இதென்ன வென்று காரணம் தெரியாமல் திகைத்தார்கள்.

ஹனுமான் நந்தவனத்தை அழித்து விட்டு மதில் சுவரின் மேல் உட்கார்ந்தான். ராக்ஷசிகள் வானரத்தைப்

பார்த்தார்கள். ஹனுமான் வர வரத் தன் உடலைப் பெருக்கிக் கொண்டு பயங்கரமாக வளர்ந்து அவர்கள் இதயம் நடுங்கச் செய்தான். ராவணனிடம் சொல்லச் சிலர் ஓடினார்கள். சிலர் சீதையினிடம் போய், "இந்தப் பெருங் குரங்கு எப்படி வந்தது? இது உனக்குத் தெரிந்தே இருக்கவேண்டும். உன்னிடம் இது ஏதாவது பேசிற்றா? உள்ளபடி சொல், பயப்படாதே!" என்றார்கள்.

சீதை "இந்த அரக்கர் உலகத்தில் எது வெல்லாம் நடக்குமோ எனக்கு என்ன தெரியும்? மாயம் கற்ற ராக்ஷசர்களைப் பற்றி நான் ஒன்றும் அறியேன். இந்த வானரம் உங்களில் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும். அவனைப் பற்றி உங்களுக்குத்தான் தெரியலாம்" என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டாள்.

'ஐயோ, சீதை பொய் சொல்லி விட்டாளே! இதற்கு என்ன சமாதானம்?' என்று சில பண்டிதர்கள் சமீபத்தில் தர்க்கம் செய்து கொண்டிருந்தது வாசகர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகம் வரலாம்.

இந்த விவாதத்தைப் போன்ற ஒரு பயனற்ற விவாதத்தை நான் கண்டதில்லை. "ராம காரியம் உடனே அழிந்து போக வேண்டும் என்று ஆசைப் படுகிறீர்களா? ராமாயணத்தை யெல்லாம் வேறு விதமாக நீங்கள் நடத்தப் போகிறீர்களா? இந்தக் கேள்விகளை யெல்லாம் நிறுத்துங்கள்" என்று இந்த பண்டித சிகாமணிகளுக்குச் சொல்லுவேன்.

"சீதை செய்த மற்றக் காரியங்களைச் செய்யத் துணிந்து செய்தீர்களானால், சிறைபட்டுக் கிடந்து, துக்கத்தில் கரை காணாமல் ஏங்கி நின்றீர்களானால் இத் தகைய 'பொய்'யை உங்களைக் கேட்கும் அரக்கர்களிடம் நீங்களும் சொல்லலாம். அதனால்உங்கள் வாய்மை பங்கம் அடையாது" என்று சொல்லுவேன்.

"யாம் மெய்யாக் கண்டவற்றுள்
இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

வாய்மை எனப்படுவது
யாது எனின். யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

பொய்ம்மையும் வாய்மை
யிடத்த, புரை தீர்ந்த
நன்மை பயக்கும் எனின்."

என்றார் பொய்யா மொழிப் புலவர்!


அசோக வனத்திலிருந்து பயந்து ஓடிய ராக்ஷசிகள் ராவணனிடம் நடந்ததைத் தெரிவித்தார்கள்.

"மன்னனே! ஒரு பயங்கர வடிவங் கொண்ட குரங்கு அசோக வனத்தில் வந்து உங்கள் அரண்மனைப் பெண்களுடைய நந்தவனத்தை யெல்லாம் பாழாக்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் குரங்கைப் பார்த்தால் எங்களுக்கு பயமாக இருக்கிறது. சீதையிடம் அது ஏதோ ரகசியமாகப் பேசிற்று."

இவ்வாறு ராக்ஷசிகள் சொன்னார்கள். ஆனால் தாங்கள் தூங்கிப் போனதை ராக்ஷசேசுவரனிடம் சொல்லவில்லை.

"நாங்கள் சீதையை எவ்வளவோ கேட்டுப் பார்த்தோம். 'இது யார்? இந்த வானரன் ஏன் இங்கே வந்தான்? உன்னிடம் என்ன பேசினான்?' என்று பலவாறாகக் கேட்டோம். அவள் ஒன்றும் சொல்ல மாட்டேன் என்கிறாள். நீங்கள் இந்தக் குரங்கைப் பிடித்து ஒழித்து விடவேண்டும். தகுந்த ஆட்களை அனுப்புவீர்களாக. மகா பயங்கரமான குரங்கு. அதைப் பிடிக்கும் வல்லமைகொண்ட வீரர்களை உடனே அனுப்புவீர்களாக. இந்தக் குரங்கு அழகிய வனம் முழுவதையும் ஒரே பாழாகச் செய்து விட்டது. ஆனால் இந்த சீதையிருக்கும் சிம்சுபா விருட்சத்தை மட்டிலும் தொடவில்லை. வளர்ந்து படர்ந்திருக்கும் அந்த மரம் கொஞ்சமும் சேதப்படவில்லை. இதற்குக் காரணம் இருக்க வேண்டும். மற்ற மரங்களையும் கொடிகளையும், குளங்கள், பந்தல் எல்லாவற்றையும் பாழாக்கிய இந்த வானரம் சீதை இருக்கும் இடத்தை மட்டும் விடுவானேன்? இதில் மோசம் இருக்கிறது. இது சாதாரணக் காட்டு மிருகமல்ல. உங்கள் பகைவர்களான தேவேந்திரனோ குபேரனோ அனுப்பிய வானரமாகத்தான் இருக்கவேண்டும். அல்லது அந்த ராமனுடைய வேலையாக இருக்க வேண்டும். சீதையோடு பேச இந்த வானரத்துக்கு எப்படித் தைரியம் வந்தது? இவன் ராமனுடைய தூதனாகவே இருக்க வேண்டும். உடனே வீரர்களை அனுப்பி இந்த பயங்கர வானரத்தைப் பிடிக்கச் சொல்வீர்களாக" என்றார்கள்.

தன் மனைவிகளுக்காக நிருமாணித்திருந்த மிக சௌந்தர்யமான பூங்



தோட்டம் அழிந்து போன செய்தியைக் கேட்ட ராவணன் மிகுந்த கோபங் கொண்டான். இரண்டு கண்களும் இரண்டு தீவட்டிகளைப் போல் சிவந்து அவற்றிலிருந்து சுடச்சுட எண்ணெய்த் துளிகள் கொட்டுவது போல் கண்ணீர் வடிந்தது.

உடனே தனக்குப் பக்கத்தில் 'உத்தரவென்ன?' என்று எப்போதும் மிகக் கவனமாக இருந்து கொண்டு வந்த வீரர்களை அனுப்பினான். கதாயுதங்களும் இரும்பு உலக்கைகளும் கத்திகளும் சூலங்களும் எடுத்துக் கொண்டு அவர்கள் போனார்கள்.



வெள்ளித்திரை

கணவனே கண்கண்ட தெய்வம்

ஸோமாஸ்

இந்தத் தலைப்பைப் பார்த்ததும் எத்தனையோ சகோதரிகள் தங்கள் முகத்தைச் சுளித்துக் கொள்ளுவார்கள். அதுவும் நவநாகரிகக் கருத்துக்களை நயம்படக் கூறி, மனித வாழ்க்கையில் பெண்களுக்கு இருக்கும் மகத்தான பொறுப்பையும், அவர்கள் வகிக்கவேண்டிய உன்னத ஸ்தானத்தையும் படம் பிடித்துக் காட்ட வேண்டியதிருக்க, ஒரு தமிழ்ப் படத்தின் தலைப்பை, இந்த அணுகுண்டு யுகத்தில் இப்படிப் போட்டிருக்கிறார்களே என்று வியப்பும் அடைவார்கள். ஆகவே இந்தத் தமிழ்ப் படத்தை நாராயணன் கம்பெனியார் துணிந்து புனைந்திருக்கிறார்கள் என்றே கூறலாம்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்" என்ற பாரதியின் வாக்குப்படி இப்பொழுது எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்திருக்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை, சம அந்தஸ்து வழங்கப்பட்டு வரும் காலம் இது. பழமையைத் தகர்த்தெறிந்து புதுமைப் பெண்கள் வீராங்கனைகளாக வீறுகொண்டெழுந்து, ஆண் மக்களின் சுய நல உணர்ச்சிக்கும் ஆதிக்க வெறிக்கும்



ராஜகுமாரி நளினியின் அந்தப்புரத்தில், வீர வாலிபன் விஜயன் அவளிடம் பிரியா விடை பெறுகிறான்.

சவுக்கடி கொடுக்கும் காலம் இது. விவாகரத்து உரிமையைக் கூட நம் பாரதப் பெண்கள் இப்பொழுது பெற்று விட்டார்கள்.

இத்தகைய முற்போக்குப் பாதையில் செல்லும் பெண்களுக்கு, "கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்று போதிக்க முற்படுவது மிகவும் துணிச்சலான காரியம் என்று கூறுவதில் தவறு என்ன இருக்கிறது!

கதை, பழைய கதை. பழைய மதுவைப் புதிய சட்டியில் தருவது போல ஏதாவது மாறுதல் செய்ய முயன்றிருப்பார்களோ என்ற எண்ணத்துக்கும் இடம் இல்லாமற் போய் விட்டது. ராஜா, மந்திரி கதை. அந்த ராஜாவுக்கு ஒரு பெண்; அவள் பெயர் நளினி. திரைப் படக் கதையின் பல சௌகரியங்களை ஒட்டி, நளினியின் தாயார் முன்பே (படப் பிடிப்புக்கு முன்பே!) இறந்து விட்டது நல்லதென்றே தோன்றுகிறது. இல்லையென்றால், இடைக் காலத்தில் கண் பார்வை இழந்து தவித்த மகாராஜாவுக்காக நளினி கண் கலங்கியது போதாதென்று அவள் தாயாரும் அல்லவா கண் கலங்க நேர்ந்திருக்கும்!

கண் இழந்த தந்தை தன் திருமண வைபவத்தைப் பார்க்க முடியாதே என்கிற வருத்தத்தினாலேயே நளினி தன் திருமணத்தைப் பற்றிச் சிந்தியாமல் இருந்தாள். அதிலும் ஒரு நன்மை இருக்கத்தான் செய்தது. அவள் மட்டும் தந்தையின் விருப்பம் என்ற காரணத்துக்காக எவனுக்காவது மாலையிட்டிருந்தால், விஜயனுக்கு ஒரு ராஜகுமாரியை மணந்து கொள்ளும் வாய்ப்பே கிட்டியிராது; ஒருதலைக் காதலை நம்பி அதில் வெற்றி பெறச் சேனாபதி வீரசேனன் அனாவசியமாக முயன்று திரைப்படக் கதாநாயகி நளினிக்கும், கதாநாயகன் விஜயனுக்கும் படம் முடிகிற வரையில் இடைஞ்சல் செய்து கொண்டிருந்திருக்க மாட்டான்.

விஜயனை அரண்மனை உத்தியோகத்துக்கு அனுப்ப அவன் தந்தை தீர்மானித்தார். அதன் காரணமாக விஜயன் அரண்மனைக்குப் புறப்பட்டான். நகர எல்லையில் அரண்மனைச் சேவகர்களுடனும் சேனாபதியுடனும் கைகலப்பு நேருகிறது. ராஜகுமாரி நளினியின் கண்களும் விஜயனின் கண்களும் சந்திக்கின்றன. உடனே நளினி அவன் இதயராணியாகிறாள்.

பிறகு, அரண்மனை மாடகூடங்களைக் கடந்து நளினியின் அந்தப்புரத்திலேயே சந்தித்துப் பேசும் அளவுக்குச் சந்தர்ப்பம் துணை புரிந்தது. 'மகாராஜாவின் பார்வையை மீண்டும் அளிக்க எவன் நாகலோகத்துக்குப் போய், நாக ஜோதியைக் கொண்டு வருகிறானோ அவனுக்கு அவன் விரும்பியது எதையும் தருவதாக.' அர



கண் கொடுத்தவன். அதற்கு வெகுமதியாகக் கண்மணி நளினியையே கேட்டதும் கண் கலங்கினான், காவலன். நளினியின் இதயத்தில் தனக்கு இடமில்லை என்று அறிந்ததும் சேனாபதி வீரசேனனுக்கு நிஜமாகவே கோபம் வந்து விட்டது!

சாங்கம் பறையறைந்து அறிவிக்கிறது. அந்தச் சாதனையை, நளினியின் நளினமான கரங்களைப் பற்ற, விஜயன் மேற்கொண்டான். ஆனால் அந்தப் பாழாய்ப்போன சந்தர்ப்பம் அவனுக்கு இப்பொழுது துணை செய்யவில்லை. அது சேனாபதி வீரசேனனுக்குத் துணை புரிந்து, விஜயனை அரண்மனைச் சேவகத்திலிருந்து விலக்கி, ராஜகுமாரியைக் காதலித்த குற்றத்துக்காகச் சிறைவாசத்தையும் அளித்தது. காராக்கிருக வாசத்தையும் கசையடியையும் விஜயன் காதலின் வலிவினால் தாங்குகிறான்; கடைசியில் மரண தண்டனையி லிருந்தும் தப்பி வெளியேறுகிறான். (கதாநாயகன், படம் முடியாமல் இடைகேடான முறையில் எப்படிச் சாக முடியும்!)

ராஜகுமாரி நளினியாக நடிப்பவர் ஸ்ரீமதி அஞ்சலி தேவி என்று சொன்னால் போதுமானது. அவ்வளவு நல்ல நடிப்பு. கதையில் உள்ள பல குறைபாடுகளை அவரது சுமுகமான பார்வையும், நடிப்பும், பேசும் விழிகளும் மறக்கச் செய்கின்றன. அன்புத் தந்தையுடன் ஆசையாகப் பேசும்போதும், சேனாபதி வீர சேனனின் தகாத பேச்சுக்களுக்கு வீராங்கனையாக நின்று பதில் அளித்த போதும், விஜயனின் வாள் வலியையும் தோள் வலியையும் நேருக்கு நேர் கண்டு வியந்த போதும், கடைசியில், கணவனே கண்கண்ட தெய்வம் என்னும் லட்சியத்துடன், நோயுற்ற கணவனுடன் வெளியேறிய போதும் ஸ்ரீமதி அஞ்சலி தேவியின் நடிப்பு சிறந்து விளங்குகிறது.

விஜயனாக நடிக்கும் ஜெமினி கணேசன் தம் பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். வீர வாலிபனாகத் தோன்றியதிலிருந்து, விகார ரூபமுள்ள நோயாளியாக வந்த வரையில் அவரது நடிப்பு தரம் குறையாமல் இருக்கிறது.

சிறையிலிருந்து தப்பிய விஜயன் நாக லோகத்துக்குச் செல்லும் முயற்சியை மேற்கொள்ளுகிறான். இந்தக் கதையில் ஒரு சௌகரியம். 'இந்தச் சம்பவத்தை எப்படித் திரையில் காட்டுவது, இந்தக் கஷ்டமான காரியத்தைக் கதாநாயகன் செய்து முடித்ததாகக் காட்டியாக வேண்டுமே' என்று கொஞ்சங்கூடப் பட உற்பத்தியாளரோ, திரைப்படக் கதையின் ஆசிரியரோ யோசித்துச் சிரமப்பட வேண்டியதில்லை. மந்திர தந்திரங்களின் உதவியினால் நடக்காததும்கூட உண்டா!

இந்தப் படத்தின் முக்கியமான அம்சம், அஞ்சலிதேவி குழுவினருடன் நடத்திய வர்ண விசித்திர (கேவா கலர்) நடனக் காட்சிதான். கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அது மிகவும் நன்றாய் அமைந்திருக்கிறது.

இன்னொரு விசேஷம்—இப் படத்தில், படம் பார்ப்பவர்களின் மூளையைக் குழப்பிக் கற்பனா சக்திக்கு வேலை வைத்து அனாவசியமாக அவர்கள் எதையும் ஊகித்துத் தவிக்க வைத்து விட வில்லை, பட உற்பத்தியாளர்கள்; எல்லாம் சாங்கோபாங்கமாக, திரையிலேயே காட்டப் பட்டு விடுகின்றன. அது நல்லதுதானே!

நாகஜோதியைத் திருடின குற்றத்துக்குத் தண்டனையாக நாகராணி, விஜயனைக் குரூரமாகச் சபிக்கிறாள். உடனே அவன் விகாரத் தோற்றம் கொள்கிறான். கதை முடிவில், விஜயன் சுய உருவத்தை அடைகிறான்; நளினி இழந்த காதலனை அடைகிறாள்; அரசன் இழந்த பார்வையைப் பெறுகிறான்; அத்துடன் மகளையும் மருமகனையும் மகிழ்ச்சியுடன் காண்கிறான்.

சேனாபதி வீரசேனனாக நடிக்கும் ஸ்ரீ எம்.என். நம்பியார், மிடுக்குடன் தம் பாத்திரத்துக்கு ஏற்பப் பேசி, மிக நன்றாக நடித்திருக்கிறார்.

நாகராணியாக நடிக்கும் லலிதா பரவசப் படுத்தும் மங்கையாகத் தோன்றி, படமெடுக்கும் நாகமாக மாறிச் சீறுகிறார். ஒரு குழந்தையைக் கொடுமைப் படுத்துவது, கட்டிய கணவனைப் பழி வாங்குவது, ஓரகத்தியை விரட்டி அடித்து ஓட்டுவது — முதலிய சந்தர்ப்பங்களில் அநாயாசமாக நடித்துத் திரைப் படத்தில் தமக்குத் தனியிடம் தேடிக் கொண்டு விட்ட ஸ்ரீமதி லலிதா, இந்தப் படத்திலும் அந்தத் தனிச் சிறப்பை அருமையாகக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்!

இந்தப் படத்தில் ஒலிப்பதிவு, ஒளிப் பதிவு முதலியன பிரமாதம். புராணக் கதையின் போக்கை ஒட்டி யிருந்தாலும், கதையில் விபரீதமான காட்சியோ, சம்பாஷணையோ இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ் கூறும் நல்லுலகம்

சமீபத்தில் ஸரஸகவி அப்பண்ணாச்சார் அவர்கள் கும்பகோணத்தில் வால்மீகி ராமாயண ப்ரவசனம் செய்தார். கம்ப ராமாயணத்தையும் துளஸிதாஸ் ராமாயணத்தையும் ஆங்காங்கே ஒப்பிட்டு, ஆஸ்திகர்களை ஆனந்தக் கடலில் ஆழ்த்தினார். பட்டாபிஷேக தினத்தன்று, ஆஸ்திகர்களின் சார்பில், ஓய்வு பெற்ற கணித நூல் பேராசிரியர் ஸ்ரீ கே. எஸ். பாட்டாசாரியார் அவர்களும், ஓய்வுபெற்ற ஆங்கிலப்



பேராசிரியர் ஸ்ரீ எம். ஆர். ராஜகோபால ஐயங்கார் அவர்களும், உபன்யாஸகருக்குத் தங்கப் பதக்கத்தையும், பணமுடிப்பையும் முறையே வழங்கினார்கள்.

★

கல்கத்தா அமெச்சூர் நாடக சபையின் ஆறாவது ஆண்டு விழா மே 1-ல் மகாராஷ்டிர நிவாஸ் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. அவ் விழாவில் குழந்தைகள் ராணி ஜயசீல ஆகியோரின் கிராம நடனமும், குமாரி பிரேமாவின் பரதநாட்டியம், மார்வாரி நடனங்களும் சிறப்பாக இருந்தன. பின் "ராஜ பக்தி" என்ற நாடகத்திலிருந்து திரு எஸ். அனந்தராமன் இரு காட்சிகளை, "தனிமை நடிப்பு" நடித்துக் காட்டியது சிறப்பாக இருந்ததாம். இறுதியாக ஷாஜஹான் என்ற நாடகமும் நடந்தது. இப்படித் தமிழகத்திலிருந்து வெகு தூரத்திலுள்ள தமிழர்கள் நடனம், நாடகம் முதலியவைகளில் தீவிரப் பற்றுக் கொண்டு நடத்துவது மிகவும் பாராட்ட வேண்டிய செயலாகும்.

★

ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் மகாநதிப் பள்ளத்தாக்கில் ஹிராகுட் என்ற இடத்தில் ஒரு பெரிய அணைக்கட்டு வேலை நடைபெற்று வருகிறது. இங்கு வேலையின் நிமித்தம் தமிழ் நாட்டினின்றும் அனேகர் வந்திருக்கின்றனர். இம் மாபெரும் நீர்த் தேக்க அணைக்கட்டு ஆக்க வேலை திரு எம். எஸ். திருமலை அய்யங்கார் அவர்களைத் தலைமை எஞ்சினீராகக் கொண்டு நடைபெற்று வருகிறது. திரு என். தர்மராஜன் மின்சார வட்டத் தலைவராக இருந்து வருகிறார். திரு சுந்தரராஜன் நிதி ஆலோசகராக இருந்து வருகிறார். இவர்களைத் தவிர மற்றும் பல தமிழர்கள் அங்கு கேந்திர ஸ்தானத்திலிருந்து பணியாற்றித் தமிழர்களின் பெருமையையும் செயல் திறமையையும் நிலை நாட்டி வருகிறார்கள். அத்துடன் அவர்கள் தமிழ் நாட்டுக் கலையையும் பண்பினையும் வளர்ப்பதற்கான நுண்கலைக் கழகம் நிறுவிக் கலைப் பணி புரிகிறார்கள். இப்பொழுது இக் கழகத்துக்குச் சொந்தக் கட்டடம் எழுப்ப வேறு தீவிர முயற்சிகள் எடுத்து வருகிறார்கள் என்பதை அறிந்து மகிழ்கிறோம். அவர்கள் முயற்சி வெல்வதாக !

★

புது தில்லியின் கரோல்பாக் பகுதியிலுள்ள தட்சிண பாரத் ஸமாஜின் வருஷாந்திர விழா 1—5—55 அன்று மத்திய சர்க்கார் உற்பத்தி மந்திரி ஸ்ரீ கே. ஸி. ரெட்டி தலைமையில் நடைபெற்றிருக்கிறது. ஸமாஜத்தின் கட்டடத்துக்காக ரூ. 2000 ஒதுக்கியிருப்பதாக அந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. அவ் விழாவில் வாத்ய சங்கீதம், பின்னல் கோலாட்டம், குறவன் குறத்தி நடனம், நாடகம் யாவும் நடைபெற்றன. குமாரி ஜெயந்தியின் பரத நாட்டியம் வெகு சிறப்பாக இருந்தது.

தமிழின் உயிர்

ஓதுகம் தாய்மொழிக்கு உயிரை ஒத்தநூல்
பூதல முழுதும் புகழ்ந்து போற்றுநூல்
பொய்யகம் போக்கிப் புனிதம் ஆக்குநூல்
மெய்யகம் நாட்டி மேல்வீடு காட்டுநூல்
ஒருமதம் ஒருநெறி ஒருபொருள் உண்மையை
விரிநிலம் எங்கணும் விளங்க வைத்தநூல்
அறிவினது எல்லையை அளந்து அமைந்தநூல்
தெள்ளிய தமிழ்மறை வள்ளுவர் நூலே!

— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை


காமினியா அழகு சாதனங்கள்

பட்டுப் போன்ற கூந்தலேயும், சோபை
யுள்ள வதனத்தையும், மென்மை
யான மேனியையும் அளிக்கும்
என்கிருர் :

வைஜயந்திமாலா
பரதநாட்டியமே உருவானவர்

* அழகிய ஸ்திரீகள் இயற்கையாகவே காமினியா அழகு சாதனங்களேயே விரும்புகிருர்கள். ஈடு இணையில்லாத இந்த அழகு சாதனங்களினுல் எளிதில் வசீகரம் பெறமுடியும்.

காமினியா ஹேர் ஆயில்
தில்பஹார் டாய்லட் சோப்
ஆட்டோ தில்பஹார்
காமினியா ஸ்னே



ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., BOMBAY 2.

சென்னை, மைசூர், திருவாங்கூர்–கொச்சி ராஜ்யங்களுக்கு சோல் ஏஜண்டுகள் :
ஸ்ரீ எஸ். ரெங்கராஜு நாயுடு, கோயமுத்தூர்

அம்பத்தூர் அதிசயம்



(சென்ற வாரத் தொடர்ச்சி)

சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் "பிலிம் விழா" நடந்தது. அவ்விழாவில் பல தேசச் சினிமாப் படங்கள் காண்பிக்கப் பட்டன. அதில் பெரும்பாலான மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த படம் "பைசைக்கிள் திருடன்" என்பதுதான்.

ஒரு ஏழை வேலையின்றித் தவித்துக் கொண்டிருந்தான். சைக்கிளுடன் வந்தால் ஒரு இடத்தில் வேலை கிடைக்கும் என்று அறிகிறான். தனக்கிருக்கும் சொற்ப உடைமையாகிய துணிமணிகளையும் அடகு வைத்து ஒரு சைக்கிள் பெற்று வேலை கிடைக்கும் இடத்துக்குப் போகிறான். விளம்பரத் தாள்களைச் சுவரில் ஒட்டும் வேலை கிடைக்கிறது. சைக்கிளில் விளம்பரக் காகிதங்களையும் பசையையும் எடுத்துக் கொண்டு தெருத் தெருவாய் அலைந்து ஒட்டும் வேலை கிடைத்தது. ஒரு பக்கமாகச் சைக்கிளை நிறுத்தி விட்டு, ஏணி போட்டுக் கொண்டு ஏறிச் சுவரின் உயரமான பகுதியில் விளம்பரத் தாள்களை ஒட்டிக் கொண்டிருக்கும் போது எவனோ அவனுடைய சைக்கிளைத் திருடிக் கொண்டு போய் விடுகிறான். அந்தச் சைக்கிளைத் தேடித் தேடி அலைவதையும், அவன் உள்ளத்தில் தேடும்போதெல்லாம் ஏற்படும் பல்வேறு உணர்ச்சிகளையும் சித்திரிப்பதுதான் இப்படத்தின் பிரதான அம்சமாக இருந்தது!

இது இத்தாலி நாட்டுப் படம். ஏறத்தாழ இதே நிலைமைதானே நம் நாட்டிலும் இன்று நிலவி வருகிறது! மத்தியதர வகுப்பினர் ஒருவரின் சைக்கிள் காணாமல் போய் விட்டால் வாழ்க்கையே அஸ்தமித்து விட்டாற் போல் அல்லவா அவருக்குத் தோன்றுகிறது! இப்படி வாழ்க்கையோடு பின்னிப் போய்க் கிடக்கும் சைக்கிளை வைத்துக் கொண்டு ஒரு நல்ல கதை புனைந்து விட்டார்கள். ஆனால் இந்தச் சைக்கிளை உற்பத்தி செய்யும் பெரிய இத் தொழிற்சாலையையும், இதில் செய்யப்படும் நுட்பமான வேலைகளையும் கவனித்தால் ஒரு மாபெரும் காவியமே புனையலாம் போலிருக்கிறதே என்று நினைத்துக்கொண்டிருந்தேன். அப்போது தான் அடுத்த தொழிற்கூடத்துக்குப் போகலாம் என்று நண்பர் அழைத்தார். நான் சுயநினைவுபெற்று அவருடன் நடக்கலானேன்.


நடந்துபோய்க்கொண்டிருக்கும் போதே அத் தொழிற் கூடத்தில் சிறு சிறு இரும்புக்குண்டுகளை வைத்து ஒருவர் விளையாடிக் கொண்டிருந்தார். அப்படித்தான் முதலில் பார்த்த போது தோன்றியது. ஆனால் உண்மையில் வேலைதான் செய்து கொண்டிருந்தார்.

என்ன வேலை!

அதைச் சொல்லு முன் மற்றொரு விஷயமும் இங்கே கூற வேண்டும்.

தமிழகத்தில் சைக்கிளை மிதி வண்டி என்பார்கள். சைக்கிளின் ஜீவாதாரமான தத்துவத்தை வைத்துத் தமிழன் அதற்கு எப்படியோ அவ்வளவு பொருத்தமான பெயரைச் சூட்டி விட்டான். ரயில் என்ஜின் நீராவியினால் இயங்குகிறது. சைக்


யந்திரமயம் ஜகத்!



யம்

கினில் ப
மிதிக்கிற

மிதிப்பது [illegible] றது. அந்த வேகத்தில் தன் பாரம் மட்டுமன்றி முன்னும் பின்னும் எவ்வளவு பாரம் வைத்தாலும் தள்ளிக்கொண்டு முன்னேறுகிறது. இப்படி மிதிப்பதனுல் நகரும் வண்டிக்கு எவ்வளவு பொருத்தமாக மிதிவண்டி என்று பெயர் வைத்து விட்டார்கள்! இதைச் சாதிப்பது, கால்மிதி (பெடல்) பொருத்தப்படும் பாகத்திலுள்ள சிறு சிறு இரும்புக் குண்டுகள்தான்! இதற்குப் பால் பேரிங் முறை என்று பெயர்! அப்படியே கைப்பிடியை இப்படியும் அப்படியும் அசைப்பதாலும் திருப்புவதாலும் முன் சக்கரம் திரும்புகிறது. கைப் பிடிக்கும் சக்கரத்தை இணைக்கும் சட்டங்களுக்கும் இடையிலும் சிறு இரும்புக் குண்டுகள் வட்டமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அதனுல் தான் லாகவமாக முன் சக்கரத்தைத் திருப்ப முடிகிறது! இந்த மாதிரி இரும்புக் குண்டுகளை அங்கங்கே கணக்காக, வாஸ்லேன் போன்ற ஒரு மெழுகைத் தடவிப் பொருத்துவது மிகவும் நளினமான காரியம். கைக்கு நல்ல பழக்கம் வேண்டும். ஒரு முறை ஒரு பெரிய சட்டியிலிருந்து இரும்புக் குண்டுகளை எடுக்கும் போதே அந்தந்த இடத்துக்கு எத்தனை குண்டுகள் வேண்டுமோ அத்தனை வருவது அதிசயமாக இருக்கிறது. ஆனல் எல்லாம் கைப் பழக்கம்! கடவுள், கை என்று படைத்து அதற்குள் எத்தனை சக்திகள் வைத்திருக்கிறுன் என்பது டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலைக்குப் போனல் தெரியும்!



இரண்டாவது தொழிற்சாலையில் செய்யப்படும் உறுப்புக்களில் ஒருசில அங்கு மேஜைமீதிருந்தன!


இப்படிச் சின்ன வேலைகள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன! அவைகளை யெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் சலித்து விடும்!

ஆகவே இப்பொழுது பக்கத்துத் தொழிற்கூடத்துக்குப் போவோம். இந்த டி. ஐ. தொழிற்சாலைக்கு வேண்டிய மிக மிக நுட்பமான, கணக்காக அமைக்க வேண்டிய யந்திர உறுப்புக்களைச் செய்து தரும் யந்திர சாலையாகும் இது. இந்தத் தொழிற்சாலையில் பல உறுப்புக்கள் செய்கிறுர்கள். அவற்றில் ஒரு சிலவற்றை அங்கு ஒரு மேஜையில் வைத்திருக்தார்கள். அதைப் பார்த்தால் ஓரளவு இங்கு என்ன என்ன செய்கிறுர்கள் என்பதும் அந்த அந்த உறுப்பின் படிப்படியான வளர்ச்சியும் புரிய வரும்.

சைக்கிள் சங்கிலியை மாட்டும், பெடல் பொருத்தப்பட்டிருக்கும் பல் சக்கரத்தைப் பார்த்திருப்பீர்கள். அது முதலில் சாதாரண தோசைக்கல் மாதிரி தான் இருக்கிறது. பிறகு ஒரு யந்திரத்தில் கொடுக்கப்பட்டதும் அதன் மையத்தில் ஒரு சிறு வட்டமான துவாரம் விழுகிறது. அடுத்த யந்திரத்தில் மையத் தொனேயில் பற்கள் வரும்படி வெட்டப் படுகிறது. இப்படிப் பல பெரிய பெரிய யந்திரங்களுக்குள் எல்லாம் புகுந்து கடைசியில் 48 பற்கள் கொண்ட சக்கரமாக வெளிப் படுகிறது.


பற்களை வெட்டும் யந்திரம் எத்தனை நேரத்தில் ஒரு சக்கரத்தை வெட்டி முடிக்கும் என்று விசாரித்தேன். "பத்து விநாடிகளுள் 48 பற்களை வெட்டித் தள்ளிவிடும்!" என்ருர் நண்பர். என்ன துரிதம்! என்ன துரிதம்!

சைக்கிள் சக்கரங்களில் குறுக்கே சன்னமான கம்பிகள் செல்வதைப் பார்த்திருப்பீர்கள். இதற்கு 'ஸ்போக்ஸ்' என்று சொல்லுகிறுர்கள். இந்த ஊதுவத்தி மாதிரியிருக்கும் 'ஸ்போக்ஸ்' கம்பியைச் செய்யும் அதிசய யந்திரத்தைப் பார்த்தீர்களானல் பிரமித்துப் போய்விடுவீர்கள். யந்திரத்தில் சுருளாகக் கம்பி ஓர் இடத்தில் வைக்கப்பட்டிருக்கும். அது அந்த யந்திரத்தின் ஒரு சிறு துவாரம் வழியாக உள்ளே நுழைந்தவுடன், அந்த ஸ்போக்ஸின் நீளம் ஒரு அடி என்றல் அந்த அளவுக்கு வெட்டி, பக்கத்தில் ஒரு அரை அங்குல தூரத்துக்குத் தள்ளி விடுகிறது. அங்கு அந்த யந்திரம் எப்படியோ ஒரு இமைப்பொழுதில் அக்கம்பியின் மேல் பக்கம் தட்டி உருண்டையான தலை செய்து கொடுத்து விடுகிறது. இப்படித் தலை பெற்ற கம்பி ஒரு அங்குலம் தள்ளப்படுகிறது, யந்திரத்தின் விசையினல். அங்கு கம்பியின் மற்ருெரு நுனியில் மறை போடப் படுகிறது. இப்படி அந்த யந்திரத்துக்குள் 'ஸ்போக்' சர்வ அங்கங்களையும் பெற்று வெளிப்படுகிறது. யந்திர அறிவுதான் எப்படி யெல்லாம் வளர்ந்திருக்கிறது!



என்ஜினீர் ஸ்ரீ டி. விசுவநாதன்

இப்படித்தான் பித்தளை ஆணிகள் (ரிப்பீன்) செய்யும் யந்திரமும்! நாள் எல்லாம் பார்க்கலாம்!



'ஸ்போக்ஸ்' செய்யும் யந்திரமும், சைக்கிள் இணைக்கும் யந்திரகூடத்தில் ஒரு காட்சியும்.

இந்த இரண்டாவது தொழிற்சாலையை மைசூர் ராஜப்பிரமுக் ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் சென்ற ஆண்டு ஜனவரி 29ம் தேதி திறந்து வைத்தார். இந்த வைபவத்தன்று நமது சென்னைக் கவர்னர் ஸ்ரீ பிரகாசா, அத் தொழிற்சாலையில் செய்யப்பட்ட சைக்கிளில் சவாரி செய்து எல்லோரையும் அதிசயத்திலும் ஆனந்தத்திலும் ஆழ்த்தினர்.

இந்தத் தொழிற்சாலையில் அறுநூறு பேருக்கு மேல் வேலை செய்கிறார்கள். ஒரு நாளைக்கு அறுநூறு சைக்கிள்கள் உற்பத்தி செய்கிறார்கள்!

இத்தொழிற்சாலையும், அதிலுள்ள யந்திரங்களும், அந்த யந்திரங்கள் புரியும் ராக்ஷஸ வேலைகளையும் நுண்ணிய வேலைகளையும் பார்க்கும்போது மனிதர்களுக்கு வேலையே இல்லையோ என்று தோன்றும்! ஆனால் அந்த நுட்பமான யந்திரங்களை இயக்க, ஒழுங்கான முறையில் வேலை செய்யும்படி செய்ய, வேலை வாங்க மிக நுட்பமான அறிவுத் திறமையுள்ள தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். உடல் உழைப்பு மட்டுமின்றி மூளைப் பிரயோகமும் தேவைப்படும் தொழிலாக இருக்கிறது! இத் தொழிலை நமது தொழிலாளர்கள், அதிகம் படிக்காதவர்கள், வெகு சீக்கிரமாகவும் நன்றாகவும் கற்றுக் கொண்டு விட்டார்கள். அவர்கள் வேலைத் திறமையைக் கண்டு மேனாட்டு என்ஜினீர்கள் அதிசயிக்கிறார்கள்!

இத் தொழிற்சாலையை ஆரம்பிக்கு முன், சைக்கிள் தொழில் நுட்பத்தைக் கற்றுவர ஒரு என்ஜினீர் கோஷ்டியை இங்கிலாந்து ஹெர்குலஸ் சைக்கிள் கம்பெனிக்கே அனுப்பி வைத்திருந்தனர். இவர்களுக்குத் தலைவராக ஸ்ரீ விசுவநாதன் இரு முறை இங்கிலாந்துக்குச் சென்று இத்தொழிலைப் பயின்று தேர்ச்சி பெற்று வந்தார். இங்கிலாந்தில் பயிற்சி பெற்றுத் திரும்பி



மானேஜர் ஸ்ரீ என். கே. ஐயர்


இப்பொழுது இங்கு வேலை செய்பவர்கள் திருவாளர்கள் பி. ஆர். ராவ், டி. எஸ். ராவ், எம். எஸ். ராவ், ஜி. ஏ. ஒயிட், எஸ். பஞ்சாபகேசன், சி. எஸ். கண்ணன், கே. எஸ். முத்துசாமி, எஸ். பத்மநாபன் முதலியவர்கள். இவர்களும் இத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தமிழகத் தொழிலாளர்களும் பாரத நாட்டுக்கு நல்ல பெருமையைத் தேடித் தந்திருக்கிறார்கள்!

"பெருமையிலும் நல்ல பெருமை என்பதாக உண்டா!" என்று நீங்கள் எண்ணலாம். ஆனால் நான் சொல்லப் போகும் விஷயத்தைப் படித்த பிறகு நல்ல பெருமை மட்டுமல்ல 'நல்ல நல்ல' என்று எத்தனை அடை மொழிகள் போட்டாலும் தகும் என்று சொல்லுவீர்கள்.

கிரேக்க புராணங்களில் 'ஹெர்குலஸ்' என்பதாக ஒரு வீரன், சூரன், தீரன். அவன் சின்னக் குழந்தையாக இருந்தபோதே போர் ஆயுதங்களால் கொல்ல முடியா திருந்த ராக்ஷதப் பாம்புகளைத் தன் வெறும் கைகளால் பற்றி நெரித்துக் கொன்று விட்டானும். ஒரு முறை ஆல்ப்ஸ் மலையையே அலட்சியமாகத் தூக்கி விட்டானும். இப்படிப் பன்னிரண்டு அசகாய தீரச் செயல்களைப் புரிந்த வீரன்! இந்த வீரன் பெயருக்குப் பழுது வராதபடி சென்ற ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பிரிட்டிஷ் ஹெர்குலஸ் கம்பெனியார் சைக்கிள்கள் செய்து, வியாபாரம் செய்து வருகிறார்கள். ஹெர்குலஸ் சைக்கிள் என்றாலே உறுதிக்குப் பெயர் போனது என்று உலக மார்க்கெட்டில் நிலையான பெயர் பெற்று விட்டார்கள். இவர்கள் ஏதோ துணிந்து இந்தியாவில் நமது சென்னையில் டி. ஐ. சைக்கிள் பாக்டரி என்று இந்திய முதலாளிகளுடன் சேர்ந்து தொழிற்சாலையை ஆரம்பித்து விட்டார்கள்! ஆனாலும் பிரிட்டிஷ்காரர்கள் சிறந்த வியாபாரிகள்.

தங்கள் சைக்கிளுக்குக் கெட்ட பெயர் வந்து விடக் கூடாது என்ற எச்சரிக்கையோடு இதுகாறும் அம்பத்தூரில் செய்யப்படும் சைக்கிள்களுக்கு "ஹெர்குலஸ் இந்தியா" என்று போடும்படி செய்து வந்தார்கள்!

நம்மிலும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நம் நாட்டில் எவ்வளவு சிறப்பாக ஒரு பொருள் செய்தாலும், அதை ஒப்ப மாட்டார்கள். மேனாட்டினரிடமிருந்து வந்தால்தான் சிறப்பாக இருப்பதாக ஒப்புக் கொள்வார்கள். ஆனால் இவர்கள் பெரும்பாலும் வெறும் ஜம்பப் பேர்வழிகள். பொருளின் தன்மை தெரியாமலே ஜம்பப் பேச்சுப் பேசுபவர்கள். ஆனால் பொதுவாக பிரிட்டிஷ்காரர்கள் அப்படியல்ல என்பது தெரிய வந்தது.



"ஐந்து நிமிஷம் போகாதா? வீட்டுக்கு நாமும் போகோமா?"

சமீபத்தில் இக் கம்பெனியின் டைரக்டர்களுள் ஒருவரும், பிரிட்டிஷ் ட்யூப் இன்வெஸ்ட்மெண்டு கம்பெனியின் மானேஜிங் டைரக்டரும், மற்ற சுமார் ஐம்பது தொழிற் கம்பெனிகளுக்கு டைரக்டராகவும், ஆலோசகராகவும் தொடர்பு கொண்டுள்ள ஸர் ஐவான் ஸ்டெடிபோர்டு என்பவர் வந்திருந்தார். அவர் டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலையில் செய்யப்படும் சைக்கிள்களைப் பார்த்தார். நன்றாகக் கூர்ந்து பார்த்தார். ஒரு முறைக்குப் பன்முறை யோசித்துப் பார்த்தார். பிரிட்டனில் பெர்மிங்ஹாமில் செய்யும் சைக்கிள்களுக்குச் சற்றும் குறைவுபட்டிருக்கவில்லையே என்று நினைத்தார். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். இனி 'ஹெர்குலஸ் இந்தியா' என்று ஹெர்குலஸ் சைக்கிள்களிலேயே சாதி பிரிக்க வேண்டிய அவசியமில்லை என்று தீர்மானித்தார்.

இவற்றுக்கும் 'ஹெர்குலஸ்' என்று மாத்திரம் வழங்கினால் போதும் என்றார். அப்படியே பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யச் சொல்லி விட்டார். அன்று பத்திரிகை நிருபர்களிடம் பேசியபோது, இந்த விவரத்தைப் பெருமிதத்தோடு கூறினார். அதைவிட இந்தியத் தொழிலாளர்களின் தொழில் திறமையையும் அறிவையும் பெரிதும் பாராட்டினார்! தொழில் துறையில் வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டம் கிடைத்து விட்டது போலத்தானே இது!

அன்று இன்னொரு முக்கிய செய்தியும் கூறினார் ஸர் ஐவான் ஸ்டெடிபோர்டு. இப்பொழுது பிரிட்டனிலிருந்து சைக்கிளுக்குத் தேவைப்படும் எஃகுக் குழல்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இனி அம்பத்தூர் சைக்கிள் தொழிற்சாலைக்கு அருகிலேயே புது எஃகுக் குழல் தொழிற்சாலையும் நிறுவத் திட்டமிட்டிருப்பதாகக் கூறினார். அதற்கு நம் முதலாளிகளுடனும், இந்திய சர்க்காருடனும் பேச்சு வார்த்தை நடத்திவருவதாகவும் அது விரைவில் முழுப் பயனை அளிக்கும் எனத் தாம் கருதுவதாகவும் கூறினார். 'பலே! பலே! நல்ல காலம் பிறக்குது! தொழில் வளம் பெருகுது!' என்று என் மனத்துக்குள் கூறிக் கொண்டேன்!

இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு நல்ல பெயர் இத்தொழிற்சாலை எடுத்ததற்குக் காரணம் இம் மாபெரும் தொழிற்சாலையின் நிர்வாகம் திறம்பட அமைந்திருப்பதுதான். இதன் நிர்வாக அதிகாரிகளான ஸ்ரீமான் என். கே. ஐயர், ஸ்ரீ எம். எஸ். சேஷன், என்ஜினீர் ஸ்ரீ டி. விசுவநாதன் ஆகியவர்கள் நமது பாராட்டுக்கு உரியவர்கள். ஸ்ரீ என். கே. ஐயர் 1952ல் இங்கிலாந்து சென்று ஹெர்குலஸ் கம்பெனியில் எப்படியெல்லாம் வியாபாரம் பெருக வழிவகை செய்கிறார்கள், எப்படி உற்பத்திச் செலவுகளைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்பவைகளையெல்லாம் அறிந்து நம் நாட்டுச் சூழ்நிலைக்கேற்ப அவற்றை எப்படிக் கையாளலாம் என்பதையும் அறிந்து வந்திருக்கிறார். அதனாலேயே, இந்தத் தொழிற்சாலை உற்பத்தியைக் குறிப்பிட்ட சமயத்துக்கு இரண்டு ஆண்டுகள் முன்னதாகவே தொடங்கி, வேலைகளை மும்முரமாகச் செய்து வருகிறது.

இத் தொழிற் சாலையில் சைக்கிளுக்கு வேண்டிய 'டயர்' செய்யப்படுவதில்லை. அது ரப்பர் டயர் கம்பெனிகள் செய்து தருகின்றன. சைக்கிளுக்கு வேண்டிய இரும்புச் செயினும் பின் சக்கரத்தில் சைக்கிள் செயினை மாட்டும் 'பிரீவீல்' என்னும் சிறு நுட்ப யந்திரமும் செய்யப்படுவதில்லை.

முன் சக்கரத்துக்கும், பின் சக்கரத்துக்கும் மேலிருக்கும் 'மட்கார்ட்' என்னும் மண் தடுப்பு இரும்பு வளையமும் கூடிய சீக்கிரத்தில் இங்கேயே செய்யப்படும். அதற்கான இயந்திரங்கள் வந்து விட்டன என்று அறிந்து பெருமகிழ்ச்சியுடன் அங்கிருந்து திரும்பினேன்! அம்பத்தூர் அதிசயமாக விளங்கும் டி. ஐ. சைக்கிளின் அதிர்ஷ்ட சக்கரம் வெற்றிப் பாதையில் மேலும் மேலும் முன்னேறிச் செல்வதாக!

சோலைக் கிளி

ஆசிரியர் : சுதர்சன்
மொழிபெயர்ப்பு : ரா. வீ.

•

புனிதத்துக்குப் பெயர் போன காசி நகரத்திலே ஒரு பண்டிதர் வசித்து வந்தார். அவரிடம் ஒரு கிளி இருந்தது.

அந்தக் கிளிக்கென்று அவர் பிரத்தியேகமாக ஒரு கூண்டு தயார் செய்து வைத்திருந்தார். அதில்தான் அது வாசம் செய்து வந்தது; அவர் அளித்த அன்னத்தைப் புசித்து வயிறு வளர்த்து வந்தது. அந்த வீட்டில் உள்ளவர்களுடன் அவர்கள் பேசும் பாஷையிலேயே பேசி மகிழ்வித்து வந்தது.

ஒரு நாள் ஒரு சோலைக் கிளி அதன் கூண்டின் எதிரே வந்து உட்கார்ந்து கொண்டது. பிறகு கூண்டில் இருக்கும் கிளியைப் பார்த்து, "யார் அப்பா நீ! பார்ப்பதற்கு என்னைப் போலவே இருக்கிறாய்! ஆனால் என் சுபாவத்தைக் கொள்ளவில்லையே! உன் சுபாவத்துக்கும் என் சுபாவத்துக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை அல்லவா இருக்கும்போலிருக்கிறது! உன்னைக் கூண்டில் அடைத்துக் கைது செய்து வைத்திருக்கிறார்களே, ஏன்!" என்று கேட்டது.

கூண்டில் உள்ள கிளி, "நானும் உன்னைப் போன்ற ஒரு கிளிதான். என் நிறமும் உன் நிறத்தைப் போலப் பச்சையானதுதான். என் அலகும் உன் அலகைப் போல பலம் பொருந்தியதுதான். வித்தியாசம் என்ன வென்றால் நீ சோலையிலே வசிக்கிறாய். நான் மச்சு வீட்டில் வசிக்கிறேன். நான் வசிக்கும் வீடு சகலவிதமான பாதுகாப்புகளும் உள்ளது. ஆனால் நீ வசிக்கும் சோலையிலோ சகலவிதமான விபத்துக்களும் சூழ்ந்திருக்கின்றன!" என்றது.

"உன்னைச் சொல்லிப் பயன் இல்லை. உன் உடலில் சுதந்திர ரத்தம் கொஞ்சமாவது ஓடினால்தானே! உன் கண்கள் குருடாகிவிட்டன. உன் ரத்தம் செத்துவிட்டது. இல்லாவிட்டால் இந்தக் கூண்டை இவ்வளவு புகழ்வாயா! இந்தக் கூண்டு உன் உடலை மட்டும் கைது செய்யவில்லை. உன் ஆத்மாவையும் அல்லவா கைது செய்துவிட்டது! உன்னைப் போன்ற அபாக்கியசாலி இந்த உலகிலேயே இல்லை என்பதைச் சொல்லிப் போவதற்காகத்தான் நான் சோலையிலிருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன்!" என்றது சோலைக் கிளி.




"நீ சொல்வது என் புத்திக்குக் கொஞ்சமாவது எட்டினால்தானே! இருந்தாலும் சிறிது அவகாசம் கொடு! நீ சொன்னவற்றை மனத்தினால் சிந்தனை செய்து பார்க்கிறேன். நீ என்னை ஏன் பாக்கியமற்றவன் என்று எண்ணினாய்! எனக்குப் புலனாகாத என்ன துர்ப்பாக்கியத்தை என்னிடம் நீ கண்டுவிட்டாய்!" என்று கேட்டது கூண்டுக்கிளி.

"நீ குடியிருக்கும் கூண்டு இருக்கிறதே, அது உனக்குச் சொந்தமானதல்ல; அதன் வாசலும் உன் அதிகாரத்துக்கு உட்பட்டதல்ல. நீ நினைக்கும்பொழுது அதைத் திறந்துகொண்டு வெளியே போகவோ உள்ளே வரவோ முடியாது. நீ உன் வாழ்வையும் சாவையும் இன்னொருவன் கையில் ஒப்படைத்துவிட்டாய். இது துர்ப்பாக்கியம் இல்லாமல் வேறு என்னவாம்! திறந்த வெளியில் சுயேச்சையாகச் சிறகடித்துக் கொண்டு உன்னால் போக முடியுமா! உன் இஷ்டப்படி மூச்சு விடவும் தான் உனக்குச் சுதந்திரம் கிடையாதே! உனக்கு வாழ்வின் இன்பத்தைப் பற்றி என்ன தெரியும்! செத்துப் பிழைத்தால் அல்லவா வாழ்வில் உள்ள இன்பம் தெரிவதற்கு! நீ பிறர் முகம் பார்த்துப் பிழைப்பவன். உண்மையைக் கேட்கப் போனால் உனக்கு உன் இஷ்டம் என்று ஒன்றுமே கிடையாது. உன் எஜமானருக்கு எது இஷ்டமோ, அதுதான் உன் இஷ்டம். ஆகவே, உன் எஜமானனும் உன் கூண்டும்தான் உனக்கு உலகத்திலேயே மாபெரும் எதிரிகள்; பேராபத்துக்கள். நான் சொல்வது உனக்கு மிகையாகத் தோன்றலாம். ஆனால் நான் சொல்வது எழுத்துக்கு எழுத்து உண்மை!" என்றது சோலைக்கிளி.

"என் எஜமானர் என்னை எவ்வளவு பரிவுடன் பராமரிக்கிறார், தெரியுமா! ஆகா! என் எஜமானர் எனக்கு எவ்வளவு அழகான கூண்டு கட்டிக் கொடுத்திருக்கிறார்! இதை என் அதிர்ஷ்டம் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவதாம்! அவர் இவ்வளவு உபகாரம் செய்யாவிட்டால் எனக்குக் குடிக்க எவன் தண்ணீர் கொடுப்பான்! எவன் உண்ண உணவு கொடுப்பான்! காரிருளிலிருந்தும் கடும் குளிரிலிருந்தும் எவன் என்னைக் காப்பாற்றுவான்! இந்தப் பக்கத்திலே ஏராளமான பூனைகள் வாசம் செய்கின்றன. அவற்றின் வாயிலே நீண்ட கோரைப் பற்கள் இருக்கின்றன. கால்களிலே நீண்ட கூரிய நகங்கள் இருக்கின்றன. அவற்றின் இருதயத்திலே இரக்கம் என்னும் திரவ பதார்த்தமே லவலேசங்கூடக் கிடையாது. அவை என்னைக் கடித்துத் தின்று விடும். கூண்டிலிருக்கும் பொழுதே, அவை என்னைப் பார்க்கும் பார்வை......! அப்பப்பா! நினைத்தாலே நெஞ்

சம் நடுங்குகிறது; குடல் குமுறுகிறது!" என்றது கூண்டுக் கிளி.

"அட கடவுளே! உனக்கு வாழவே வழி தெரியாமல் கடவுள் செய்து விட்டாரானால் நீதான் என்ன செய்வாய், பாவம்! நீ இங்கே சிறைப்பட்டிருக்கிறாய். இந்தச் சிறையில் உன்னோடு உன் ஆத்மாவும் பிறருக்கு அடிமை செய்கிறது. இதை நீ ஏன் உணர மாட்டேன் என்கிறாய்! எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் உனக்கு உன் அடிமைத்தனம் புலனாகவே யில்லையே, ஏன்!" என்று கேட்டது சோலைக் கிளி.



"நான் ஒன்றும் சிறைப்படவில்லை. நான் நினைத்தால் இந்தக் கூண்டில் எங்கு வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் சுற்றலாம், இறக்கைகளை விரிக்கலாம், ஆடலாம், பாடலாம், கூவலாம், குலாவலாம். என்னைத் தடுக்க யாரும் கிடையாது. இந்தக் கூண்டுக்குள் என் ஆட்சிதான் நடைபெறுகிறது. அப்படியிருக்கும்பொழுது நான் என்னையே அடிமை யென்று எதற்காகச் சொல்லிக் கொள்ள வேண்டும்! என் வீடு எங்கேயாவது எனக்கே சிறைச்சாலை ஆகுமா! நீயே சொல்லு" என்றது கூண்டுக் கிளி.

"குருடனைக் குருடன் என்று சொல்லுவது தவறாகுமா! அதே போல அடிமையை அடிமை என்று சொல்லுவதும் தவறாகாது. நீ உன் எஜமானர் வார்த்தையைக் கேட்கிறாய். உன் எஜமானர் சொல்லுவதைச் சொல்கிறாய்! ஒரே ஒரு நாள் உன் எஜமானரின் வார்த்தையைக் கேட்காமல் இருந்து பார். அவர் கேட்பதற்கெல்லாம் அவர் மொழியில் பதில் சொல்லாமல் இரு. அப்பொழுது என்ன நடக்கிறது என்பது தெரியும்!" என்றது சோலைக் கிளி.

"ரொம்ப சரி, இன்று நான் யாருடைய வார்த்தைகளையும் காது கொடுத்துக் கேட்காமல் இருந்து பார்க்கிறேன். ஆனால் ஒன்று. என் மன எழுச்சிக்கு மட்டும் அடி பணிவேன். வேறு யார் என்ன சொன்னபோதிலும் கேட்க மாட்டேன். இன்று பிறர் பேசும் மொழியைக் கையாளுவதே இல்லை என்று உனக்கு உறுதிமொழி அளிக்கிறேன். என் தாய் தந்தையர் பேசிய மொழியில் அதாவது இப்பொழுது நீ என்னுடன் பேசிக்கொண்டிருக்கிறாயே, அந்த மொழியில், என் உடலுடனும் உயிருடனும் பிறந்த இன்ப மொழியில் மட்டுமே பேசுவேன். அன்னியர்களின் பாஷையை உச்சரிக்கவே மாட்டேன்! இது சத்தியம்" என்று சபதம் செய்தது கூண்டுக் கிளி.

அதற்குப் பிறகு சோலைக் கிளி மறுநாள் வருவதாக வாக்கு அளித்து விட்டுப் பறந்து சென்றது. கூண்டுக் கிளிக்கு ஓர் வியப்பாயிருந்தது. அந்த வியப்பு அதன் மனத்தில், மூலையில், கண் இமைகளில எங்குமே நிறைந்திருந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் பண்டிதரின் வயது வந்த பிள்ளை அவ்வழியே வந்தவன் கிளியோடு பேசலானான். கிளி அவன் கேள்விகளுக் கெல்லாம் பதிலே பேசவில்லை.

'நான் இவன் கேட்கும் கேள்விகளுக் கெல்லாம் பதில் சொல்லுவானேன்! நான் என்ன இவனுடைய அடிமையா அதற்கு!' என்று தன் மனத்துள் வீறாப்புடன் சொல்லிக் கொண்டது கூண்டுக் கிளி.

பண்டிதர் பிள்ளை கூரிய இரும்புக் கம்பி ஒன்றை எடுத்துக் கிளியின் கழுத்துப் பக்கத்தில் நன்றாகக் குத்தி, என்னோடு "பேசுகிறாயா, இல்லையா!" என்று கடிந்தான்.

கிளி பதில் சொல்லவில்லை. கம்பி குத்தியதால் அதன் கழுத்தில் காயம் பட்டது. அதைப் பொருட்படுத்தாமல் அது ஒரு மூலையில் போய் மௌனமாக உட்கார்ந்து கொண்டது.

பண்டிதரின் பிள்ளை மறுபடியும் அதைக் கம்பியினால் குத்தி, "பேசுகிறாயா, இல்லையா!" என்று கடிந்து கேட்டான்.

கிளி அப்பொழுதும் பேசவில்லை. மார்பில் நன்றாகக் காயம் பட்டு விடவே, இன்னொரு புறம் நகர்ந்து உட்கார்ந்து கொண்டது.

பண்டிதரின் பிள்ளை அடிக்கடி கிளியைக் கம்பியினால் குத்தினான். கிளியும் விடாப்பிடியாக மனிதன் பேசும் மொழியில் அவனுக்குப் பதில் சொல்ல மறுத்தது. அவன் குத்திய தாக்குதல்களின் குத்துக்களை எல்லாம் அது தன் சரீரத்தில் ஏற்றுக் கொண்டது.

மறு நாள் சுயேச்சையாகப் பறந்து திரியும் சோலைக் கிளி, கூண்டில் சிறைப்பட்டிருக்கும் கிளியைக் காண வந்தது. கூண்டுக் கிளி அப்பொழுது செத்துக் கிடந்தது. அதன் சிறைச்சாலையின் கதவும் திறந்து கிடந்தது.

"சோலைக் கிளி தன் இன்ப மொழியில், எஜமானனின் வார்த்தைகளைக் கேட்கா விட்டால் அடிமைக்கு இந்தக் கதிதான் நேரும்" என்று சொல்லிக் கொண்டது.

பண்டிதர் தன் பிள்ளையாண்டானைப் பார்த்து, "இந்தச் சோலைக் கிளியை அடித்து விரட்டு. நம் கிளியை இதுதான் கொன்று போட்டு விட்டது!" என்றார்.

இதைக் கேட்டுக் கூண்டுக் கிளியின் இறவாத ஆத்மா, "இந்தச் சோலைக் கிளியைக் கோவிலில் வைத்துத்தான் கும்பிட வேண்டும். இது மட்டும் உதவாவிட்டால் ஒரு சிறைக் கைதி விடுதலை பெறுவது ஏது! ஒரு பிணந்தான் பிழைப்பதேது!" என்றது. அது சொன்ன அந்தச் சொற்கள் பண்டிதரின் காதில் விழ இருக்க நியாயம் ஏது!



அடர்ந்த காட்டிலே!

மலையாளக் கதை: கே. பி. விஜயன்
மொழிபெயர்ப்பு: ஜெயமணி



அந்தப் பிரதேசத்தில், அத்தகைய பயங்கரமான சூழ்நிலையில், காலம் ஸ்தம்பித்து விட்டதுபோல் தோன்றியது; ஒரு நிமிஷம் ஒரு யுகம்போல் இருந்தது.

காட்டில் உள்ள அந்தக் குடிசையில் ஒரு சீன மாதும் அவளது மகனும் இருந்தனர். அவர்களுக்கு அந்த வாழ்க்கை முடிவில்லாத, பயங்கரமான நரக வாழ்க்கையாகவே இருந்தது.

அப்பிரதேசத்தைச் சுற்றி வெகு தொலைவுக்கு முள் வேலி போடப்பட்டிருந்தது. அந்த முள் வேலி நெடுகக் காலியான தகரங்கள் மாட்டப்பட்டிருந்ததால், காட்டில் பதுங்கிக் கொண்டிருக்கும் எவரும் அந்த வேலியைத் தாண்டிச் சென்று தப்புவது என்பது முடியாத காரியம். ஏனெனில், அந்த முள்வேலி சிறிது அசைந்தாலும் அதில் மாட்டப்பட்டுள்ள தகரங்களால் ஏற்படும் சத்தம் காதைத் துளைத்துவிடும்! அதைக் கேட்டு உடனே சிப்பாய்கள் உஷாராகி விடுவார்கள்!

போதாக்குறைக்கு, முக்கியமான இடங்களிலும் திருப்பங்களிலும் சிப்பாய்கள் உருவிய கத்திகளுடனும் துப்பாக்கிகளுடனும் யந்திர பீரங்கிகளுடனும் காவல் புரிந்து வந்தனர். முக்கியமாக, வெள்ளையர்களின் ஜாகைகளைச் சுற்றிக் கூர்க்க சிப்பாய்களின் காவல் மிகவும் தடபுடலாக இருந்தது.

எனவே, அங்கிருந்து தப்புவதற்கு வழியின்றித் தாயும் மகனும் நடுங்கிக் கொண்டிருந்தனர். தாய் மகனுக்கு உணவு படைத்துக் கொண்டிருந்தாள். சீனர்களின் சம்பிரதாயப்படி மகன் குச்சிகளால் உணவை எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அவர்கள் பேசவே இல்லை. ஒருவருக்கொருவர் பேசவும் பயந்தனர். உண்மையில் தாயும் மகனும் மனம் விட்டுப் பேசி வெகு காலம் ஆகிவிட்டது!

மகன் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டே தாய் சோக வடிவமாக உட்கார்ந்திருந்தாள். அவள் மகன் சிப்பாய்களின் காவலையெல்லாம் தாண்டி எக்காலத்தில் அவனது சகாக்கள் இருக்குமிடத்துக்குத் தப்பிச் செல்வானோ?

கூர்க்க சிப்பாய்களை நினைத்தாலே அவள் உடம்பு நடுங்கியது. உள்ளம் கொதித்தது. அவர்களுக்கு ஈவு இரக்கம் இடையாதா? அவர்களைப் பெற்றவர்கள் பிசாசு ஜன்மங்களா என்றெல்லாம் எண்ணினாள். அவர்கள் பிறந்த நாட்டைக் கூட அவள் வெறுத்தாள்.


அந்தச் சீனப் பெண்ணுக்குப் பூகோள சாஸ்திரம் என்றால் என்ன என்பதே தெரியாது. எனினும், கூர்க்க சிப்பாய்களின் தாய்நாடு எது என்பது பற்றி அவள் கேள்விப் பட்டிருக்கிறாள். அது தான், கடலுக்கு அப்பால் உள்ள **இந்தியா** என்பது அவளுக்குத் தெரியும். அந்த நாட்டைச் சேர்ந்த எண்ணிக்கையற்றவர்களை அவள் சந்தித்திருக்கிறாள். இந்தியாவிலிருந்து வந்துள்ள ஏராளமான தமிழர்கள் தோட்டங்களில் புல் வெட்டுவோராக இருப்பது அவளுக்கு நன்கு தெரியும். அந்தத் தமிழர்கள், தங்களை அடக்கி ஆள விரும்பும் வெள்ளையர்களை அறவே வெறுக்கிறார்கள் என்பதையும் அவள் அறிவாள்.

ஆனால், அதே இந்தியாவிலிருந்து வந்துள்ள கூர்க்க சிப்பாய்கள் மாத்திரம் வெள்ளையர்களுக்காகப் போர் முனையில் ஏன் இரத்தம் சிந்துகிறார்கள் என்பது அவளுக்குப் புரியவில்லை.

அந்தச் சிப்பாய்கள் துப்பாக்கிகளுடன் காடுகளில் புகுந்து விட்டால், ஏதோ தங்கள் தாய்மார்களையும் சகோதரிகளையும் யாரோ கொன்று விட்டது போலல்லவா வெறிகொண்டு போர் புரிகிறார்கள்!

அவர்களுக்குக் காடு மலை, வெய்யில் மழை, சேறு சகதி, பள்ளம் மேடு, வாழ்வு சாவு எல்லாம் ஒன்றாகவே இருக்கிறது! மலாய் நாட்டில் உள்ள காடுகளில் அவள்





"ஹிந்து" பத்திரிகையின் பங்களூர் பிரதிநிதி திரு கே. எஸ். ராமசாமி அவர்களின் புதல்வி திருமதி சாந்தாவுக்கும் திரு கே. என். ராமமூர்த்தி பி. எஸ்ஸி.க்கும், மே மாதம் 13-ந் தேதி பங்களூரில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்குப் பிரபல விஞ்ஞானி டாக்டர் ஸி.வி. ராமன் அவர்கள் விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதிப்பதைப் படத்தில் காணலாம்.

வாழ்க, சாந்தா - ராமமூர்த்தி!

மகனைப் போல் எத்தனையோ பேர்கள் பதுங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அறவே ஒழித்து விடவே கூர்க்க சிப்பாய்கள் தருவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவளைப் போல் ஆயிரக்கணக்கான தாய்மார்களின் உள்ளக் கொதிப்புக்கும் சோகத்துக்கும் அந்தச் சிப்பாய்கள் ஏன் காரணமாக இருக்க வேண்டும்? அவர்கள் தங்களுடைய திறமையையும் தீரத்தையும் வெள்ளையர்களின் சுயநலத்துக்காக ஏன் துஷ் பிரயோகம் செய்ய வேண்டும்?—இதன் மர்மம் என்ன என்பதைத்தான் அவளால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

* * *

"கொஞ்சம் தண்ணீர்" என்று அவன் மகன் கேட்ட போதுதான் அவளது சிந்தனை கலைந்தது.

அவன் அருகிலிருந்த மண் ஜாடியிலிருந்த தண்ணீரை எடுத்து அவனுக்குக் கொடுத்தாள்.

அவன் தண்ணீர் குடிப்பதை அவள் அன்புடன் கவனித்துக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்த அவளது பெற்ற மனம் பற்றி எரிந்தது. அவள் கண்களிலிருந்து நீர் வழிந்தது. 'அவன் எவ்வளவு இளைத்து விட்டான்?' என்று அவள் மனம் பதைத்தது. தனக்கு வயோதிக காலத்தில் ஊன்றுகோலாக இருக்க வேண்டிய அவனது வாழ்க்கை, போர் முனையில் வியர்த்தமாகி விட்டதை எண்ணியபோது அவளது நெஞ்சம் பதறியது.

அவள் தன் மகனுடன் அமைதியாகவும் ஆனந்தமாகவும் இருந்த காலம் உண்டு. ஜோகூர் ராஜ்யத்தைச் சேர்ந்த கியாங் தான் அவளது சொந்த ஊர். தன் மகன் குழந்தையாக இருந்த போது குதித்துக் குதித்து உல்லாசமாக விளையாடியதை அவள் நினைத்துக் கொண்டாள். ஆனால், இப்போதோ அவன், முதலைகளும் உதிரத்தை உறிஞ்சும் அட்டைப் பூச்சிகளும் நிறைந்த அந்த அடர்ந்த காட்டில் கூர்க்க சிப்பாய்களின் கண்களில் தென்படாமல் இருப்பதற்காக மார்பால் ஊர்ந்து செல்ல வேண்டியிருக்கிறது. பொம்மைகளையும் பலூன்களையும் வைத்துக் கொண்டு சிரித்து விளையாடிக் கொண்டிருந்த அவன் கையில் இப்போது துப்பாக்கி காட்சியளிக்கிறது. அவன் முகத்திலோ கவலையையும் ஏக்கத்தையும் தவிர வேறெதையும் காணமுடியவில்லை.

இந்த மாறுதலை நினைத்துப் பார்த்த போது அவள் உடல் நடுங்கியது.

இத்தகைய மாறுதலுக்குக் காரணம் என்ன?

இந்தக் கேள்விக்கு லண்டனில், டோக்கியோவில், வாஷிங்டனில் உள்ள ராஜதந்திரிகள்தான் பதில் அளிக்க வேண்டும்!

இன்றும் மலாய் காட்டிலுள்ள பயங்கரவாதிகளில் ஒருவர் துப்பாக்கியால் சுட்டாலும் உடனே பிரிட்டனில் உள்ள கன்சர்வேடிவ் கட்சியினர் திடுக்கிடுகிறார்கள். அந்தத் துப்பாக்கியின் சப்தத்தை அடக்குவதற்காகப் பிரிட்டனில் உள்ள தொழிலாளர்களும் அமெரிக்காவில் உள்ள விவசாயிகளும் நெற்றி வியர்வை நிலத்தில்விழ உழைக்க வேண்டியிருக்கிறது! அவர்களைத் தவிர, கூர்க்க சிப்பாய்களும் மலாய்க் காட்டுக்கே நேரில் வந்து விட்டார்கள்!

அவளும் அவள் மகனும் ஏன் அப்படிக் கூர்க்க சிப்பாய்களுக்குப் பயந்து கொண்டு காட்டில் வாழ வேண்டும்?—ஒரு வேளை இந்தக் கேள்விக்குப் பதில் என்ன என்பது இன்று டோக்கியோ அல்லது ஹிரோஷிமா தெருக்களில் வேலையில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கும் பழைய ஜப்பானிய சிப்பாய்க்குத் தெரிந்திருக்கலாம்!

* * *

ஜப்பானியர்கள் மலேயாவை ஆக்கிரமித்துக் கொண்ட போது அவர்களால்

அவளது கணவன் சித்திரவதைக்கு உள்ளாகி மாண்டான். தன் மகனுக்கும் அதே கதி நேராமல் இருப்பதற்காக அவள் அவனை அழைத்துக் கொண்டு காட்டுக்கு ஓடி வந்து விட்டாள். அன்றிலிருந்து அவர்கள் இருவரும் காட்டிலேயே வாழ்ந்து வருகிறார்கள்.

அவள் தன் மகனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு வாழ்க்கை, உயிர், உலகம் எல்லாம் அவன் தான். அவன் உயிருக்கு ஏதாவது ஏற்பட்டு விட்டால்...அதை நினைக்கவே அவளால் முடியவில்லை.

"அவனுக்கு ஒன்றும் நேராது. அவன் வாழவே பிறந்திருக்கிறான்" என்று அவள் தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள்.

ஏனென்றால், இதுவரையில் அவனுக்கு ஏற்பட்ட ஆபத்துக்கள் எண்ணிக்கையில் அடங்கா. பெரியவர்கள் சதியாலோசனை செய்யும் போதெல்லாம் அவன்தான் வெளியில் காவலாக இருப்பான். அது எவ்வளவு ஆபத்தான வேலை தெரியுமா? அப்போது எந்த வினாடியிலும் மரணம் சம்பவிக்கக் கூடும்.

ஆனால், அவளது மகனோ, சாகாவரம் பெற்று வந்திருப்பவன் போல் தோன்றியது. அவனது அதிர்ஷ்டத்தைக் கண்டு அக் காலத்தில் வெள்ளையர்களே வெகுவாகப் புகழ்ந்தனர்.

அந்தப் பையன் இராவிட்டால் சார்லி என்ற வெள்ளையர் தூங்கவே மாட்டார். சார்லி ஒரு பெரிய ரப்பர்த் தோட்டத்தின் மானேஜர். ஜப்பானியர்கள் மலாய் நாட்டில் பிரவேசித்ததும் சார்லி அவர்களுக்குப் பயந்து கொண்டு காட்டுக்குள் ஓடி அடைக்கலம் புகுந்தார்.


சார்லிக்குத் தன் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களிடத்தில் கூட நம்பிக்கையில்லை. ஏனெனில், அவரது பூட்ஸ் காலால் உதைபடாத தொழிலாளியோ, அவரிடம் சவுக்கடி வாங்காத தொழிலாளியோ அந்தத் தோட்டத்தில் ஒருவர்கூட இல்லை! அப்படியிருந்தும் ஜப்பானியர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் அவர் தப்பிக் காட்டுக்குள் செல்லுவதற்கு அவரிடம் அடி வாங்கிய தொழிலாளர்களே உதவி செய்தனர்!


அத்தகைய ஆபத்தான சமயத்தில் உதவி செய்த தோட்டத் தொழிலாளர்களுக்கு இறுதியில் என்ன பலன் கிடைத்தது? யுத்தம் முடிந்து தோட்ட மானேஜர்கள் மறுபடியும் தோட்டங்களுக்குத் திரும்பி வந்தனர். தாங்கள் ஜப்பானியர்களிடம் பலியாகாமல் தப்புவதற்கு உதவி புரிந்தவர்களுக்கு வெள்ளையர்கள் நன்றி காட்டாததுடன், அவர்களை முன்போலவே மீண்டும் மிருகத்தனமாக நடத்த முற்பட்டனர். யுத்தம் காரணமாக அந்த வெள்ளையர்களின் மனநிலை மாறவே இல்லை.

ஆனால், யுத்தம் காரணமாகத் தொழிலாளர்களின் மனநிலை அடியோடு மாறியிருந்தது. வெள்ளையர்களிடம் அடிபணிந்து வாழ அவர்கள் விரும்பவில்லை. ஒழுகும் குடிசையில் ஆடு மாடுகளைப் போல் அடைபட்டிருந்த அவர்கள் தங்கள் உரிமைகளை உணர்ந்து மகத்தான ஸ்தாபனத்தை உருவாக்கியிருந்தனர். சவுக்கடிகளுக்கும் துப்பாக்கி ரவைகளுக்கும் அஞ்சாத ஆண்மை அவர்களுடைய இருதயத்தில் வேரூன்றியிருந்தது.

வெள்ளையர்களான தோட்ட மானேஜர்களின் நன்றிகெட்டதனமே தகராறுக்கு மூலகாரணமாகியது. தொழிலாளர்களின் உரிமைகளை அவர்கள் அங்கீகரிக்க மறுத்து விட்டனர். உரிமைகள் கோரிய தொழிலாளர்கள்மீது கூர்க்க சிப்பாய்களையும் வேட்டை நாய்களையும் ஏவி விட்டனர்.

வெள்ளையர்களின் நன்றிகெட்டதனத்தை எண்ணியபோது அவள் இரத்தம் கொதித்தது. எந்தத் தாய்தான் தன்னுடைய மகன்மீது வேட்டை நாய்களை





மதுரையில் பிரபல வக்கீலான ஸ்ரீ வி. துரைசாமி ஐயர் அவர்களின் குமாரன் செஞ்சி கோபாலனுக்கும், பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியாவின் மானேஜரான ஸ்ரீ கே. சுப்ரமண்யம் அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி ஜானகிக்கும், மே மாதம் 13ந் தேதியன்று திருநெல்வேலி ஸ்ரீபுரத்தில் விமரிசையாக விவாகம் நடந்தது. ஜனாதிபதி ராஜன்பாபு, உப ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆகியவர்கள் ஆசிச் செய்தி அனுப்பி யிருந்தனர். வாழ்க மணமக்கள் !

ஏவி விடும் அக்கிரமத்தைச் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

* *

அவன் சாப்பிட்டு முடிந்ததும், "நாளைக்குப் போகலாம், அப்பா !" என்றாள் மகனைப் பார்த்து.

"முடியாது, அம்மா. இனித் தாமதிக்கக் கூடாது" என்றான் பையன்.

"அப்பா, இன்றிரவு மாத்திரம் இங்கேயே படுத்துக்கொள். ஒருநாள் என்றால் ஒரு நாள் உன்னுடன் இருக்கலாம் அல்லவா? பிறகு நாம் இறப்பதாக இருந்தால்கூட அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை" என்றாள் தாயார்.

"இறப்பது என்பது அவ்வளவு எளிதான காரியம் இல்லை, அம்மா ! தவிர, மனிதர் இறப்பதற்காக மாத்திரமா இந்த உலகில் பிறக்கிறார்கள்? வேறு சில இலட்சியங்களுக்காகவே பிறக்கிறார்கள். மரணம் என்பது என்ன? இந்த வெள்ளையர்களின் கீழ் ஆடு மாடுகளைப் போல் அடிமைகளாக இருப்பதுதான் உண்மையான மரணம். இதிலிருந்து தப்புவதுதான் உண்மையான வாழ்வு !" என்றான் மகன்.

இனித் தன் மகனைத் தடுக்க முடியாது என்பது அவளுக்குத் தெரியும். எனவே, "சரி, போய் வா. ஆனால் சீக்கிரமாகத் திரும்பி வந்து விடு" என்று கூறி அவனுக்கு விடை கொடுத்தாள்.

அவன் எறி குண்டுகளை இடுப்பில் கட்டிக் கொண்டான். கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். அவன் மனத்தில் பல்வேறு உணர்ச்சிகள் மாறி மாறி எழுந்தன. தாயாரிடம் விடைபெற்றுக் கொள்ளும் போது, அவன் தன் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று உதட்டைக் கடித்துக் கொண்டான்.

அவனைப் பிரிய வேண்டும் என்ற ஏக்கத்தினாலும் வேதனையினாலும் தாயார் தன் இரு கைகளையும் பிசைந்து கொண்டாள்.

மகன் சந்தடி செய்யாமல் இருளில் சென்று மறைந்தான். அவள் தன் மகன் சென்ற திசையையே, அதாவது இருளையே பார்த்துக்கொண்டு நின்றாள் !

பத்து நிமிஷங்கள் சென்றன. அவள் மகனையே நினைத்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அப்போது திடீரென்று ஒரு துப்பாக்கி வெடி கேட்டது.

அவள் தன்மீது துப்பாக்கி ரவை பட்டு விட்டதுபோல், "ஐயோ !" என்று அலறிக் கொண்டு கீழே விழுந்தாள்.

மேன்மேலும் தொடர்ந்து துப்பாக்கி வெடிகள் கேட்டன. அதே சமயத்தில் பல்வேறு பாஷைகளில் சில கூக்குரல்களும் கேட்டன.

இருளில் ஏதோ பயங்கரச் சம்பவங்கள் நிகழ்கின்றன என்பதை மாத்திரம் அவள் அறிந்து கொண்டாள். ஆனால், என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சில விநாடி நேரத்தில் சத்தம் ஓய்ந்து எங்கும் அமைதி நிலவியது.

உடனே அவள் சத்தம் வந்த திசையை நோக்கி இருளில் ஓடினாள்.

சுமார் ஐம்பது கெஜத்துக்கு அப்பால் முள்வேலியில் இடைவெளி இருப்பது அவளுக்குத் தெரியும். அங்கு முள் கம்பிகள் வெட்டப்பட்டுச் சிப்பாய்களுக்குத் தெரியாமல் மெல்லிய கம்பிகளால் இணைக்கப்பட்டிருந்தன. வேண்டியபோது அவற்றைப் பிரித்து விடலாம். அதிகாரிகளுக்காகப் பயந்து கொண்டு காட்டில் ஒளிந்து கொண்டிருப்பவர்கள் அதன் வழியாகத்தான் வெளியே செல்லுவது வழக்கம்.

சத்தம் வந்த இடத்தை அடைந்ததும், அவள் இருளை ஊடுருவி அங்குமிங்கும் பார்த்தாள். வெடி மருந்தின் நாற்றம் எங்கும் பரவியிருந்தது. துப்பாக்கி ரவைகளுக்கு எத்தனைபேர் பலியானார்களோ?

எனினும் அதையெல்லாம் பற்றி அவள் கவலைப்படவில்லை. எத்தனை பேர் பலியானால் என்ன? அவளது மகன் ஆபத்துக்கு உள்ளாகி விட்டானா என்பதுதான் அவளது கவலை.

சிறிது தூரத்தில் இரண்டு உடல்கள் கிடப்பது அவளுக்கு இலேசாகத் தெரிந்தது. பதறிப் போய் அருகில் சென்று பார்த்தாள். அவை இரண்டு மலாய் சிப்

பாய்களின் உடல்கள். எறி குண்டினால் அவர்களுடைய உடல்கள் உருக் குலைந்திருந்தன. அந்த உடலுக்கு அருகில் அவள் சிறிது நேரம் அப்படியே செயலற்று உட்கார்ந்திருந்தாள்.

மற்றும் சிறிது தூரத்தில் வேதனை தோய்ந்த ஒரு குரல் கேட்டது. உடனே அவள் அந்த இடத்தை நோக்கிச் சென்றாள். அங்கும் யாரோ ஒருவன் கீழே விழுந்து கிடப்பது இருளில் அவளுக்குத் தெரிந்தது. அவன் அவளுக்குப் புரியாத பாஷையில் ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தான்,

அவன் ஒரு கூர்க்க சிப்பாய் என்பதை அவள் அறிந்து கொண்டாள். அதாவது அவன், அவளுக்கும் அவளது மகனுக்கும் பரம விரோதிகளாக இருப்பவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவன்.

அந்தச் சங்கடமான நிலைமையில் அவளுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. தனக்கு விரோதியான அந்தச் சிப்பாய் என்ன சொல்லுகிறான் என்பதும் அவளுக்குத் தெரியவில்லை.

தங்களுக்குப் பரம விரோதியான கூர்க்க சிப்பாய் ஒருவனையாவது தன் கையால் கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டும் என்பது அவளுடைய நீண்ட கால அவா. அந்த ஆசையை நிறைவேற்றச் சந்தர்ப்பம் கிடைக்குமா என்று அவள் ஏங்கிய காலமும் உண்டு.

அவள் ஆர்வத்துடன் எதிர்பார்த்த சந்தர்ப்பம் அப்போது அவளுக்குக் கிடைத்தது. ஆனால், அதை உபயோகப்படுத்திக் கொள்ள அவள் மனம் இடம் கொடுக்கவில்லை! கொடிப் பொழுதில் அவள் கீழே விழுந்து கிடந்த சிப்பாயின் கழுத்தை நெரித்துக் கொன்றிருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக அவள் அவனை மரணத்தின் வாயிலிருந்து எப்படி மீட்பது என்பது பற்றி யோசிக்கலானாள். அப்போது அவள் மனத்தில் மற்ற உணர்ச்சிகள் மறைந்து தாய்மை உணர்ச்சியே மேல் நோக்கி நின்றது.

அவள் யோசித்தாள். அந்த இடத்தில் விளக்கை ஏற்றிப் பார்க்கலாமென்றால், அது உடனே மரணத்தை வரவேற்பதற்கு ஒப்பாகும். குற்றுயிராகக் கிடக்கும் அச் சிப்பாயைக் காப்பாற்ற வேண்டுமாயின் அந்த இருளில் அவனைத் தன் குடிசைக்குத் தூக்கிச் சென்றுவிட வேண்டும்.

ஆம்! அம் முயற்சியில் அவளுக்கு உதவி செய்வார் யாருமில்லை. ஏனெனில் துப்பாக்கி வெடிகளின் சத்தத்தைக் கேட்ட மற்ற சிப்பாய்கள் எல்லோரும் பயந்து ஓடி விட்டார்கள்.

கடைசியில் அவள் மெதுவாக அவனைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு இருளில் தள்ளாடிய வண்ணம் தன் குடிசைக்குச் சென்றாள். ஊசலாடிக் கொண்டிருந்த ஓர் உயிரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமே அவளுக்கு மேற்படி சிப்பாயைத் தூக்கிச் செல்லக் கூடிய பலத்தைக் கொடுத்தது!

அவள் குடிசையை அடைவதற்குள் மிகவும் களைத்துப் போய் விட்டாள். ஓர் உயிரைக் கொல்லுவது மிகவும் எளிது; ஆனால் அதைக் காப்பாற்றுவது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பது அப்போது தான் அவளுக்குப் புலனாகியது!

தன் குடிசையிலிருந்த பாயில் அந்த சிப்பாயைக் கிடத்தினாள். உடலை இறுக்கிக்கொண்டிருந்த அவனது உடைகளைத் தளர்த்தி விட்டாள். துப்பாக்கி ரவை பாய்ந்ததால் அவன் கையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டே யிருந்தது. அவள் இரத்தம் வழியாமல் இருப்பதற்காக ஒரு துணியை எடுத்து அந்தக் காயத்தின்மீது இறுகக் கட்டினாள்.

பிறகு அவள் அவசரம் அவசரமாக அடுப்பை மூட்டி, காப்பி தயாரித்து,

பாரதீய மியூஸிக் & ஆர்ட்ஸ் ஸொஸைடி (ரிஜிஸ்டர்டு)

4, சுரேஷ் சதன், பிராமின் வாடா ரோடு, பம்பாய்-19

பிரபல சங்கீதக் கச்சேரி

★

ஆலத்தூர் சகோதரர்கள் ... பாட்டு

லால்குடி ஸ்ரீ ஜெயராமன் ... வயலின்

பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் ... மிருதங்கம்

5-6-1955 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு

மாதுங்கா, போதார் காலேஜ் ஹாலில்

அவன் வாயில் கொண்டு வந்து ஊற்றினாள். பிரக்ஞையற்றுக் கிடந்த அவன் வாயில் காப்பி ஊற்றியதும் சிறிது பிரக்ஞை வந்தது. அதே சமயம் அவனது முகத்தில் இலேசாகப் புன்முறுவல் தோன்றியது. அதைக் கண்டதும் அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல!

பிறகு அவன் தலையை அசைத்தான். அவன் காயத்தின்மீது துணியால் கட்டியதால் இரத்தம் பெருகுவது நின்றது.

அந்தச் சிப்பாய்க்கு இருபத்தைந்து வயதுதான் இருக்கும். அவன் தாய் நாட்டையும், வெண் மேகங்களாலும் பனிக் கட்டிகளாலும் மூடப்பட்ட ஹிமயமலையையும், புனித நதிகளையும், பசுமையான வயல்களையும் வனங்களையும் விட்டு விட்டு எழுபத்தைந்து வெள்ளி (டாலர்) சம்பளத்துக்காக மரணத்தை வரவேற்க மலாய் நாட்டுக்கு வந்திருப்பதை நினைத்தபோது அவள் ஹிருதயம் நைந்து உருகியது.

அந்தச் சீன மாது நேரம் போவதே தெரியாமல் சிந்தனைச் சுழல்களில் அகப்பட்டவள் போல் அவன் அருகிலேயே உட்கார்ந்திருந்தாள். வானத்தில் ஆயிரக் கணக்கான அகல் விளக்குகள் போல் தோன்றிய நட்சத்திரங்கள் சிறிது சிறிதாக மங்கி மறைந்தன.

சூரியோதயம் ஆனதும் அவள் மீண்டும் அடுப்பை மூட்டிக் காப்பி வைத்து அவன் வாயில் ஊற்றினாள். அவன், கைக் குழந்தை தாயின் பாலை ஆர்வத்துடன் சாப்பிடுவதுபோல் அதைச் சாப்பிட்டான்.

பிறகு அவனது கண்கள் மெதுவாகத் திறந்தன. அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் அருகில் ஒரு சீனப் பெண் உட்கார்ந்து கொண்டு அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் கண்கள் ஆச்சரியத்தினால் அகல விரிந்தன. அவளது முகம் அவனுக்குத் தான் எக்காலத்திலோ, எங்கேயோ பார்த்த முகம் போலவே இருந்தது. ஒரு வேளை முந்திய ஜன்மத்தில்தான் அவன் அவளைப் பார்த்திருக்கலாம்!

அவளைப் பார்த்ததும் அவன் கண்களிலிருந்து இரண்டு நீர்த் துளிகள் கீழே விழுந்தன. அவன் பேச முடியாமல், 'தா...யே' என்று மாத்திரம் கூறித் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

அவனது கண்கள் மீண்டும் மூடிக் கொண்டன. அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்பது புரியாமல் சிந்தித்த வண்ணம் அவள் செயலற்று உட்கார்ந்திருந்தாள்.

டி.கே.சி.யின் கடிதங்கள்

திருக்குற்றாலம்,
13—2—46

அன்பைக் கண்டால் யாருக்குமே பயந்தான். "அதெல்லாம் சொல்லாதேயுங்கள் ஐயா" (Please don't mention) என்று தடுத்துச் சொல்கிற வார்த்தை நம்முடைய காதில் விழத்தானே செய்கிறது. அன்பு அதிகமாகப் போன உடனே, கிருஷ்ண பரமாத்மாவும் பயந்து போய் அவல் தின்பதை நிறுத்திவிட வில்லையா குசேலரைக் கண்டு! அவ்வளவு பயந்து விட்டார் எல்லாம் வல்ல இறைவன் கூட. இந்த நிலைமையில் என் போலியரது பாடு எடுத்துச் சொல்ல வேண்டிய காரியமா?

சென்னையில் காந்திஜியின் பஜனைக் கோஷ்டிக்குப் போயிருந்தேன். இரண்டு லக்ஷம் பேர் கூடியிருந்தார்கள். பாட்டைக் காதினால் கேட்டுக் கொண்டிருந்தால் போதாது, கைகொண்டு தாளம் கொட்டி பஜனையில் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும் என்றார். அடுத்த தடவை வரும்போது ஆடவும் வேண்டும் என்று சொல்லப் போகிறார்.

ஐம்பது வருஷத்துக்கு முன் ஒருவர் காவடி எடுத்தால் உறவினர்களும் நண்பர்களும் சேர்ந்து ஆடவேண்டும். அதுதான் மரியாதை. தாங்கள் காவடி எடுத்தால் நான் கட்டாயம் ஆஜராக வேண்டும். ஆடவும் வேண்டும். அப்படி வந்து ஆடாமல் போனால் என் யோக்யதையைப் பற்றி எப்படி எல்லாமோ பேசி விடுவார்கள் மற்றவர்கள். நண்பர்கள் செய்யவேண்டிய கடமை அப்படி இருந்தது. அது எல்லாருக்கும் பிரயோசனமாய் இருக்கும். ஆடுகிறவருக்குத்தான் அதிக பிரயோசனம்.

நம்முடைய யூனிவெர்சிட்டி கிராஜுவேட் கேட்பான், "துரைமார்கள்" ஆடுகிறார்களா என்று. அவர்கள் ஆடுகிறார்கள் என்று தெரிந்து விட்டால் அவனும் ஆடத் தயார்தான்.

யூனிவெர்சிட்டிப் படிப்பெல்லாம் பலாச்சுளையை வீசி எறிந்துவிட்டுக் கொட்டையைக் கடித்துக் கொண்டிருக்கிற காரியந்தானே.

அன்புள்ள
டி. கே. சிதம்பரநாதன்


ஜூன் 3உ முதல்
பரணி
விப்ரநாராயணா
தமிழ்
பானுமதி • நாகேஸ்வர ராவ் நடித்தது
டைரக்ஷன்: ராமகிருஷ்ணா
சென்னை
பாரகன்
பாரத்
மஹாலக்ஷ்மி
ராஜகுமாரி
மற்றும்
தென்னாடெங்கும்
பூரண உரிமையாளர்:
எஸ்.கெ.பிக்சர்ஸ்
[திருநெல்வேலி]
c/o ஏவி.எம் ஸ்டுடியோஸ் • மதராஸ்-26

உங்களுக்கும்..





உங்கள் குடும்பத்தாருக்கும்!


ஓமம்–கற்பூர் வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் குடல் கோளாறுகள், வயிற்றுக் கடுப்பு, வலிப்பு மற்றும் இதர வயிற்றுக் கோளாறுகளுக்கு சிறந்த நிவாரணி. அதன் அற்புத குண விசேஷ மருந்துகள் காரணமாக துரித நிவாரணம் கிடைக்கிறது. அதன் கிருமி நாச, கட்டுப்படுத்தும் தன்மைகள் காரணமாக ஓமம்–கற்பூர் வாய், தொண்டையை கொப்பளிக்கவும் உகந்தது. ஸ்திரீகளின் கர்ப்பாசயக் கோளாறுகளுக்கும் உபயோகிக்கலாம். குடும்பத்தில் ஒவ்வொருவரும் நிர்ப்பயமாக உட்கொள்ளலாம். இது தீவிர ஆராய்ச்சி, பரிசோதனைகளுக்குப் பிறகு பொதுஜனங்களுக்கு அளிக்கப்படுகிறது.

ஹென்றியின்

ஓமம்–கற்பூர்

தயாரிப்பவர்:

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மஸூடிகல்ஸ் லிமிடெட், மதராஸ்-1



அத்தியாயம் 19

வீரத்தான்பட்டி

கோயமுத்தூர் ஸ்டேஷனுக்கு அடுத்த ஸ்டேஷனில் நாங்கள் அனைவரும் இறங்கினோம். நானும் கூடவே வருவதில் வள்ளிக்குத்தான் அளவில்லாத ஆனந்தம். வீரத்தான்பட்டி கிராமம் ஸ்டேஷனிலிருந்து ஏழெட்டு மைல் இருந்தது. வைக்கோல் பரப்பப் பட்ட கட்டை வண்டியில் அன்று மாலை நான் செய்த பிரயாணத்தை என்னால் மறக்க முடியவில்லை. பிற்பகல் ரயிலை விட்டு இறங்கினோம். இரவு தான் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். அந்தச் சில மணி நேரங்கள் நானும் வள்ளியும் சேர்ந்து சிரித்த சிரிப்பும், பாடிய பாட்டும் கொஞ்சமா? நஞ்சமா?

அன்று என்னவோ நான் ரொம்பக் குதூகலமான மனோநிலையில் இருந்தேன். இறைவனின் சோதனைகளையே வெகு நாட்களாகத் தொடர்ந்து கண்டு வந்திருந்த எனக்கு, அந்த வயதான கிராமத்துத் தம்பதிகளின் அன்பு மிகவும் ஆறுதலை அளித்தது. இறைவன் நம்மைக் கேட்காமலேயே நன்மையும் செய்கிறார் என்ற எண்ணம் தோன்றிக் கொண்டிருந்தது.

அடுத்தாற்போல் என்ன செய்வது என்ற திகில் நீங்கி, ஒரு வாரத்துக்கு என் நிலைமை சரியாக இருக்கும் என்ற எண்ணத்தினால் உள்ளத்தில் அமைதி ஏற்பட்டிருந்தது. அதைத் தவிர, ஏதோ சிறையிலிருந்து தப்பி வந்து விட்ட மாதிரி ஒரு சுதந்திர உணர்ச்சி வேறு உண்டாகி இருந்தது. கட்டை வண்டியின் சக்கரங்கள் பள்ளங்களில் இறங்கிய போதெல்லாம், தலையில் அடிபட்டுக் கொண்டே இருந்தது. அதனால் ஏற்பட்ட வலிகூட எனக்குச் சிரிப்பைத் தான் வரவழைத்தது. வண்டியின் ஆட்டத்தினால் தலை ஆடி முட்டிக் கொண்ட போதெல்லாம் நானும் வள்ளியும் சிரித்துக் கொண்டே இருந்தோம். பாவம்! வள்ளியின் பாட்டனும் பாட்டியும் எதற்காக நாங்கள் சிரிக்கிறோம் என்று புரியாமல் விழித்தார்கள். தாத்தா சில சமயம் அவரைப் பார்த்துத்தான் நான் சிரிக்கிறேனோ என்

னவோ என்று எண்ணிக் கொண்டு கொஞ்சம் சிரமப்பட்டார்.

வள்ளியின் பாட்டி மாத்திரம், "சிரிப்பும், புளிப்பும் சில காலம். அப்படித்தான் இருக்கும். சின்னக் குழந்தைகள்தானே?" என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

கோயமுத்தூர் பக்கம் அப்படி யொன்றும் ரொம்ப நீர்வளம்மிகுந்த பிரதேசமல்ல. ஆனால் பாதை நிழலாக நன்றாக இருந்தது. ஆங்காங்கு சில பெரிய கிணறுகள் காணப்பட்டன. வயல்களும் பசுமையாகக் காணப்பட்டன. ஆனால் குங்குமத் துறையின் நீர்வளத்தோடு ஒப்பிட்டுப் பார்த்த பொழுது அது ஏதோ ஒரு வறண்ட பிரதேசமென்று தோன்றியது. ஆனாலும் ஏதோ ஒரு தெய்வ லோகத்து மந்தார வனத்தில் சஞ்சரிப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அன்றுதான் வெகு நாட்களுக்குப் பின் நான் மறுபடியும் குங்குமத் துறையில் கவலைகளையறியாமல் விளையாடிய பழைய இந்துமதியாக ஆனேன். ஆனால் அது சில மணி நேரங்கள்தான் நீடித்தது.

நான் வள்ளிக்குக் கட்டை வண்டியில் இருந்தபடியே பாட்டுச் சொல்லிக் கொடுத்தேன். பெரியவர் முருகப் பெருமானுக்குப் பக்தர் என்பதைத் தெரிந்து கொண்டபடியால் ஒரு திருப்புகழ் பாடினேன்.



'சந்தனம் திமிர்ந்தணைந்து
குங்குமம் கடம்பிலங்கு
சண்பகம் செறிந்திலங்கு
நிரள்தோளும்
தண்டையும் சிலம்பலம்ப
வெண்டயச் சலன்சலென்று
சஞ்சரஞ்சதங்கை கொஞ்ச
மயிலேறி'

என்று பாடத் தொடங்கினேன். தாத்தாவுக்கு ஒரே உற்சாகம் ஏற்பட்டு விட்டது. "உன் குரல் கருப்பஞ்சாறு மாதிரி இருக்கிறது, அம்மா! உனக்கு யார் இந்த அழகான பாட்டெல்லாம் சொல்லிக் கொடுத்தார்கள்? சென்னைப் பட்டணத்திலே வளர்ந்தவர்களுக்கு இப்படியெல்லாம் பாட்டே வராது என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். என்னமோ ரேடியோவாமே? கோயமுத்தூருக்குப் போகும்போது நான் கேட்பதுண்டு. அதில் என்னமோ பாஷைகளிலே எல்லாம் பாடுகிறார்கள்" என்றார்.

எனக்கு அவர் அவ்வளவு தூரம் பேசியது ஆச்சரியமாக இருந்தது. "நீங்கள் ரேடியோ கூடக் கேட்பதுண்டா, தாத்தா? பொழுது போவதற்குச் சரியானவழிதான்" என்றேன்.

"ஆமாம் பொழுது போறத்துக்கு அது வேண்டுமாக்கும்! நீ பாடினாலே ரேடியோவை விட நன்னா யிருக்கே? எனக்குப் பாடிக் காட்டிக் கொண்டே இருந்தால் நேரம் போவதே தெரியாது. எத்தனை அழகான தமிழ்ப் பாட்டுப் பாடுகிறாய்!" என்றார்.

"ஆமாம், தாத்தா! வேறு பாஷைகள் புரிய மாட்டேன் என்கிறது என்று சொல்கிறீர்களே, இந்தப் பாட்டு மாத்திரம் எப்படிப் புரிகிறது? இதுவும் வேறு பாஷை மாதிரி தானே இருக்கிறது?" என்றேன்.



அவர் சிரித்தார். "நான் கொஞ்சம் படித்தவன், இந்தப் பாடலுக்குப் பொருள் சொல்லட்டுமா? 'சந்தனமும், குங்கும நிறமுடைய கடம்ப மலரும், சண்பக மலரும் அணிந்த தோளை உடையவனும், தண்டையும், சிலம்பும் எப்போதும் கொஞ்ச மயிலில் ஏறி வருபவனுமான முருகன்' என்று அர்த்தம். சரிதானே?" என்றார்.

வண்டி ஊரை அடைந்தபொழுது, நன்றாக இருட்டி விட்டது. முனுசாமி கவுண்டருடைய வீட்டு வாசலில் இறங்கினோம். தெருவிலேயே அவருடைய வீடுதான் முதலில் இருந்தது. சிறிய ஓட்டுவில்லை வீடுதான். ஆனால் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. வள்ளியின் பாட்டி உள்ளேசென்றதும் பழனி யாண்டவன் படத்துக்கு எதிரிலிருந்த அகல் விளக்கை ஏற்றினாள். பக்கத்து வீட்டிலிருந்து ஒரு செம்பில் பால் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

மறுநாள் நானும் வள்ளியும் ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம். ஊர் அழகாகத்தான் இருந்தது. ஒரு அல்லிக் குளம் இருந்தது. அதில் செங்கழுநீர் புஷ்பங்களும், அல்லியும் அழகாகப் பூத்துக் குலுங்கி யிருந்தன. ஆனாலும் குங்குமத்துறையின் அழகுக்கு ஈடு கட்ட முடியுமா? அதன் மரங்களும், சோலைகளும், புஷ்பங்களும், தண்ணீரும் வேறு எங்கே பார்க்க முடியும்?

அல்லிக் குளத்துக்குப் பக்கத்தில் நின்று பார்த்தால் வெகு தூரத்தில் மலைச் சிகரங்கள் தெரிந்தன. துல்லிய நீல நிற வானத்தில், கரு நீல நிறக் கோடுகள் வரைந்த மாதிரி அந்த மலைகள் தோன்றின. அந்தக் கோட்டின் மேலேயே நடந்து கொண்டு போனால் குங்குமத்துறைக்குக் கூடப் போய் விடலாமென்று சிறு பிள்ளைத் தனமாக எண்ணினேன்.

பெரியவர் இரண்டு நாட்களுக்குப் பிறகு என்னுடைய பூர்விகத்தைப் பற்றி விசாரித்தார். நானும் சுருக்கமாகக் கூறினேன். என் தந்தை காசிலிங்கம், அன்னை சந்திரமணி இருவரும் பட்ட கஷ்டங்களைக் கூறினேன். பிறகு எனது வளர்ப்புத் தந்தையை அவர்கள் சந்தித்தது முதலியவைகளைக் கூறினேன். அதை யெல்லாம் மிக ஆர்வத்துடன் கதை கேட்பது போல் அவர்கள் கேட்டார்கள்.



பெரியவரிடம் என் தந்தை காசி லிங்கம் பலராம் சர்க்கஸில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார் என்று கூறியதும் அவர் ஆச்சரியப் பட்டார். "நான் பதினைந்து இருபது வருஷங் களுக்கு முன்னால் பலராம் சர்க்கஸ் பார்த்திருக்கேன், அம்மா. அதிலே பயில்வான் காசிலிங்கத்தைப் பற்றி இந்த ஜில்லா முழுதும் ஒரே பேச்சாக இருந்தது. நானே அவருடைய அசகாய சூரத்தனங்களை யெல்லாம் கண்ணால் பார்த்திருக்கிறேன். கோயமுத்தூரிலே அவர்கள் வந்து ஆடின போது ஊரே திருவிழா மாதிரி இருந்தது. அக்கம் பக்கத்து ஊர்களிலே யிருந்து சர்க் கஸ் பார்க்க ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வருவார்கள். நானும் அப் போது கொஞ்சம் சின்னவன். ரொம்ப உற்சாகமாக சர்க்கஸ் பார்க்கப் போவேன். இந்த ஊரிலேயிருந்து பத் துப் பதினைந்து பேராகச் சேர்ந்து விடி யற்காலம் புறப்பட்டு நடந்தே போய் விடுவோம். சர்க்கஸ் ரொம்ப நன்றாக இருக்கும். அதிலும் பயில்வான் காசி லிங்கம் வந்து விட்டால் ஒரே உற்சாக மாக இருக்கும்" என்றார்.

எனக்கு இந்த விவரங்களைக் கேட்க மிகவும் ஆவலாக இருந்தது. "அவர் என்னென்ன செய்வார் என்று சொல் லுங்கள் தாத்தா!" என்று கூறினேன்.

"நீ பார்த்ததே இல்லையா, அம்மா? ஆனால் எப்படிப் பார்த்திருக்க முடி யும்? நீ பிறந்த உடனேயேதான் அவர் வீட்டை விட்டுப் போய் விட்டார் என்று சொன்னாயே?" என்றார்.

அதைக் கேட்டதும் எனக்குக் கண்ணீர் வந்து விட்டது. "ஆமாம், தாத்தா! நான் பிறந்ததிலேயிருந்து என்னைச் சேர்ந்தவர்கள் எல்லோருக் கும் துன்பம்தான். ராகு காலத்தில் பிறந்தேனோ என்னமோ தெரிய வில்லை. அப்பா வீட்டை விட்டுப் போனார். எங்களை ஆதரித்த புண்ணிய வானுக்கு நஷ்டத்துக்கு மேல் நஷ்டம் வந்தது. ஆறு வேலி நிலமும், ஊரில் மூன்று சொந்த பங்களாவும் இருந்த பெரிய மனிதர் இறந்து போகும் போது ஆறாயிரம் ரூபாய் தான் இருந் தது. பாக்கியெல்லாம் போய்விட்டது. அதெல்லாம் என்னுடைய துரதிர்ஷ் டந்தானோ என்னவோ என்று எனக்குத் தோன்றிக் கொண்டே இருக்கிறது, தாத்தா. என்னை அங்கே யிருந்து சென்னைப் பட்டணத்துக்கு அழைத்துக் கொண்டு போனாரே வக்கீல், அவர் வீட்டிலும் நான் போன உடனே பணக் கஷ்டம் ஏற்பட்டது. அதனால்தான் எனக்கு அங்கே இருக் கப் பிடிக்கவில்லை. அதே காரணத்தி னால்தான் இங்கேயும் இருக்க மாட்டே னென்று சொல்கிறேன். நான் இருந் தால் உங்களுக்கும் கஷ்டம் வந்து விடும், தாத்தா! என்னைச் சீக்கிரம் அனுப்பி விடுங்கள்" என்றேன்.

அவர்கள் இருவரும் மனம் கனிந்து போனார்கள். "நீ அப்படியெல்லாம் சொல்லக்கூடாது குழந்தை. கஷ்டமும் சுகமும் நம்மைக் கேட்டுக் கொண்டு வருவதில்லை. நமக்காக வருவதும் இல்லை. அதெல்லாம் ஏன் வருகிற தென்று நம்மால் சொல்ல முடியாது. இப்படியெல்லாம் காரணம் கற்பித்துக் கொள்வதால் நம் மனசுதான் புண் படுமே தவிர வேறு பலன் ஒன்று மில்லை. மனத்தை வீணாக நோகச் செய்து கொள்ளாதே. இங்கே இன் னும் கொஞ்ச நாட்கள் இரு. ஏதாவது யோசிக்கலாம். அதற்குள் வள்ளிக்கும் படிக்கவும், பாடவும் நீ கற்றுக் கொடு" என்றார் கவுண்டர்.

எனக்கும்தான் வேறு என்ன காரியம் இருந்தது? வேறு மனிதர்கள்தான் யார் இருந்தார்கள்? பெரியவர் சொன்னபடி இன்னும் கொஞ்ச நாட்கள் அங்குதான் இருந்தாலென்ன என்று தோன்றியது. அவர்களும் பிரியமாக இருந்தார்கள். 'இதைவிட வேறு எங்கே சௌகரியமாகப் போய் இருக்க முடியப் போகிறது?' என்று நினைத்து இன்னும் ஒரு மாதம் அங்கு தங்குவதாகக் கூறினேன்.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு பெரியவர் என்னிடம், "நீ ஆங்கிலம் நன்றாகப் படிப்பாயா அம்மா?" என்றார்.

"சுமாராகத் தெரியும், தாத்தா. தினப் பத்திரிகைகள் படித்துப் புரிந்து கொள்ளுமளவுக்குத் தெரியும்."

"ரொம்ப நல்லதாகப் போச்சு. இந்த ஊர் பள்ளிக்கூடத்து வாத்தியார் ஒருவருக்கு ரொம்ப உடம்பு சரிப்படவில்லை. மூன்று மாதம் லீவு எடுத்துக் கொண்டிருக்கிறாராம். அது வரையில் அவருடைய வேலையைச் செய்ய ஒரு வாத்தியார் வேணுமாம். நீ ஒப்புக் கொள்கிறாயா?" என்றார்.

எனக்கு உண்டான சந்தோஷத்தைச் சொல்லி முடியாது. "ஏன் தாத்தா! பள்ளிக்கூடத்துக்குச் சொல்லித் தருவதற்கென்று படித்தவர்களைத் தானே எடுத்துக் கொள்வார்கள். என்னை எப்படிச் சேர்த்துக் கொள்வார்கள்?" என்று கேட்டேன்.

"கொஞ்ச நாளைக்கு என்றால் பரவாயில்லையாம். கோயமுத்தூரிலிருந்து இங்கே ஒரு வாத்தியாரும் வரமாட்டேனென்கிறார்களாம். அதனால்தான் இப்போது உன்னை வேலைக்கு எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்."

நான் உற்சாகமாக வேலையை ஒப்புக் கொண்டேன். பள்ளிக்கூடம் சிறியதுதான். ஆறாவது வகுப்பு வரைதான் இருந்தது. சுற்று வட்டாரத்துக்கெல்லாம் இது ஒரே பள்ளிக்கூடம். யாரோ ஒரு முத்துக் குமாரக் கவுண்டர் என்னும் பெரிய மனிதர் அதற்குப் பண உதவி செய்து வந்தார். அவருக்குக் குழந்தைகளே பிறக்கவில்லையாம். யாரோ ஏழைக் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தால் குழந்தை பிறக்குமென்று சொல்லவே, அவர் இந்தப் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தினாராம். உடனே குழந்தையும் பிறக்கவே பள்ளிக்கூடத்தைத் தொடர்ந்து நடத்தி வருவதாகக் கூறினார்கள்.

குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லித் தருவது எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அவ்வப்போது வகுப்புக்கு வெளியே சிறுவர் சிறுமிகளை அழைத்துச் சென்று பாட்டுச் சொல்லிக் கொடுப்பேன். எனக்குச் சீக்கிரத்தில் அந்தக் கிராமத்தில் நல்ல பெயரும், மதிப்பும் உண்டாயிற்று.

அத்தியாயம் 20

விஷ விதை

பள்ளிக்கூடத்தில் வேலை செய்வது எனக்கு உற்சாகம் தருவதாக இருந்தது. எனக்குத்தான் சிறு குழந்தைகளைப் பிடிக்குமே. ஆகவே என் மனத்துக்கு உகந்ததாக இருந்தது அந்த வேலை. உண்மையில் பார்க்கப் போனால் எனக்கு அது வேலை என்றே தோன்றவில்லை. ஒரு நல்ல பொழுது போக்காகவே தோன்றியது.

பள்ளிக்கூடத்தில் ஆறு அறைகள்தான் இருந்தன. அதுவும் மூங்கில் தட்டி வைத்துத்தான் மறைக்கப்பட்டிருந்தது. ஆகவே ஒரே சத்தமாக இருக்கும். முதலில் எனக்கு அந்த இரைச்சல் மிக விநோதமாக இருந்தது. கண்களை மூடிக் கொண்டு விட்டால் குங்குமத் துறையில் அருவிக் கரையில் உட்கார்ந்து கொண்டிருப்பது போல் இருக்கும்.

நாளடைவில் பள்ளிக்கூடம் எனக்குப் பழகிப் போயிற்று. நான்காவது வகுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. என்னுடைய வகுப்பில் மொத்தம் இருபது குழந்தைகள் இருந்தனர். அதில் ஐந்து பேர் பெண் குழந்தைகள். ஆறு பிள்ளைகள் உள்ளூரில் இருப்பவர்கள். மீதியுள்ளவர்கள் சுற்று வட்டாரத்துக் கிராமங்களிலிருந்து வருபவர்கள்.

நான் சென்னையிலிருந்த போது சுலோசனா என்னைப் படிக்கச் சொல்லி வற்புறுத்தி வந்தாள். அதனால் இரவு

நேரங்களில் ஆங்கிலப் புத்தகங்கள் நிறையப் படித்தேன். "ஏன் இந்து! ரங்கதுரை இங்கிலாந்திலிருந்து திரும்பி வரும்போது நீ பழைய பட்டிக்காட்டு இந்துமதியாகவே இருந்தால் அவருக்கு ஏமாற்றமாக இருக்காதா? நீ நன்றாகப் படித்து அவரை ஆச்சரியப்படும்படி செய்யவேண்டும்" என்பாள்.

சில சமயம், "நீ சிரத்தையுடன் படித்தால் மெட்ரிகுலேஷன் பரீட்சை கூட எழுதலாம். நான் சொல்லித் தருகிறேன். நிச்சயமாய் நீ பரீட்சையில் தேறி விடலாம்" என்பாள்.

இதனாலெல்லாம் ஓரளவுக்கு நான் புத்தகங்கள் படித்துக் கொண்டிருந்தேன். அது இந்தச் சமயத்தில் மிகவும் உபயோகமாக இருந்தது. சிறுவர்களைக் கவருவதற்குக் கதை சொல்வது போல் சிறந்த வழி வேறு எதுவுமே இல்லை. கதை சொல்ல ஆரம்பித்தால் வகுப்பில் தின்பதற்காக மாங்காய்களைக் கொண்டு வந்திருக்கும் சிறுவர்களுக்குக் கூடப் பையில் மாங்காய் இருப்பது மறந்து போய் விடும்!

ஆனாலும் அத்தனை குழந்தைகளுக்கு நடுவில் இருந்தும் நெஞ்சம் தனிமையில் ஏங்கிக் கொண்டு தான் இருந்தது.

ஒரு நாள் பெரியவர் என்னிடம், "இந்துமதி! உன்னைப் பற்றி ரொம்ப சிலாகித்துப் பேசுகிறார்கள், அம்மா! நீ பள்ளிக்கூடத்தில் ரொம்ப நன்றாகச் சொல்லிக் கொடுக்கிறாயாம். குழந்தைகள் வீட்டில் வந்து 'புது வாத்தியாரம்மா ரொம்ப நல்லவங்க' என்று சொல்கிறார்களாம். எனக்கு மிக்க மகிழ்ச்சி, அம்மா!" என்றார்.

எனக்கும் சந்தோஷமாகத்தான் இருந்தது. "எல்லாம் உங்களைப் போன்ற நல்லவர்களுடைய ஆசிர்வாதந்தான் தாத்தா. நீங்கள் செய்த உதவிக்கு நான் உங்களுக்கு என்ன செய்தாலும் ஈடாகாது" என்று மனங் கசிந்து கூறினேன்.

இப்படியெல்லாம் நான் ஒரு கஷ்டமுமில்லாமல் இருந்தும், மனம் நிம்மதியடையவில்லை. ஆம்! உடலுக்கு ஒரு குறைவும் இல்லை. ஏதோ இரண்டு வேளை ஆகாரமும், உடுத்திக் கொள்ள ஐந்தாறு சேலைகளும் இருந்தன.

ஆனால் உள்ளத்துக்கோ......? உள்ளத்தின் குறைகளைக் காகிதத்தில் கொட்டிவிட முடிந்தால் எவ்வளவோ சௌகரியமாக இருக்குமே? அம்மாவின் திடீர் மரணம், ஒரு வருஷத்துக்குள் அப்பா இறந்தது, அய்யாக்குட்டியின் பயமுறுத்தல், கோமளவல்லி அம்மாளின் கடின ஹிருதயம், பத்மநாபனின் மோசடி—இவைகளே ஒரு பெண்ணின் இதயம் உடைந்து போவதற்குப் போதுமான காரணங்கள்.


இவை ஒன்றும் என்னை அதிகமாகப் பாதிக்கவில்லை. என்னை மிகவும் துன்பத்துக்குள்ளாக்கியது ரங்கதுரையின் பிரிவுதான். ரங்கதுரை எங்கிருக்கிறார் என்பதே தெரியவில்லை. திரும்பி வந்து விட்டாலும் என்னை மறக்காமல் தேடி வரப் போகிறாரா? பத்மநாபன் கூறியது உண்மைதானே? சீமைக்குப் போய்த் திரும்பும் ஒரு இளைஞர் வாழ்க்கையில் எவ்வளவோ முன்னேற்றங்களை எதிர்பார்த்துக் கொண்டு வருவார். அவருக்கு எவ்வளவோ பெரிய பதவிகள் கிடைக்கலாம். அப்படிப்பட்டவர் என்னை மணந்து கொள்ள விரும்ப முடியுமா? அப்படியே அவர் விரும்பினாலும் நான் அதற்குச் சம்மதிப்பது சுயநலமாகாதா?

அய்யாக்குட்டி என்னைப் பயமுறுத்தியதைப் பற்றிச் சுலோசனாவிடம் ஒரு நாள் கூறியபோது, அவள் சொன்னது என் மனத்தில் நெருப்பினால் எழுதிய மாதிரி பதிந்து போயிருந்தது. "உன் மீது குற்றம் ருசு ஆகவேண்டிய அவசியம் கூட இல்லை. இந்தமாதிரி ஒரு விவகாரத்தில் நீ சம்பந்தப்பட்டிருக்கிறாய் என்றாலே அவருடைய கௌரவத்தை அது பாதிக்கும்" என்றாள்.


அதை நினைத்தால் ஒரு பக்கம் எனக்கு உலகத்தின் பேரிலேயே வெறுப்பு உண்டாயிற்று. சுலோசனாவின் மீது கூடக் கோபம் வந்தது. ஆனால் யோசித்துப் பார்த்தால் 'அவள் மீது என்ன தவறு? ஒருவிதத்தில் உண்மைதானே? கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் ஒரு பெண்ணை, ஐ. ஸி. எஸ். படித்துவிட்டு வரும் இளைஞர் விரும்ப முடியுமா?' என்று தோன்றியது.

அய்யாக்குட்டியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. அந்த பயங்கரமான சம்பவத்தை என்ன செய்தாலும் என்னால் மறக்க முடியவில்லை. திடீர் திடீரென்று நினைவுக்கு

உண்டுகளித்த உண்மையை
உவந்து சொல்கிறான் அந்தரங்கமாய்



"ஜெ. பி. மங்காராமின் **ராயல் க்ரீம்** பிஸ்கட்டுகளை வாங்கித் தரச் சொல்லி அப்பாவைக் கேள். இந்த பிஸ்கட்டுகளில் இருக்கும் நேர்த்தியான க்ரீமின் வாசனையை நீ விரும்புவாய்!"




தரத்தில் உயர்ந்தது
விடமின் சத்து நிறைந்தது

அழகிய வர்ண வேலைப்பாடுகளமைந்த காற்றுப்புகாத பாக்கெட்டுகளில் உள்ள மங்காராமின் **ராயல் க்ரீம்** பிஸ்கட்டுகள் பரிசுக்கு உகந்ததாக விளங்குகின்றன!

ஜெ. பி. மங்காராம் & கோ., **குவாலியர்**

சென்னை ஆபீஸ்: 35/37, தம்பு செட்டித் தெரு, சென்னை - 1

NATIONAL M. 2.



குழந்தையின் முதல் நடைகள்

ஆம், குழந்தை தனியாக நடக்கக் கற்றுவருகிறான். பிஞ்சுக் கால்கள் தட்டுத்தடுமாற உங்களை நோக்கி நடந்துவரும் அவனை, பெருமிதம் தாங்காமல் நீங்கள் வாரியணைத்துக் கொள்கிறீர்கள்.

ஆனாலும் குழந்தையின் சகாயமற்ற நிலையில் நாம்தான் அவனுக்கு எல்லாம் செய்யவேண்டியிருக்கிறது. அவனது விஷயத்தில் அடிக்கடி கவனம் தேவை. முக்கியமாக அவனுடைய பூப்போன்ற சருமத்திற்கு விசேஷ பராமரிப்பு அவசியம். ஜான்ஸன்ஸ் பேபி பௌடர் அவனது சருமத்தை மிருதுவாகவும் மழமழப்பாகவும் வைத்திருப்பதுடன் எரிச்சலின்றி பாதுகாக்கவும் செய்யும்.

டாக்டர்கள் ஜான்ஸன்ஸ் பேபி பௌடரை 70 ஆண்டுகளுக்கு மேலாக சிபாரிசு செய்துவருகின்றனர். இன்றே ஒரு டின் வாங்குக.



Johnson's BABY POWDER

Regd. Trade Mark

ஜான்ஸன்ஸ் பேபி பௌடர்

சருமத்திற்கு ஹிதமளிப்பதில் உலகிலேயே நிகரற்ற பௌடர்

இலவசம்

குழந்தை பராமரிப்புப் புத்தகத்தின் இலவச பிரதிக்கு எழுதுங்கள் — குழந்தையை சரியான முறையில் எப்படி பேணி வளர்ப்பது, பல் முளைக்கும்போது என்ன செய்ய வேண்டும், அவனை குளிப்பாட்டும் முறை, எப்படி நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுப்பது முதலிய, பெற்றோருக்கு உபயோகமான, அநேக விஷயங்கள் இதில் அடங்கியிருக்கிறது. இவ்விலாசத்திற்கு எழுதவும்:

ஜான்ஸன் & ஜான்ஸன் (கிரேட் பிரிட்டன்) லிட்.

டிபார்ட்மெண்டு 21(வி), த. பெ. 1976, பம்பாய்

JB. 991



புதுதில்லி பஜனை சமாஜத்தினரின் ஆஸ்திகத் தொண்டுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்தது, அவர்கள் சபரிமலை ஐயப்பனுக்கு அளித்த குதூகல வரவேற்பு. கங்காநதி தீரத்தில் பிரதிஷ்டை செய்வதற்காகச் செல்லும் ஐயப்பதேவன் தலைநகருக்கும் விஜயம் செய்து ஆஸ்திக அன்பர்களின் மனம் குளிரும்படி செய்தான்.

புதுதில்லி பஜனை சமாஜத்தினர் பக்திசிரத்தையோடு ஐயப்பனைப் புதுதில்லி ரயில்வே நிலையத்திலிருந்து பிர்லா மந்திருக்கு அழகாக அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். அந்த மாபெரும் ஊர்வலத்தில் வட இந்தியர், தென்னிந்தியர், வேறுபட்ட மதத்தினர் எல்லோரும் திரளாகக் கூடி யிருந்தனர். காருகுறிச்சி அருணாசலம் சகோதரர்கள் நாகஸ்வர இன்னிசை விருந்தளித்தனர். ஊர்வலத்துக்குப் பிறகு, சுப்ரீம் கோர்ட் நீதிபதி டி. எல். வெங்கட்ராமய்யர் அவர்கள் ஐயப்பனின் சரண தத்துவத்தை விரித்துரைத்தார்கள். ஐயப்பனுக்குக் குதூகல வரவேற்பளித்துப் பக்தித் தொண்டு புரிந்த புதுதில்லி பஜனை சமாஜத்தினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

வந்து என் உடலை உலுக்கி விடும். என் அருமைத் தந்தை மந்திரமூர்த்தி இருந்த வரைக்கும் எனக்கு அவ்வளவு பயம் தெரிய வில்லை. அவர் இறந்த உடனே சில நாட்களுக்கு எனக்கு ரொம்பத் திகிலாக இருந்தது. ஆனால் சென்னைக்குச் சென்ற பிறகு அந்தப் பயம் குறைந்திருந்தது. ஒரு சிறந்த வக்கீல் நமக்குக் கார்டியனாக இருப்பதால் பயப்பட வேண்டியதே இல்லை என்று கருதினேன்.

ஆனால் பத்மநாபனுடைய நோக்கத்தை அறிந்து கொண்ட பிறகு எனக்கு மறுபடியும் பயம் உண்டாயிற்று. அதிலும் அவர், ஈசுவரமூர்த்தியை நான் மணந்து கொள்ள வேண்டு மென்று கூறும் போது, இந்த விஷயத்தை அழுத்தந் திருத்தமாகக் குறிப்பிட்டுக் கூறிய போது என் நம்பிக்கை தவிடுபொடியாகி விட்டது. மறுபடியும் என்னைப் பயம் கவிந்து கொண்டது. உண்மையில் நான் அந்த வீட்டை விட்டு வெளியேறியது, இந்தக் காரணத்துக்காகத் தான் என்று சொல்ல வேண்டும். முதலில் என் மனமே அதை ஒப்புக் கொள்ள வில்லை. 'நானே நிரபராதி. ஒரு குற்றமும் அறியாதவள். என்னை என்ன செய்து விட முடியும்?' என்று எண்ணி வந்தேன். ஆனால் பத்மநாபனைப் பற்றி எனக்குத் தெரியத் தெரிய அந்த நம்பிக்கை குறைந்தது.

கடைசி தினத்தன்று சுலோசனா அவரிடம் சண்டை போட்ட போது

பத்மநாபன், "அவள் எப்படிப் பட்ட குற்றத்தைச் செய்து விட்டு இங்கு வந்திருக்கிறாள் தெரியுமா?" என்று கேட்டதும் என்னுடைய நம்பிக்கை அடியோடு பெயர்ந்து போயிற்று. அங்கிருந்தால் அவர் அதைச் சொல்லிப் பயமுறுத்தலாம். அதன் மூலம் என்னைக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கும்படி நிர்ப்பந்திக்கலாம். போலீஸில் துப்புக் கொடுத்து விடுவோமென்று அவர்கள் சொல்லியிருந்தால் சுலோசனுவாலும், ரமேஷாலும் என்ன செய்திருக்க முடியும்? அதை நினைத்த போது நான் புறப்பட்டு வந்தது எவ்வளவு நல்லது என்று சந்தோஷம் உண்டாயிற்று.

ஆனால் அய்யாக்குட்டியை என்னால் மன்னிக்கவே முடியவில்லை. அந்தப் பாதகனால் வந்த வினை தான் எல்லாம். அவர் மாத்திரம் என் வாழ்வில் குறுக்கிடாமலிருந்திருந்தால் நான் எவ்வளவு நிம்மதியாகக் காலங்கழித்திருப்பேன்? ரங்கதுரை திரும்பி வருவதற்காக என்ன ஆவலுடன் காத்திருப்பேன்? தாம் செய்ததையும் செய்து விட்டு, என் பேரில் பழியைச் சுமத்தி விட்டாரே? அவர் தான் பத்மநாபனுக்கு இப்படிச் சொல்லி யிருக்க வேண்டும்.

ஆனால் அன்று அய்யாக்குட்டி அப்படிச் சொல்லியிரா விட்டால் என் கதி என்ன ஆகி யிருக்கும்? அதை நினைத்த போதே என் உடல் பதறிற்று. அதற்காக அய்யாக்குட்டிக்கு நன்றி செலுத்துவதா? அல்லது என் பேரில் பழியைப் போட்டதற்காக ஆத்திரப்படுவதா? கடவுளே! இது என்ன சோதனை? இப்படி ஒரு தர்ம சங்கடம் யாருக்காவது நேர்ந்திருக்குமா? என் மானத்தைக் காத்தவர் உயிரைக் காப்பது தான் என் கடமையா? என் மீது அவர் குற்றஞ் சுமத்தினால் நான் அதை ஏற்றுக் கொள்வதைத்தான் இறைவன் விரும்புவாரோ?

ஆனால் நான் குற்றம் செய்யாத போது, எப்படி அதைச் செய்ததாக ஒப்புக் கொள்வது? என் மீது வீணாகப் பழி சுமத்தினால் அதைப் பொறுத்துக் கொள்வதா? அது எப்படி முடியும்? இப்படி எண்ணும்போதே எனக்கு நெஞ்சம் கொதித்தது. இருந்தாலும் அய்யாக்குட்டி, பத்மநாபனின் மனத்தில் இப்படிப்பட்ட ஒரு விஷவிதையை ஊன்றியிருக்கக் கூடாது. அவர் அதைப் பயன்படுத்திக் கொண்டால் என் கதி என்ன ஆகும்?

நான் லியோ டால்ஸ்டாய் என்ற ருஷியாவின் தலைசிறந்த எழுத்தாளரின் கதை ஒன்றைச் சென்னையிலிருந்த போது படித்தேன். அதன் மூலம்தான் எனக்கு நிரபராதிகள் சில சமயம் தண்டனை அடைகிறார்கள் என்ற உண்மை புலப்பட்டது.

'ஒரு வியாபாரி பிரயாணம் செய்து கொண்டிருக்கிறான். அவன் தங்கிய இடத்தில் ஒரு கொலை நடந்து விடுகிறது. அவனுடைய மூட்டையில் ரத்தந் தோய்ந்த கத்தி ஒன்று இருந்தபடியால் அவன்தான் குற்றவாளி என்று தீர்மானித்து ஆயுள் தண்டனை விதித்து விடுகிறார்கள்.


வியாபாரி கிழவனாகும் வரையில் சிறையில் வாடுகிறான். கடைசியில் நிஜமாகவே கொலை செய்தவனும் அதே சிறைக்கு வேறு குற்றம் புரிந்ததனால் வந்து சேருகிறான். வியாபாரியைப் பார்த்ததும் கொலை செய்தவன் மனம் கரைந்து விடுகிறது. அவன் தன் குற்றத்தை ஒப்புக் கொள்கிறான். ஆனால் விடுதலை செய்ய ஆட்கள் வந்த போது அந்த நிரபராதி இறந்து போய்க் கிடக்கிறான்.'

இந்தக் கதையைப் படித்து நான் கண்ணீர் பெருக்கியது இன்னும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அந்த நிரபராதியின் நிலையையும் என்னுடைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். ஒரு வேளை என்னுடைய வாழ்க்கையும் அவ்வாறு ஆகிவிடுமோ என்று எண்ணியபோதே கதிகலங்கியது. ஆனால் உடனே ரங்கதுரை இதிலிருந்தெல்லாம் என்னைக் காப்பாற்றுவார்; அவர் வரும் வரையில் நான் ஜாக்கிரதையாக இருந்தால் போதும் என்று அப்போது எண்ணினேன்.

ஆனால் வீரத்தான்பட்டிக்கு நான் சென்றபோது எனக்கு அந்த நம்பிக்கையும் இருக்கவில்லை. ரங்கதுரை என்னைக் கட்டாயம் நிராகரித்து விடுவார் என்று நிச்சயமாக நினைத்தேன். அவ்வளவு தூரம் என் மனத்தைப் பத்மநாபன் குடும்பத்தார் விஷமாகச் செய்து விட்டார்கள். (தொடரும்)

குறைவான விலை

1955 மாடல்கள் 5 வருஷ உத்தரவாதம்



பாக்கெட் கடியாரம்
(ஆஸ்திரியா)

சாதா டயல்	10/-
ரேடியம் ..	12/-
15 ஜுவல்ஸ்	32/-

No. 500A Size 5,



15 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப்	37/-
17 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப்	40/-
21 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப்	58/-

No. 74 **Size 9½**



5 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	18/-
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	28/-
17 ஜுவல்ஸ் க்ரோம் கேஸ்	37/-
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	40/-

PIONEER WATCH CO.

POST BOX NO. 11428, CALCUTTA-6

பாங்க் ஆப் மதுரை லிமிடெட்

ஸ்தாபிதம்: 1943

தலைமை ஆபீஸ்: மதுரை

கிளைகள்:

புதுக்கோட்டை, கோயம்புத்தூர், சேலம்

★

சேவிங்ஸ் பாங்க் கணக்குகள்

சேவிங்ஸ் பாங்க் கணக்குகள் ரூ. 5ம் அதற்கு மேலும் வைத்துக் கொள்ளலாம். வருஷத்துக்கு 3% வட்டி கொடுக்கப்படுகிறது. பாங்கியிலிருந்து கொடுக்கப்படும் செக்குகள் மூலம் பணம் திரும்பப் பெற வசதி. வாரத்திற்கு அதிக பட்சம் ரூ. 1000/- பெற்றுக் கொள்ளலாம்.

பி. எஸ். விஸ்வநாதன்
காரியதரிசி

உங்கள் சுவைக்கு உகந்தது

துஷார்
விட்டமின் சேர்ந்த
வனஸ்பதி


துஷார்
இருமுறை சுத்தம் செய்யப் பட்ட
வனஸ்பதி எண்ணெய்





சுகாதார முறையில் நிரப்பப்பட்டது
கையினால் தொடப்படாதது

அல்காந்த்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்நூல்.



ஸ்டார்ட்டிங் தொந்தரவுகளைத் தவிருங்கள்!

ஒரு நல்ல பாட்டரி தெரிந்தெடுப்பது

எப்படி என்பதை இப்பொழுது அறிந்து கொள்ளுங்கள்


உங்கள் காருக்கு ஒரு ஸ்டாண்டர்ட் பாட்டரி பொருத்தும் பட்சத்தில் ஸ்டார்ட்டிங் தொந்தரவுகள் நின்று விடும். எவ்வகைப்பட்ட காரினும் உன்னத சேவை புரியும்படி பிரத்தியேகமாக உண்டாக்கப்பட்ட பாட்டரிகள் இவை.

உங்கள் காருக்கு ஒரு ஸ்டாண்டர்ட் பாட்டரியே ஏன் சிறந்ததுஎன்பதற்கு ஐந்து விசேஷ காரணங்கள் இதோ:

* பெரும்பான்மையான புதுக் கார்களிலும் பொருத்தப்படுவது இதுவே
* கெட்டியாக்கப்பட்ட ரப்பரில் செய்த கேஸ்
* பூர்ணமாக பரிசோதிக்கப்பட்டது
* நம்பகமான 6-மாத உத்தரவாதம்
* நியாயமான விலைகள்

உங்கள் பணத்திற்கு பூர்ண பயன் கிடைக்க..

ஸ்டாண்டர்ட்




ஸ்டாண்டர்ட் பாட்டரீஸ் லிட்., பம்பாய்

விநியோகஸ்தர்கள்: அடிஸன் & கம்பெனி லிட்.,
158, மவுண்டு ரோடு, மதராஸ்

கிளைகள்: பெங்களூர் & வெல்லிங்டன் (நீலகிரி)

STB. 720



ஆற்றங்கரையினிலே

பேராசிரியர்: ரா.பி. சேதுப்பிள்ளை

21. திருவதிகை – (தொடர்ச்சி)

சிவனடியார்க்கு உரிய திருநீறும் சாதனமும் அணிந்து நின்ற திருநாவுக்கரசரைக் கண்டபோது கடுஞ்சீற்றம் கொண்டான் பல்லவ மன்னன். கொடுமை பல செய்தான். அவன் தீமை யெல்லாம் பொறுத்தார் திருநாவுக்கரசர். சிவனடியே தஞ்சம் எனச் செஞ்சொற் கவி இசைத்தார். அதிகைப் பெருமான் அடி சேர்ந்தார்க்கு அதிர வருவது ஒன்றில்லை. அன்னார் அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்சவருவதும் இல்லை என்று நெஞ்சுறுதி கொண்டார்.

"கன்னவெண் சந்தனச் சாந்தும்
கடர்த் திங்கள் சூளா மணியும்
வண்ண உரிவை உடையும்
வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முரண் ஏறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை."

[திங்கள் - சந்திரன், உரிவை - தோல், ஏறு - காளை, அகலம் - மார்பு, தமர் - அடியார்.]

என்று செம்மாந்து பாடினார். ஒறுத்த பல்லவன் தோற்றான்; பொறுத்த நாவரசர் வென்றார். ஆன்ம வீரத்தால் அரசாங்கத்தின் மிடுக்கையும் அடக்கி விடலாம் என்ற உண்மையை உலகறியக் காட்டினார் திருநாவுக்கரசர். அவர் வாக்கையும் வாழ்க்கை வரலாற்றையும் ஓதி உணர்ந்து மனத் திண்மை பெற்ற தொண்டர்கள் எண்ணிறந்தவர். 'பாட்டுக்கொரு புலவன்' என்று பாராட்டப்பட்ட வீரத் தமிழ்க் கவிஞர் அன்னவருள் ஒருவர். "நாமார்க்கும் குடியல்லோம்' என்று நாவுக்கரசர் முழக்கிய நாதப் பறையின் எதிரொலி பாரதியாரின் வீரப் பாட்டிலே கேட்கின்றது.

"யார்க்கும் குடியல்லேன் யானென்ப
தோர்ந்தனன் மாயையே—உன்றன்
போர்க்கஞ்சு வேனோ பொடியாக்குவேன்

[உன்னை - மாயையே, ஓர்ந்தனன் - உணர்ந்தேன்]

என்று நாவுக்கரசர் வாக்கை ஆதரவாகக் கொண்டு மிகத் தாக்காகப் பாடினார் பாரதியார்.

பாரதநாட்டில் சுதந்திரப்போர் மூண்ட பொழுது வீரப் பாட்டால் ஆங்கில நாட்டு வல்லரசின் ஆணி வேரை அசைத்தார் பாரதியார். அவர் பாட்டுக்கு ஊற்றும் அளித்தது நாவுக்கரசரது திருவாக்கே யாகும். பல்லவ மன்னன் அனுப்பிய மறப்படை வீரரை அப்பெரியார் துச்சமாக எண்ணி அச்சமின்றி இருந்தது போலவே வெள்ளையரசாங்கத்தின் மறப்படை வீரரைப் பழித்துப் பாடினார் பாரதியார். "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற பாரதியார் பாட்டுக்கு அடிப்படை திருநாவுக்கரசர் பாடிய 'அஞ்சுவது யாதொன்றுமில்லை' என்னும் திருப்பாட்டன்றோ?

அறத்தையே படைக்கலமாகக் கொண்டு போர் நிகழ்த்தும் ஆன்ம வீரரை வீரப் படை கொண்டு அரசர் எங்ஙானும் வெல்லுதல் இயலாது என்னும் உண்மையைத் திருநாவுக்கரசர் வரலாற்றால் உணர்ந்த பாரதியார்,

"பச்சையூன் இயைந்த வேல்
படைகள் வந்த போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே"

என்று வீர உணர்ச்சியை ஊட்டினார்.

அறநெறியாகிய இறைவன் திருவடிகளையே பற்றி நிற்கும் அடியார்க்கு இவ் அண்டமே நிலை குலைந்தாலும் அச்சம் என்பதில்லை என்பதை ஆணித்தரமாக அறிவித்தார் திருநாவுக்கரசர்.

"வானம் துளங்கிலென் மண்கம்பம்
ஆகிலென் மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடு
மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர்
வீழிலென் வேலைநஞ்சுண்டு
ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே."

என்ற திருப்பாட்டிலே நாவுக்கரசரது ஆன்ம வீரம் விளங்குகின்றது. "வானம் அசைந்தால் என்ன? பூமி அதிர்ந்தால் என்ன? மலையும் கடலும் நிலை குலைந்தால் என்ன? விரிசுடரும் விண்மீனும் விழுந்தால் என்ன? இறைவனுக்குத் தொண்டாற்றும் அடியார்க்கு ஒரு நாளும் அச்சமில்லை" என்று எழுந்த திருவாக்கைப் பொன் போல் போற்றினார் பாரதியார்.

"உச்சிமீது வான்இடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே"

என்று திருநாவுக்கரசர் காட்டிய நெறியைக் கடைப்பிடித்துப் பாரத நாட்டு மக்களைத் தட்டி எழுப்பினார்.

இவ்வாறு பாரதியார் போன்ற கவியரசு கவிஞரது உள்ளம் கவர்ந்த நாவுக்கரசர் நறுந்தமிழால் அதிகைப் பெருமானுக்கு அர்ச்சனை புரிந்தார்.

"முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய்போற்றி
தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே என் தாதாய் போற்றி"

என்று மலர் தூவி வணங்கினார்.

திருவதிகை வீரட்டானம் என்று சைவ உலகம் போற்றும் திருக் கோவிலில் தொண்டை நாட்டு மன்னன் ஒருவன் திருநாவுக்கரசரது திரு உருவத்தை நிறுவினான்.

"ஈசன் அதிகையில் வாகீசன்
எழுந்தருள
மாசில் பெருங்கோயில் வந்தமைத்தான் — பூசல்
விளைவித்த வேளூடும் வெற்பனைத்தும் செந்தீ
வளைவித்தான் தொண்டையர் மன்"

என்ற செய்யுள் திருவதிகைக் கோயிற் கல்வெட்டிலே காணப்படுகின்றது.

திருநாவுக்கரசர் அணிந்த பாமாலையும் திலகவதியார் சாத்திய பூமாலையும் பெற்ற திருவதிகை முன்னாளில் அதியரைய மங்கை என்று அழைக்கப் பெற்றது.

"அரிதற்கு அரியசீர் அம்மான் தன்னை
அதியரைய மங்கை அமர்ந்தான் தன்னை
எரிகெடிலத் தானை இறைவன் தன்னை
ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தவாறே"

என்ற திருப்பாசுரத்தில் 'அதியரைய மங்கை' என்று அப்பதியைக் குறித்தருளினார் நாவுக்கரசர். எனவே அதிகை என்பது 'அதியரைய மங்கை' என்ற நெடும் பெயரின் குறுக்கம் என்று தெரிகின்றது.

நெடிய பெயர்களைக் குறுக்கி வழங்குதற்குரிய வழிகாட்டியுள்ளனர் தமிழ்க் கவிஞரும் அறிஞரும். சென்னையில் உள்ள மயிலாப்பூரை மயிலை என்று குறுக்கி வழங்கினர். வெண்ணெய் நல்லூர் என்ற ஊர்ப் பெயரை வெண்ணை என்று குறுக்கினார் கம்பர். கொடும்பாளூரைக் கொடும்பை என்றார் இளங்கோவடிகள். நெல்லை நாட்டில் உள்ள கரிவலம்வந்தநல்லூர் கருவை எனக் குறுகிற்று; மாறன்தாய நல்லூர் மாறந்தை ஆயிற்று. அருணாசலம் அருணை என்றும், விருதுநகர் விருதை என்றும் வழங்கப் பெறுகின்றன.

இவ்வாறு முன்னையோர் காட்டிய நெறியைக் கைவிட்டு மனம் போனவாறு ஊர்ப் பெயர்களைக் குறுக்கல் ஆகாது. சென்னையிலே சில ஆண்டுகளுக்கு முன்னே தோன்றியது தியாகராய நகரம். அப்பெயர் தி.நகர் என்று குறுக்கப்பட்டுள்ளது. இக் குறுக்கம் தமிழ் மரபிற்கு ஏற்றதன்று. மக்கள் மனத்தில் மறுக்கமே விளைக்கும். தியாகை என்று அப் பெயரைக் குறுக்குதலே பொருத்தமுடையதாகும்.

தமிழ் மரபினைப் பேணாது ஒழிந்தால் அழகான பெயர்கள் அலங்கோலமாய் விடும். கணபதி நகரைக் க.நகர் என்றும், காந்தி நகரைக் கா.நகர் என்றும், அண்ணாமலை நகரை அ.நகர் என்றும் குறுக்குதல் குற்றமாகும். ஆதலால், அதியரைய மங்கையை அதிகை எனக் குறுக்கி அழகாகப் பாட்டில் அமைத்துக் காட்டிய திருநாவுக்கரசரது செந்நெறியைப் போற்றுவோம்; செந்தமிழ் மரபினைப் பாதுகாப்போம்.



ACME MANUFACTURING CO. LTD.,

Antop Hill, Wadala, Bombay.

(A Walchand Group Industry)

Agents for Madras and Andhra:
Messrs. FOMRA BROTHERS, Fomra House, Mint Street, Madras

ஓர் பரிபூரண சேவைத் திட்டம்

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்


நெருப்பு - கப்பல் - விபத்து

ஆஸ்திகள் : ரூ. 1 கோடிக்கு மேல்

தலைமைக் காரியாலயம் : பாண்டியன் பில்டிங் : மதுரை

கிளைகள் : பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர்,
பெங்களூர், திருவனந்தபுரம், கோயம்புத்தூர், கொச்சி

சுபாஷ் ஏன் தோல்வியுற்றான்




செவன் ஓ'க்ளாக் பிளேடுகளால் உங்களுக்கு என்ன அனுகூலம்

பணம் மிச்சமாகிறது. டீக்கான தோற்றம். க்ஷவரசுகம். பரிசுத்தத்தன்மை. வெற்றிக்கான மார்க்கம்.

தினசரி செவன் ஓ'க்ளாக் பிளேடுகளால் க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்.

7 o'clock BLADES





தெய்வச் சாயை

மௌனக்கல்யன்

நவநீத சர்மா கயிற்றுக் கட்டிலிருந்து எழுந்தார். அவர் முதுகெல்லாம் கயிற்றின் அடையாளங்கள் நன்ருகப் பதிந்திருந்தன.

அவர் முகத்தில் வேம்பைத் தின்றவனைப் போலக் கசப்பு படிந்து கிடந்தது. கரும்பை ருசித்தவன் வேம்பை விரும்புவது உண்டா? வேம்பு, நவநீத சர்மாவுக்குப் புதிது என்பதால்ல. தாஞக வந்த கரும்புதான் அவருடைய இப்போதைய கஷ்டத்துக்கே மூல காரணம். அதையும் பலவந்தமாக ஒருவன் பிடுங்கி எறியும்போது கஷ்டமாகத்தானே இருக்கும்!

வேம்பாகவே இருந்த வாழ்க்கை அப்படியே இருந்திருந்தால், அதுதான் கொடுத்து வைத்தது என்று போயிருக்கும்.

"நான் அப்பவே பிடிச்சு சொன்னேன், யாரையும் நம்பிவிடக் கூடாது, முன்பின் தெரியாமலேன்னு. கேட்டால்தானே!" என்று நெட்டெடுத்தாள் பார்வதியம்மாள் வேறு.

"அப்படி யெல்லாம் ஆகுமென்று கண்டேனு, நான்" என்று வெறுத்துக் கொண்டார் நவநீத சர்மா.

"இப்போ, என்ன செய்யறதாக உத்தேசம்! இந்தப் பெண்ணைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கு" என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் பார்வதி. கமலாவைத்தான் பார்வதி அம்மாள் குறிப்பிட்டது.

"பார்வதி, நான் சொன்னுல் உனக்கு நம்பிக்கையில்லாம லிருக்கலாம். ஆனல் தெய்வம் ஒன்றிருக்கிறதே. அதை மீறி ஒன்றும் நிலைக்காது. இன்றைக்கில்லாவிட்டால், ஒரு நாளைக்கு அது நீதியைக் காட்டத்தான் காட்டும் ..." என்ருர்.

"வறட்டு வேதாந்தம் பேசினுல், பணம் வந்துடுமா! வக்கீலைப் போய்ப் பார்த்து விட்டு வாங்கோ" என்று அவரை மேலும் பேச விடாமல் விரட்டினுள் பார்வதியம்மாள்.

சாதாரண, நடுத்தரக் குடும்பத்தில்தான் பிறந்தார் நவநீத சர்மா. கஷ்ட ஜீவனம் என்றுகூடச் சொல்லலாம்.

ஒரு கம்பெனியில் சொற்ப சம்பளத்துக்குக் குமாஸ்தாவாக இருந்தார். காலையில் போய் விட்டு, 'வாட வாட' ராத்திரி ஏழு மணிக்குத்தான் அவர் திரும்புவார்.

அன்றைக்கு ஏதோ வழக்கத்துக்கு மாருக, சீக்கிரம் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் ஒரு இடத்தில் சிறு கூட்டம் கூடியிருந்தது. விசாரித்ததில் அந்த இடத்தை ஏலத்தில் விற்கிருர்கள் என்று தெரிந்தது.

சென்னை விரிவடையாத காலம் அது; குது, ஏமாற்றம் தலைவிரித்தாடாத நாட்கள். சர்மா சிறிது நேரம் நின்று அந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அங்கு நடந்ததும், வேடிக்கையாகத்தான் இருந்தது. அதிகபட்சமாகக் கேட்டவர் அதை இருபத்தி ஐந்து ரூபாய்க்குக் கேட்டார். இரண்டாவது மணிஅடித்த பொழுது அவரையும் அறியாமல், அவர் வாய் 'மேலே ஒரு ரூபாய்' என்று சொல்லி விட்டது! வேறு யாரும் அதற்கு மேல் கேட்க முன் வராததால், அந்த இடம் அவரது ஆகிவிட்டது.

ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் சண்டை மூண்டுவிட்டதென்று சொல்லிக் கொண்டார்கள். ரஷ்யாக்காரன் சேர்ந்து விட்டதாகச் சொன்னுர்கள். அமெரிக்கா சேர்ந்தது என்று சொன்னுர்கள்.

சென்னையிலிருந்து பீதியால் - உள்ளடங்கிய ஊர்களுக்குக் கிளம்பிய கம்பெனியில் சர்மா வேலையாயிருந்ததும் ஒன்று. அதற்குப் பிறகு அவர் ஏலம் எடுத்த நிலத்தைப் பற்றி மறந்து கூடப் போய் விட்டார் சர்மா.

சண்டை யெல்லாம் ஓயும் சமயம், மறுபடியும் சென்னைக்கு வந்தது கம்பெனி. அவருக்கே புதிதாக இருந்தது சென்னையில் சில இடங்கள். பொருளின் விலை அபரிமிதமாக ஏறியிருந்தது. அப்பொழுதும் அவருக்கு அவர் உடைமையைப் பற்றி நினைவு இல்லை.

திடீரென்று ஒரு நாள், அவர் வீட்டைத் தேடிக் கொண்டு கட்டுக் கடிதங்களைக் கொடுத்து விட்டுப் போனுன் தபால்காரன். அதைப் பிரித்துக்கூடப் பார்க்காமல் ஒரு மூலையில் எறிந்தார் சர்மா. தபால்காரன் கட்டுக் கடிதம் கொடுப்பதும் அவர் மூலையில் போடுவதுமாக நடந்து வந்தது.

அதற்குப் பிறகு, ஆட்கள், முன் பின் அறியாதவர்கள், அவர் வீட்டைத் தேடி வர ஆரம்பித்தார்கள். "சர்மா இருக்கிருரா!" என்று சந்தேகத்துடன் கேட்டுக் கொண்டே வந்தார் ஒருவர்.

சர்மா, பெரிய தோரணையாக, நாகுக்காக இருப்பார் என்று அவர் எதிர்பார்த்திருந்தார் போலும்! ஆகையினுல், அவர், "நான்தான் சர்மா — நவநீத சர்மா" என்று சொன்ன பொழுது அவரை ஏற இறங்கப் பார்த்தார் அந்த ஆசாமி.

அவர் நிலத்தைப் பற்றி, அவர் நினைப்பூட்டிய பிறகுதான் புரிந்தது, சர்மாவுக்கு. அந்த ஆசாமி பேசிக்கொண்டே யிருக்கும் போது வாசலில், வீட்டு விலாசம் சரிதானு என்று ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தார் இன்னெருவர்.

வெகு யூகமாக விஷயத்தைக் கிரகித்துக் கொண்டே சர்மா அவர்கள் இருவருக்குமே "கடுக்காய்" கொடுத்து அனுப்பி விட்டார்.

விளையாட்டுப்போல இருந்தது, கேட்பாரற்றுக் கிடந்த தரிசு நிலம், இருபத்தி ஆறு ரூபாய்க்கு வந்த பொட்டல் காடு — இதை வாங்கப் போட்டி என்றுல்!

நிதான புத்தி மட்டும் இல்லாதிருந்தால், சித்தப்பிரமைகூட ஏற்பட்டிருக்கும்.

ஆனுல் ஐசுவரியம் வரும் போது அதை ஆள்வதற்கு வேண்டிய புத்தியும் கூடவே வருவதுதானே இயற்கை!

அதற்குப் பிறகு இரண்டு மூன்று பேர் வந்து விட்டுப் போய் விட்டார்கள். அக்கம் பக்க நிலவரங்களைக் கவனித்து, தடவைக்குத் தடவை விலையை ஏற்றிக் கொண்டே போனார் சர்மா. கடைசியாகப் பத்தாயிரத்துக்கு மேலாக மதிப்புப் போட்டு வைத்தார்.

அவ்வளவு கிராக்கி ஏற்பட்டிருந்தது அவர் நிலத்துக்கு. சென்னை விஸ்தரிப்பு திட்டத்தை அங்கு அமுல் நடத்தினார்கள். விலைவாசிகள் ஏகத்தாறாக ஏறியிருந்ததால், அவர் சொன்ன விலைக்கு வாங்கி விட்டார்கள். விற்றது போக, பாக்கியில் வீடுகள் வேறு கட்டி, பெரும் வாடகைக்கு விட்டார். வந்த பணத்தை வியாபாரத்தில் ஈடுபடுத்தினார். இப்படியாக, அவர் செல்வம் மடமட வென்று வேகமாகப் பெருகிக் கொண்டே போயிற்று.

அந்தச் சமயத்தில்தான் தமக்குக் காரியதரிசி ஒருவன் அத்தியாவசியம் என்பதை உணர்ந்தார் நவநீத சர்மா.

எவ்வளவோ பேர் வந்தார்கள். அவர்களில் எவரும் அவருக்குத் திருப்தியளிக்க வில்லை. அவர் வேலைப் பொறுப்புகளும், கணக்குகளும் பார்ப்பது கடினமாகிக் கொண்டு வந்தது.

வெகு நாட்களாக, சேது ராமேச்வரம் போக வேண்டும் என்ற ஆசை சர்மாவுக்கு இருந்தது. குடும்ப சகிதமாகப் போனார்.

மகத்துக்கு முதல் நாளிரவு, நிலவு காய்ந்து கொண்டிருந்தது. அவர்கள் தங்கியிருந்த அறையிலிருந்து ஸ்நான கட்டம் இரண்டு மைல் இருக்கும். போவதற்கு மாட்டு வண்டிதான் கிடைத்தது. ஆனால் வண்டி மணலில் அங்கு போய்ச் சேருவதிலிருந்த சிரமத்தைவிட, வெய்யில் வருவதற்கு முன்னே ஸ்நானத்தை முடித்துக் கொண்டு திரும்பி விடலாமென்று, பொழுது விடிய வெகு நேரத்துக்கு முன்பாகவே புறப்பட்டுக் கரையைச் சேர்ந்தார்கள். ஒவ்வொருவராக அப்பொழுதுதான் ஜன நடமாட்டமே ஆரம்பித்திருந்தது. இவர்கள் போய்ச் சேர்ந்த பொழுது, ஸ்நானத் துறையில் ஓரிருவர்தான் இருந்தார்கள். சென்னையிலிருந்தும், கடல் ஸ்நானம் என்னவென்றே தெரிந்து கொள்ளாமலிருந்தவர்கள், சர்மாவின் குடும்பத்தார். ஒரு மாதிரியாக ஸ்நானம் முடித்து கரையேறினார்கள், சர்மாவும் அவர் மனைவியும். பின்னால் வருகிறாள் சுசீலா என்று நினைத்துக் கொஞ்ச தூரம் நகர்ந்து விட்டார்கள். ஆனால் திரும்பிப் பார்த்த பொழுது அவள் வரவில்லை. பதை பதைப்போடு கரைக்கு ஓடிப் பார்த்த பொழுது, அவளை அங்கும் காணோம். "சுசீலா, சுசீலா!" என்று கூவிக் கொண்டிருந்தார் சர்மா. சுசீலா தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருந்தாள். அப்பால் குளித்துக் கொண்டிருந்த யாரோ ஒருவன் நல்ல காலமாக நிலைமையை கவனித்து, தண்ணீரில் குதித்து, அவளைக் காலன் வாயிலிருந்து மீட்டான்.

சர்மாவுக்கு வார்த்தையே கிடைக்க வில்லை, அந்த இளைஞனுக்கு நன்றி சொல்ல! அவன் வேலை கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருந்தான் என்று பேச்சுவாக்கில் அறிந்து கொண்ட சர்மா, தமது விலாசத்தை அவனிடம் கொடுத்து, அவரை வந்து பார்க்கும்படி சொல்லி அனுப்பினார்.

அவனைப் பார்த்த உடனேயே அவர் மனம் மும்முரமாக வேலை செய்தது. அவருடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கடவுளே அவனை அனுப்பி வைத்தது போலிருந்தது.

அவனுடைய பூர்வோத்தரங்களை விசாரிக்கக் கூடத் தேவையில்லை என்று தோன்றியது சர்மாவுக்கு. அவன் பி. ஏ. படித்திருந்தான். நல்ல லட்சணமுமிருந்தது. துருதுரு வென்றிருந்தான் பையன்—இன்னும் என்ன!

பதி வந்த பிறகு, சர்மாவின் வரும்படியில் நல்ல ஏற்றமிருந்தது. அவன் சொன்ன யோசனை ஒவ்வொன்றும் மணியாக இருந்தது.

வீட்டுக்கு இவ்வளவுதான் செலவழிக்கவேண்டும், மார்க்கெட்டில் இவ்வளவுதான் வாங்கலாம் என்று அவன் கணக்காகத் திட்டமிட்டான். நெய், பால்...எல்லாமே அவன் நிர்வாகம்தான்.

நவநீத சர்மாவுக்கு இருந்த வேலையெல்லாம் நாற்காலியில் சாய்ந்து காற்று வாங்க வேண்டியது! அவர் விவகாரங்கள் முழுவதையும் ஒரு அன்னியனிடம் ஒப்புவித்ததில் பார்வதிக்கு இஷ்ட மில்லை. வெளிப்படையாகச் சொல்லப் பயந்து, ஒளிவு மறைவாகச் சொல்லிக்



குத்தி காட்டினாள். சர்மா அதைச் சிறிதும் லட்சியம் செய்ய வில்லை.

நாளாக, நாளாகச் சர்மாவுக்குப் பதியிடம் பிரேமை ஏற்பட்டது. அவன் வைத்ததுதான் சட்டம். அங்கு நடந்தது பதியின் ராஜ்யம்!

இது இப்படியிருக்கச் சர்மாவின் கண்களில் ஏதோ சதை படர்வதாகத் தோன்றியது. பார்வை மங்கிக் கொண்டே வந்து முழுதும் தெரிய வில்லை. பிறர் உதவியில்லாமல் நடமாட முடியாத அளவு பார்வை குறைந்து விட்டது. டாக்டர் அதை ஆபரேஷன் செய்ய இது சமயமல்ல என்று சொல்லி விட்டார்.

தன்னிச்சையாக இருந்து வந்த சர்மாவுக்குக் கட்டிப் போட்டது போல இருந்தது. ஆனாலும் அவருக்கு, பதி யிருக்கும்போது கவலை என்ன! கண் பார்வை மங்கி, ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகிவிட்டது.

அதிர்ஷ்டம் திசை மாறிச் சுற்றுவதாகத் தோன்றியது. அவர் முதலீடு செய்திருந்த பத்திரங்கள், திடீரென்று மதிப்பில் குறைந்து விட்டதாகச் சொன்னான் பதி. வாடகைப் பண பாக்கிக் கணக்கு வயிற்றைக் கலக்கிற்று. பயம் பற்றிக் கொண்டது அவரை.

வயதான அந்தச் சமயத்தில், ஆபரேஷன் செய்து அவர் பிழைப்பது என்ன நிச்சயம்! அப்படியே பிழைத்தாலும் கண் பார்வை, பழைய நிலையை அடையும் என்று அவர் எதிர் பார்க்க முடியுமா!

இரண்டு காரியம் செய்தாக வேண்டும். உடனடியாக ஒன்று, சுசீலாவுக்கு மூன்று முடி விழ வேண்டும். இன்னொன்று முழுப் பணமும் கரையு முன்னமே, பாகு பாடு செய்வது. கல்யாணத்தைப் பற்றி அவ்வளவு கவலையில்லை. வெண்ணையைக் கையில் வைத்துக் கொண்டு, அவருக்கு என்ன கவலை!



சொத்தைப் பாகு பாடு செய்வதுதான் அவர் மூளையைக் குழப்பியது. சுயார்ஜிதச் சொத்து அது. அவர் இஷ்டப்படி செய்ய அவருக்குப் பூரண உரிமை உண்டு. பலசரக்குக் கடைக்காரர் சாமானை மறந்து தேடுவதைப் போன்ற நிலை ஏற்பட்டது அவருக்கு, உயில் எழுதுவதில். ஒரு நாளைக்கு ஒரு பெயராக மாற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். வக்கீலுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. கடைசியாக அதுவும் பதியின் உதவியால்தான் எழுத முடிந்தது.

ஒரு பகுதியைப் பார்வதியம்மாளுக்கும், ஒரு பகுதியைச் சுசீலாவுக்கும், மூன்றாவது பங்கைத் தர்மத்துக்கும், நான்காவது பகுதியை, யாருக்கு இஷ்டமோ அவருக்கு எழுதி விடலாம் என்பது அவன் யோசனை. அதே போல, உயிலெல்லாம் தயாராகி வருவதாகச் சொன்னான் பதி. பதினைந்து

னைக் கெல்லாம், ஆபரேஷன் நடந்தது. நீரில் சர்க்கரை யென்று மிக மிக ஜாக்கிரதையாகத்தான் செய்தார்கள். ஆனால், சிறு கோளாறு காரணமாகப் புது உபாதைகளெல்லாம் அவருக்கு ஏற்பட்டன. டாக்டர்கள் கூடப் பயந்து போனார்கள்.

சர்மா உயிலைப் பற்றியும், கலியாணத்தைப் பற்றியும் பிதற்றிக் கொண்டே யிருந்தார். நினைவு அடிக்கடி தவறியது. உயிலில் கையெழுத்து செய்து விடவேண்டிய அவசியத்தை டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். ஸ்மரணை வந்த பொழுது, 'லபக்' கென்று கையெழுத்தும் வாங்கி விட்டான் பதி. கையெழுத்துப் போடக் கூட மிகவும் சிரமப்பட்டார் சர்மா. ஒருவாறு அந்த வேலை முடிந்தது.

டாக்டர்களை யெல்லாம் ஏமாற்றி விட்டு, படிப்படியாகக் குணமடைந்து வந்தார் சர்மா!

ஒருநாள், கணக்கு வழக்குகளை யெல்லாம் பார்க்க ஆவல் கொண்டவராய், அவர் அதைப் புரட்டினார். தூக்கி வாரிப் போட்டது அவருக்கு. இனம் சொல்லாத செலவுகள். வரவு பக்கம் காலி. இப்படி யெல்லாம் இருந்தது கணக்கு. செலவுகள் மாத்திரமே காட்டப்பட்டிருந்தன. அவருக்குப் புரியாத செலவினங்கள் அதில் காணப்பட்டன.

ஒரு வருஷத்தில், இவ்வளவு சீர்கேடா!

பதியை இரண்டு மூன்று நாட்களாகவே காணவில்லை. அவன் விலாசத்துக் கெல்லாம் ஆளை அனுப்பியும், அவர்கள் வெறுமனே திரும்பினர். அவன் அங்கு இருந்தால்தானே!

ஒரு வாரத்துக்குப் பிறகு, ஒரு நோட்டீஸ்தான் அவருக்கு வந்தது!

ஸ்ரீமான் பதியின் சொத்தாகிவிட்ட, அந்த வீட்டிலிருந்து இருபத்தி நான்கு மணி நேரத்தில் அவர்கள் வெளியேறிவிடவேண்டும் என்று அதில் கண்டிருந்தது. ரத்தம் கொதித்தது, சர்மாவுக்கு. அந்த நோட்டீஸைக் கொண்டு வந்தவனைக் கொன்று விடலாமா என்று தோன்றியது அவருக்கு. பார்வதியம்மாள் புத்தி சொன்னாள். "தலையிலெழுத்து! ஊரிலே போன சனியனை வாங்கி விட்டுப் பிறகு கஷ்டப்பட்டா முடியுமா!" என்றாள்.

வக்கீல் சொல்லி விட்டார்; சொத்தை அவன் பெயருக்கு மாற்றி, பத்திரம் எழுதிக் கொடுத்தாகிவிட்ட பிறகு, சிங்கத்தின் வாயில் போன இரைதான் என்று. அவருக்குச் சர்மா நன்றாக வாழ்ந்த தெல்லாம் தெரியும். ஓரளவு, சிநேகம் கூட உண்டு. அவர் என்ன செய்ய முடியும்!

அன்றைக்குக் கோர்ட்டில் பெரிய கூட்டம். சர்மாவை அந்த வட்டாரத்தில் எல்லோருக்கும் தெரியும். அவரிடம் உதவி பெற்றவர்கள் எத்தனையோ பேர். அவர்கள் எல்லோரும் இன்றைய அவருடைய நிலைமையை எண்ணி உண்மையிலேயே வருத்தப்பட்டார்கள். 'அவர் தர்மம் செய்ய வேண்டும் என்பதற்காகவே செய்தார். அதனால் அவருடைய தருமம் தலை காக்கும். உண்மை எப்பொழுதும் வெல்லும்' என்று சொல்லிக்கொண்டு அவரிடம் கொண்ட அனுதாபம் காரணமாகச் சிலரும், 'இஷ்டப்படி ஆடின ஆட்டம் எப்படி முடிந்தது பார்த்தாயா!' என்று அவரைக் கருவியவர்களுமாகக் கோர்ட்டை நிறைத்து விட்டார்கள்.

ஜட்ஜ் தீர்ப்புச் சொல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அதற்குள், சர்மா தரப்பு வக்கீல் அவசரம் அவசரமாக அவர் காதைக் கடித்தார்!

சர்மா தலையில் துணியைப் போட்டுக் கொண்டு ஓடவேண்டியதுதான் என்று முடிவு கட்டினர் எல்லோரும். இருந்தாலும் ஆவல் அவர்களைக் கட்டுப்படுத்தியது.

"தீர ஆலோசித்தால் இந்த மாற்றல் பத்திரம் செல்லாது. சொத்து அதன் இப்போதைய சொந்தக்காரருக்குத்தான் உரிமை. ஸ்ரீமான் பதி எல்லாவற்றையும் கோர்ட் செலவுள்பட திருப்பிக் கொடுக்க உத்தரவிடுகிறேன்" என்று தீர்ப்புச் சொன்னபோது, ஒரே ஆரவாரமாக இருந்தது! சர்மாவை அங்கு காணவே இல்லை! சிநேகிதர், யாரோ அவரை அலக்காகத் தூக்கிக் கொண்டு, போய் விட்டார்கள்; அளவற்ற சந்தோஷத்தில்!

அதன் பிறகு அவர் சொன்னதை யெல்லாம் அவர் கேட்க அங்கே யில்லை. வக்கீல்தான் அவரைத் தேடிக் கொண்டு வந்தார், அதையெல்லாம் தெரிவிக்க!

அவரைத் தேடிக் கொண்டு ஒரு கூட்டமே வந்து விட்டது.

"அப்படியானால் சொத்து முன்னமேயே உங்களுடையதில்லையா!" என்று வியப்புடன் கேட்டார் ஒருவர்.

"ஆமாம், அது நவநீத சர்மாவுடையதில்லை. குப்பண்ண சர்மாவுடையது" என்றார்.

"இத்தனை சிரமமும் ஏன் எடுத்துக் கொண்டீர்கள், அப்படியானால்!"

"ஏனென்றால் நான்தானே அந்தக் குப்பண்ண சர்மா!"

"ஆ!" என்று ஆச்சரியப்பட்டார்கள் அங்கிருந்தவர்கள். பிறகுதான் சர்மா விளக்கினார்:

அவர் குமாஸ்தா வாழ்க்கை நடத்திய வரையில் குப்பண்ண சர்மா என்றுதான் பெயர் வைத்திருந்தார். அந்தப் பெயரில்தான் சர்க்கார் ஏலம் விட்ட இடத்தை வாங்கினார். தஸ்தாவேஜில் அந்தப் பெயர்தான் பதிவாகியிருந்தது. பட்டணத்தை விட்டு, அப்பால் நகர்ந்த பிறகு பெயரை நவநீத சர்மாவாக மாற்றினார். அதன் பிறகு அதிக நாள் குமாஸ்தாவாக இருக்கவில்லை.

வெகு சிலருக்குத்தான் அந்த விவரம் தெரியும். பெயர் பழமையானதாகத் தோன்றிய அவருக்கு, புதுப் பெயர் நிலைத்து விட்டது.

இந்த விவரமெல்லாம், பதிக்குத் தெரியாது. பாவம்! அவர் சுய நினைவோடாவது இருந்திருந்தால் பத்திரம் எழுதும் போது சொல்லியிருப்பார்! எழுத்துக்கு எழுத்து அவர் கையை அவன் நகர்த்திக் கையொப்பம் வாங்கும்படி இருந்ததால், நவநீத சர்மா என்றே கையெழுத்து விழுந்தது.

அவன் என்ன எழுதினான் என்றோ, எதில் கையெழுத்து வாங்கினான் என்றோ நோட்டீஸ் கிடைத்த வரையில் அவருக்குத் தெரியாது.

பெயர் மாற்றிய விவரத்தை அவர் சர்க்காருக்கு அறிவித்து வைக்கவில்லை.


பத்திரத்தின் கையெழுத்து, குப்பண்ண சர்மா என்றிருந்தபோது, நவநீத சர்மா என்று கையெழுத்திட்டுக் கொடுத்த செலாவணி பத்திரம் எப்படிச் செல்லுபடியாகும்!


குடும்பத்தில்
எல்லோரும் விரும்புவது...
Glaxo
கிளாக்ஸோ பிஸ்கோத்துகள்
சிறந்த பிஸ்கோத்துகள்
பிரிட்டானியா




நீங்கள் என்ன செய்வதாயினும், கோடக் ஸ்னப்ஷாட்டுக்கு அருமையான சந்தர்ப்பம் கிடைக்கும்


இத்தகைய அரிய அனுபவங்களை மீண்டும் நினைவுபடுத்திக்கொள்வது, அலாதி இன்பம் தரக்கூடியதே! மற்றும், என்ன ஆச்சரியம், 'கோடக்' ஸ்னப் ஷாட்கள் அவைகளை உங்களுக்கு என்றென்றும் ஞாபகமூட்டி அகமகிழச் செய்யும். ஞாபகமாக எப்பொழுதும் போதிய அளவு 'கோடக்' பிலிம் உங்களிடம் வைத்திருங்கள்.



வெரிக்ரோம் : வெளிக்காட்சிகளை, சகஜமான வெளிச்சத்தில் எந்த காமிராவைகொண்டும் எடுக்க உகந்தது.



சூப்பர்-XX : துரிதமான செயல் காட்சிகளுக்கும், மங்கிய வெளிச்சத்தில் அல்லது வீட்டினுள் படம் பிடிக்கவும் இன்றியமையாதது.



ப்ளஸ்-X : விளக்கமான பெரிய என்லார்ஜ்மென்டுகள் தரவல்ல தெளிவான படங்கள் எடுக்க மிகச்சிறந்தது.

ஒவ்வொரு வகைப் படத்திற்கும் உகந்த ஒரு 'கோடக்' பிலிம் கிடைக்கும்

கோடக் லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)
பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்

ஆரோக்கிய வாழ்வு

சீதாலக்ஷ்மி குமாரசாமி

21. ஆஸ்த்மாவுக்கு சர்வாங்காசன சேவை

தெய்வப் புலவர் திருவள்ளுவர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே,

"நோய்நாடி நோய்முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்று முடிவு செய்து விட்டார். ஆனால் அம் முடிவைச் சரிவர உணர்ந்து நடவாமையினாலேயே மக்கள் இனம் பல தொல்லைகளுக்கு உட்படுகின்றது. தலைமுறை தத்துவமாக இப் பழக்கம் நம்மிடையே பெருகி இன்று பல தீமைகள் பூதாகாரமாய் வளர்ந்து மக்கள் இனத்தையே அழிக்கத் தொடங்கியுள்ளன. அறிவாளிகளின் லட்சியம், விஞ்ஞானிகளின் லட்சியம், தலைவர்களின் லட்சியம், எப்பொழுதும் உயர்ந்ததாகவே இருக்க வேண்டும். அவர்களின் செயல் ஒவ்வொன்றிலும் இது பிரதிபலிக்க வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் சமூகம் சுபிட்சமாக வாழ முடியும். தேசம் முன்னேற்றம் அடையும். உலகத்தில் சமாதானம் ஏற்படும்.

இன்றைய விஞ்ஞானம் அழிவைத் தேடி வெகு தீவிரமாய் முன்னேறுகிறது. பழைய விஞ்ஞானம் வாழ்வைத் தேடி, உயர்வைத் தேடி, உன்னதத்தைத் தேடி வளர்ந்தது. யோக விஞ்ஞானமானது அவ்வகையில் சேர்ந்ததே. தற்கால விஞ்ஞானத்துக்கும், பழைய கால விஞ்ஞானத்துக்கும் பெரும் வித்தியாசம் உண்டு. தற்கால விஞ்ஞானத்தை வளர்க்க மனித வாழ்க்கையில் எந்தவிதக் கட்டுப்பாடும் தேவையில்லை. வெறும் மூளையை உபயோகித்தே முன்னேற்றம் காண்கிறது. அதில் ஆன்மா சம்பந்தப்படவில்லை. ஒழுக்கம் சம்பந்தப்படவில்லை. தார்மீக உணர்ச்சி சம்பந்தப்படவில்லை. ஆனால் நமது யோகிகள் வளர்த்த விஞ்ஞானம் இதற்கு முற்றிலும் மாறுபாடானது. அதில் ஆன்மா சம்பந்தப்படுகிறது. ஒழுக்கம் அவசியம் பேணவேண்டும். தார்மீக உணர்ச்சிக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது. இந்த விஞ்ஞானத்தை அனுசரிக்க ஒரு தேசத்துக்கோ, ஒரு குழுவினருக்கோ தனி உரிமை என்பது கிடையாது. மனித சமூகம் முழுதும் அனுதினமும் அனுசரிக்கக் கூடியது.

ஆனால் மனித சமூகத்தில் சுலபமாய் வளரக் கூடிய நல்ல உணர்ச்சியானது இயற்கையாகவே கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடக்க மறுக்கிறது. அதனாலேயே அழிவைத் தரும் விஞ்ஞானம் வளர்ந்து ஆக்கத்தைத் தரக்கூடிய விஞ்ஞானம் நலிவுற்றது. எத்தனையோ திட்டங்களுக்காகக் கோடிக் கணக்கில் செலவிடும் அரசாங்கம், ஆக்கத்தையும் ஒழுக்கத்தையும் தரும் யோக விஞ்ஞானத்தை வளர்க்க முன் வர வேண்டும். இந்த விஞ்ஞானம் தற்போது நாம் சரிவர அறிய முடிவதில்லை. அதற்கு வேண்டிய சிரத்தை சிலருக்கு ஏற்பட்டிருந்தாலும் வேண்டிய வசதிகள் கிடையாது. ஆனால் இதே விஞ்ஞானம் மேற்கு நாடுகளில் நன்கு வளர்ந்திருக்கிறது. ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில் வேண்டிய ஆதரவுடன் வளர்ந்து வருகின்றது. பல கலைகளை அறிந்து வர அனுப்பப்படும் தூதுகோஷ்டிகளைப் போல உலக நாடுகளில் யோகக் கலையை விஞ்ஞான ரீதியில் வளர்த்துள்ள நாடுகளுக்கு நமது பிரதிநிதிகளாகத் தூதுகோஷ்டிகள் சென்று அறிந்து வரவேண்டும். பின் நம்முடைய தேசக் கலாசாரத்துக்குத் தக்கபடி, நமது பெரியோர்கள் வைத்து விட்டுச் சென்ற யோகக் கலையை நல்ல முறையில் பரப்பத் திட்டமிட வேண்டும்.

யோகாசனக் கலையின் மகிமை அதை அனுசரித்தவர்களுக்குத்தான் தெரியும். அதிலும் சர்வாங்காசனத்தின் மகிமை சொல்லத் தரமல்ல. சகல குறைகளையும் போக்கும் சஞ்சீவியைப் போன்றது.

விபரீதகரணியின் பலனைவிடப் பன்மடங்கு அதிகமானது என்று ஒரே வாக்கியத்தில் சொல்லி முடித்து விடலாம். சர்வாங்காசனத்தின் வல்லமையைப் பற்றி, ஏற்கெனவே ஆரோக்கிய ரகசியம் எனும் தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது. எனினும் ஆஸ்துமாவுக்குச் சர்வாங்காசனம் எப்படி, எவ்வாறு, எவ்விதத்தில் உபயோகப்படுகிறது என்பதை இவ்விடம் சுருக்கமாய்க் காண்போம்.

முதுகுத் தண்டின் மத்தியில் சதா சர்வ காலமும் ஓடிக் கொண்டிருக்கும் ஒருவித நீர் உண்டு. சுமார் ஐந்தே கால் அவுன்ஸ் அளவுள்ளது. இந்த நீர் மூளைக்கும் முதுகுத் தண்டுக்கும் சென்று வந்து கொண்டிருக்கிறது; அல்லது சுழன்று வந்து கொண்டிருக்கும். இரத்தமானது உடல் அணுக்களுக்கும் உறுப்புகளுக்கும் வேண்டிய போஷணை தந்து அதன் கழிவுகளைச் சுமந்து செல்லுகிறது அல்லவா! ஆனால், அதி முக்கியமான மூளை, முதுகுத்தண்டு இவைகளின் ஆரோக்கியத்துக்காகவென்றே இயற்கை இந்த முதுகுத் தண்டு நீரைத் தனியாக ஏற்படுத்தியுள்ளது. இது தன்னுடைய சக்தியினால் மூளைக்கும் முதுகுத் தண்டுக்கும் ஊக்கம் கொடுப்பதுடன் அவைகளில் ஏற்படும் கழிவுகளை அகற்றும் பெரும் பணியும் புரிகிறது. எனவே உடலில் நடக்கும் இயற்கை வேலைக்கு இந்த நீர் மிக்க துணை புரிகிறது. இந்த நீர் குறையினும் உடல் நோய் கொள்ளும்; அதிகமானாலும் நோய் கொள்ளும். இது வேலை செய்யும் ஓட்டத்தின் வேகம் குறைந்தாலும் நோய் வரும்.

சர்வாங்காசனம் செய்யும்போது பூமியின் ஆகர்ஷண சக்தியினால் தைராய்ட் கோளத்துக்கும், சிரசுக்கும் அதிக இரத்தம் வந்து செல்லுகிறது. அதிக இரத்த போஷணையினால்

சிரசில் உள்ள சகல உறுப்புகளும், தைராய்ட் சுரப்பியும் சுறுசுறுப்படைந்து அவற்றின் வேலைகளை வேகமாகச் செய்கின்றன. அவ்வகையில் முதுகந்தண்டின் நீரும் தன் ஓட்டத்தில் சுறுசுறுப்பைக் காட்டி வேகமாய் ஓடுகின்றது. அப்பொழுது வீட்டை ஜலம் விட்டுக் கழுவிச் சுத்தம் செய்தாற்போல மூளையானது மலினம் நீங்கிப் பளிங்கு போன்று தெளிவு பெறுகின்றது. மூளையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் பன்னிரண்டு வித நரம்புகளும் சுறுசுறுப்படைந்து தெளிவடைகின்றன. அதனால் ஆஸ்துமாக்காரர்களுக்கு மூச்சுக் குழாயின் இறுக்கம் விலகி விடுதலை கிடைக்கிறது.

ஆனால் ஒரு சில ஆஸ்துமாக்காரர்களுக்கு இந்த சர்வாங்காசனத்தை அதிக நேரம் செய்தால் ஒத்துக் கொள்ளாது. மூச்சுத் திணறல் விலகுவதற்குப் பதிலாக அதிகமாகும். ஒரு சிலருக்குத்தான் இம்மாதிரி ஆகின்றது. பெரும்பாலோருக்கு இம்மாதிரி ஆவது கிடையாது. அவ்வாறு மூச்சுத் திணறல் ஏற்படுவதற்குக் காரணம், இந்த முதுகந்தண்டின் நீர் வேகம் கொள்ளுவதேயாகும். இந்த நீர் வேகம் கொண்டு, மற்ற மூச்சு சம்பந்தமான நரம்புகளையும் தூண்டுவதால், சிலருக்கு மட்டும் சர்வாங்காசனத்தில் இரண்டு மூன்று நிமிஷங்களுக்கு மேல் நின்றால் மூச்சுத் திணறும். அவர்கள் கட்டாயம் ஆரம்பத்தில் இரண்டு மூன்று நிமிஷங்களுக்கு மேல் சர்வாங்காசனத்தைப் பழகக் கூடாது. ஆரம்பத்தில் இம்மாதிரி மூச்சுத் திணறல் ஏற்பட்டாலும் இரண்டு நிமிஷம் விதம் இடையில் ஓய்வு எடுத்துக் கொண்டு மூன்று தடவை சர்வாங்காசனத்தைச் செய்து வருவார்களானால் நாளடைவில் மூச்சுத் திணறல் நின்று ஆஸ்துமா குறையும். பின் அதிக நேரம் செய்தாலும் கஷ்டமிருக்காது. சுகம் காணுவார்கள்.

ஆஸ்துமாக்காரர்களுக்கு அதிக மூச்சுத் திணறல் ஏற்படும்போது பிட்யூடரி சுரப்பியைச் சேர்ந்த மருந்தைப் பீச்சுக் குழாயின் மூலம் தொண்டையில் செலுத்துவார்கள். அவ்விதக் கஷ்டம், பணச் செலவு ஏதுமின்றி, சர்வாங்காசனம் செய்தால் விலகும். அவ்வாறு செய்வதால், பிட்யூடரி ரசம் இரத்தத்துடன் கலக்கிறது. அதனால் நாளடைவில் ஆஸ்துமாக்காரர்களுக்கு விடுதலை கிடைக்கின்றது.

சர்வாங்காசனம் செய்யும்போது தைராய்ட் கோளத்துக்கு இரத்தம் நன்கு பாய்ந்து வளப்படுவதால் உடலிலுள்ள எல்லாக் காரியங்களும் ஒழுங்காய் நடக்கத் துணைபுரிகின்றது. பின் ஆஸ்துமாக்காரர்களின் நோய் விலகத் ஆணை செய்யக் கேட்க வேண்டுமா!


பிட்யூடரி ரசம் இரத்தத்தில் கலந்ததும் இரத்த வேகம் சுறுசுறுப்படைந்து நுரை ஈரல் பகுதிக்கு அதிக இரத்தம் செல்லுகின்றது. எனவே காற்றுக் குழாய்க்கு உஷ்ணம் ஏற்பட்டு ஆஸ்துமாவுக்கு இதமளிக்கிறது. பிட்யூடரின் எனும் ஊசி மருந்தும் இந்த வேலையைத் தானே செய்கின்றது! சர்வாங்காசனம் செய்யும்போது அதிக இரத்தம் மூளைக்குச் செல்லுவதால் மூளையின் அடியிலுள்ள 'மெடுல்லா' பாகத்துக்கும் அதிக இரத்த போஷணை கிடைக்கின்றது. முதுகந்தண்டு நீரின் ஸ்நானமும் நன்றாய் ஏற்படுகின்றது. அதனால் அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் வேகஸ் நரம்பு உற்சாக மடைகின்றது. மூச்சு நமது கட்டுக்கு அடங்குகின்றது. எனவே, ஆஸ்துமாவுக்கு நாளடைவில் பரிகாரம் ஏற்படுகின்றது.

நுரை ஈரலுக்குச் சம்பந்தப்பட்ட நரம்புகள், முதுகந்தண்டின் ஐந்தாவது தண்டு மூலமாகப் பிரிகின்றன. சர்வாங்காசன நிலையில் இந்த பாகம் கழுத்துக்குப் பின்புறம் நன்கு வளைக்கப்பட்டு இந்நரம்புக் கூட்டங்கள் இழுக்கப்படுகின்றன. அதனால் இந்நரம்புக் கூட்டங்கள் அதிக இரத்த போஷணை அடைந்து, உணர்ச்சி மிகுந்து அவற்றின் வேலைகளை எல்லாம் சரிவரச் செய்ய முடிகிறது.

இவ்வளவு வேலைகளும் சர்வாங்காசனம் செய்யும்போது ஏக காலத்தில் நடக்கின்றன. இதை எந்த மருந்தினாலும் செய்யச் செய்வது இயலாத காரியம். அவ்வாறு பிட்யூடரின் ஊசி மருந்தின் மூலமாய் இக் காரியங்களில் சிலவற்றைச் செய்தாலும், அவை யெல்லாம் தற்சாந்தியே; அதனால் நிரந்தரமாய் ஆஸ்துமா விலகாது. அதனால்தான் ஆஸ்துமாக்காரர்களாய் உள்ள பெரிய டாக்டர்களே ஒன்று சேர்ந்து ஆஸ்துமாப் பரிசோதனைக் கமிட்டி ஒன்று ஏற்படுத்திப் பல பரிசோதனைகளை நடத்தினர். ஆஸ்துமாவை மருந்தின் துணை கொண்டு நிரந்தரமாய்ப் போக்க முடியாது; தேகப் பயிற்சிகள் மூலமாய்த்தான் பரிகாரம் உண்டு என்று அவர்கள் தீர்மானமாக முடிவு செய்து விட்டார்கள்.

இவ்வாறு முடிவான விஷயத்தை நடைமுறையில் கொண்டு வருவது தான் இன்றுள்ள பெரிய பிரச்னை. இதற்கு மக்களின் மனப்பான்மை மாற வேண்டும். உழைப்பு மனப்பான்மை வளர வேண்டும். அதுவரை மருந்துக்கு அடிமையாகத்தான் வாழ வேண்டியிருக்கும். அதற்குப் பலவிதத்தில் அறிஞர்கள், கலைஞர்கள், அரசாங்கம், தலைவர்கள், பத்திரிகைகள், மக்கள் முதல் சகலரும் பாடு பட வேண்டும். முனைந்து உழைத்தால் ஆகாத காரியமும் உண்டோ!

பெனிசிலின் என்ற அற்புத மருந்து வந்தது. எதற்கு எடுத்தாலும் இந்த மருந்தை உபயோகிக்கும் பழக்கம் நம்மில் பெருகிவிட்டது. அதில் உடனே குணமும் கண்டார்கள். உடல் உழைப்பு ஏதுமின்றிச் சில ஊசிகளினால் குணமாகிறது என்றால் மக்கள் விரும்பத்தானே செய்வார்கள்! ஆனால் மக்கள் போகும் போக்கைக் கண்டு இதைக் கண்டுபிடித்த அறிவாளிகளே இப்பொழுது பயப்படுகின்றனர். ''அவசியமானால் அன்றி இதனை உபயோகிக்கக் கூடாது. அப்படி உபயோகித்தால், பிறகு அவ்வியாதிக்கு வேண்டிய குறிப்பிட்ட மருந்தைச் செலுத்தினாலும் வியாதி குணமாகாமல் போய் ஆபத்தான நிலை ஏற்பட்டு விடுகிறது'' என்று இப்பொழுது பிரசாரம் செய்கின்றனர். ஆனால் மக்கள் கேட்க வேண்டுமே! சிலர் உடம்பிலுள்ள அணுக்கள், இந்தப் பெனிசிலினையும் ஜீரணம் செய்து, எதற்காகவென்று இந்த மருந்து உபயோகப்பட்டதோ அதற்கு உபயோகப் படாமலும் போய் விடுகிறது. எனவே மக்கள் மனப்பான்மை மாறுவதற்குப் போதிய பிரசாரம் அவசியம் தேவை. (தொடரும்)



'அனஸின்'

விஞ்ஞான முறையில்

நான்கு மருந்துகளின்

ஒரு கலப்பு.



'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் :—

1. கொயினா : ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின் : பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின் : ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட் : தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.



அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' ஹிருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.


காந்திய முறைப்படி தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3,300 குரோஸ் தீப்பெட்டிகளும் எங்கள் டிப்போக்களில் செலவாகி வருகின்றன.

எங்கள் 40 குச்சி கோபுர மார்க், சிம்கோ லேட், சிம்கோ சைகிள், 60 குச்சி வேட்டை சிங்கம் தீப்பெட்டிகள்

கடற்கரை, குளிர்ப் பிரதேசங்களுக்கும்
மற்றும் மலபார் மழைக்கும் உகந்தது

சிறந்த சரக்கு உற்பத்தி! சிறப்பான பொதுஜன ஆதரவு!!

★



SIMCO

டிப்போக்கள்:—அருப்புக்கோட்டை, ஆத்தூர், கண்ணனூர், கள்ளிக்கோட்டை, கள்ளக்குறிச்சி, கருநாகப்பள்ளி, காயங்குளம் கொல்லம், கோவை, குடந்தை, சீர்காழி, சேலம், தலைச்சேரி தஞ்சாவூர், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, தர்மபுரி, தென்காசி தூத்துக்குடி, பழனி, பரக்கோடு, பரமக்குடி, பாலக்காடு, ஈரோடு பொள்ளாச்சி, மங்களூர், மாயூரம், மதுரை, மன்னார்குடி, ராசிபுரம் விழுப்புரம், திருக்கோவிலூர், நாகப்பட்டினம், உடுமலைப்பேட்டை

கல்கத்தா ஸ்டாக்கிஸ்ட்: சிங் பிரதர்ஸ், 50, தர்மதோலா தெரு

சிம்கோ, சிவகாசி. S.I. போன் 63. தந்தி SIMCO

JUPITER GENERAL
INSURANCE COMPANY LIMITED

Estd. 1919

COMPLETE PROTECTION


Capital Subscribed	...	...	Rs. 1,50,00,000
Capital Paid Up	...	...	Rs. 23,74,800
Total Assets	...	...	Rs. 3,50,00,000

INSURANCE OF EVERY DESCRIPTION UNDERTAKEN

Head Office: BANK STREET - BOMBAY-1

Principal Office for South India:
"JUPITER HOUSE", 167, BROADWAY, MADRAS-1

BRANCHES AND AGENCIES THROUGHOUT INDIA AND
IN PAKISTAN, BURMA, CEYLON, ADEN AND AFRICA



8. முகமூடி மனிதன்

சோமு

ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்த நாகரத்தினம் வெகு வேகமாக ஆத்திரத்தோடு நடந்தான். அவனுடைய நடையில் எத்தனை ஆத்திரம் இருந்ததோ, அதைவிடக் கொடிய ஆத்திரம் அவன் உள்ளத்தில் இருந்தது.

இனி அக்காளுடைய காரியத்தில் தலையிடுவதில்லை என்று அத்தனை கோபத்தோடு சொல்லி விட்டு வந்திருந்தாலுங்கூட, அவனுடைய மனம் அந்த உணர்ச்சிச் சிக்கலுக்குள்ளிருந்து விடுபடவில்லை. இன்னும் அதிகமாகத் தான் முறுக்கேறிக் கொண்டிருந்தது.

ரவீந்திரன் தன்னிடம் இத்தனை கண்டிப்போடும் சீற்றத்தோடும் நடந்துகொள்ளுவான் என்று நாகரத்தினம் எதிர்பார்க்கவில்லை. உண்மையில், தன்னுடைய கையே ஓங்கும் என்றும், ரவீந்திரன் தனக்குப் பயந்துவிடுவான் என்றுமே அவன் எண்ணியிருந்தான். ஆனால் நடந்தது அப்படி எண்ணியதற்கு முற்றிலும் மாறாக இருக்கவே, நாகரத்தினத்தின் மூளை இப்பொழுது பலமாக வேலை செய்தது.

'கல்யாணியின் விஷயத்தில் நாம் தலையிடக் கூடாது என்று அத்தான் சொன்னால், அதற்காக அப்படித் தலையிடாமலே இருந்து விடுவதா? உண்மையில் கல்யாணிக்குத் தன்னைத் தவிர வேறு யார் கதி? இப்படியே அவளை நிராதரவாக விட்டு விட்டால் இனிமேல் அவள் என்ன ஆவாள்?'

இவ்வாறு நினைக்கும்போது நாகரத்தினத்துக்கு மனம் வேதனைப்பட்டது.

சிறுவயதில் கல்யாணியை எத்தனையோ செல்வமாக வளர்த்தார் தகப்பனார். அவளுடைய மனம் நோகும்படியாக ஒரு வார்த்தை அவர் பேசமாட்டார்! வீட்டில் எந்த முக்கியமான காரியத்தையும் கல்யாணிதான் முடிவு செய்வாள். அவள் கீறின கோட்டைக் கனகசுந்தரம் தாண்டியதே இல்லை. 'கல்யாணியே சொல்லியாச்சு! பிறகு என்ன யோசனை?' என்று தான் கூறுவார். இதெல்லாம் நாகரத்தினத்துக்கு நினைவு வந்தது.

வால்குடியின் வளமான பூமியில் முளைத்த ஒரு செழிப்பான பயிர் நாகரத்தினம். ஏதோ ஒரு விஷச் சத்து எப்படியோ அந்தப் பயிருக்குள் புகுந்து கலந்துவிட்டிருந்தது. என்றாலும், பொதுவாக எந்தக் கொடிய உள்ளத்திலும் ஒரு கோடியில் எப்படியோ ஒரு சிறு மலரைப் போல யாரிடமோ விசித்திரமான முறையில் அன்பு மலர்ந்துதான் இருக்கிறது அல்லவா? அப்படிப்பட்ட ஒரு வாஞ்சை நாகரத்தினத்துக்குக் கல்யாணியிடம் மலர்ந்திருந்தது. அது மறுக்கமுடியாத உண்மை. அந்த அன்பை—அந்த மெல்லிய மலரை—அவனால் தன்னுடைய உள்ளத்திலிருந்து பறித்து எறிந்துவிட முடியவில்லை.

நாகரத்தினம் 'விறுவிறு' என்று நடந்தான். நடக்க நடக்க அவனுடைய மூளையின் வேகமும் அதிகரித்தது!

'இந்தக் குழப்பத்துக்கு எப்படியும் ஒரு முடிவு கண்டாக வேண்டும். இந்த நிமிஷமே, இந்த வினாடியே கண்டாக வேண்டும். தனக்கு எத்தனை செல்வாக்கு, எத்தனை சாமர்த்தியம் உண்டோ அத்தனையும் இதில் பயன்பட வேண்டும்'—இவ்வாறு எண்ணினான் நாகரத்தினம். ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடக்க முனைந்தவன், அப்படியே மறு பக்கம் திரும்பி ஊருக்குள்ளே பாலக்கரைத் திருப்பத்திலே நடக்க ஆரம்பித்தான்.



'உஸ்தாத் தான் இதற்குச் சரியான புகல்—' என்று அவனுடைய உள் மனம் சொல்லிக் கொண்டிருந்தது.

பாலக் கரையில் மீரான் உஸ்தாத் ஒரு பெரிய பயில்வான். அந்த வட்டாரத்தில் எந்தக் கலகம், எந்தச் சண்டை எத்தனை பெரிய மனிதருக்குள் நடந்தாலும் அவரை ஒரு வார்த்தை கேட்டுக் கொள்ளாமல் விஷயம் முருகாது. எப்படியாவது ஒரு வகையில் உஸ்தாதின் தொடர்பு அதில் இருந்துதான் ஆகவேண்டும்!

உஸ்தாத் மீரானுக்குப் பல சீடர்கள் உண்டு. சிலம்ப விளையாட்டு, கத்தி வீச்சு, சுருளிச் சுழல், குஸ்திச் சண்டை, கம்பயேற்றம் முதலிய பலவகையான பயிற்சிகளும் அவருடைய 'கோதா'வில் நடைபெறும். உடம்பை எடுத்து வெளியே வளைய வருகிற எந்த பயில்வானும், அவரிடம் ஒரு நாளாவது சீடன் என்று 'சலாம்' வாங்கித்தான் இருப்பான்!

மீரான் உஸ்தாத் வாக்கு நாணயம் உள்ளவர். எந்தக் காரியத்தையும் நன்றாக யோசித்தே முடிவுக்கு வரக் கூடியவர். ஒருதரம் ஒரு முடிவுக்கு வந்து விட்டால், பிறகு என்ன எதிர்ப்பு வந்தாலும், அசைய மாட்டார். இதனால் சீடர்களுக்கு அவரிடம் அபாரமான பக்தி. அந்த ஊர்ப் பெரிய மனிதர்களுக்குமே அவரிடம் ஒரு பிரியம் உண்டு. காரணம், கூடியவரை நியாய விரோதமான காரியத்தை அவர் செய்ய மாட்டார், ஆலோசனை உள்ளவர் என்று. ஆனால் ஒன்று. தனக்கு வேண்டியவன் ஒருவனுக்கு ஒரு கெடுதல் நேர்ந்து விட்டது என்றால் வேறு எதையுமே கவனிக்க மாட்டார் அவர். உயிரையே கொடுக்க நேரிட்டாலும் அஞ்சாது முன்னின்று செய்கிற தீரர்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு, நாகரத்தினம் சம்பிரதாயத்துக்கு ஒப்பத் திருச்சியிலே "படி"த்துக் கொண்டிருந்த காலத்தில், உஸ்தாத் மீரானிடம் சிலம்பம் பயின்றதுண்டு. லால்குடியில் ஒரு பெரிய வீட்டுப் பிள்ளை என்கிற நினைவில், உஸ்தாதும் அவனிடம் மிகவும் பிரியமாக நடந்து வந்தார். அவனுடைய மிடுக்கான சிலம்ப ஆட்டம் இந்தப் பிரியத்தை அதிகப்படுத்திற்று. ஆனால் கலாசாலையில் மேல் வகுப்பில் சேர்ந்த பின்னர் நாகரத்தினம் படிப்பில் அக்கறை செலுத்தாமல், 'குஷாலா'க நடக்கத் தொடங்கியதும் அவனைக் கண்டிக்க ஆரம்பித்தார் உஸ்தாத். 'சிலம்பம் குஸ்தி என்று எத்தனை படித்தாலும், எத்தனை கெட்டிக்காரப் பயில்வானாக விளங்கினாலும், நாகரத்தினத்தைப் போன்ற ஒரு பெரிய வீட்டுப் பிள்ளைக்குப் பள்ளிக்கூடப் படிப்பிலேதான் அதிகமாகக் கவனம் இருக்கவேண்டும்' என்பது

உஸ்தாதின் முடிவு. இந்த முடிவையே அவர் அதிகமாக வற்புறுத்த வற்புறுத்த, நாகரத்தினம் சிலம்பப் பயிற்சியையும் ஒரு மாதிரியாக அசட்டை செய்ய ஆரம்பித்தான். பிறகு அவன் பம்பாய் சேட்டிடம் உத்தியோகத்துக்குப் போன பின், நாகரத்தினத்துக்கும் உஸ்தாதுக்கும் நெருங்கிய தொடர்பு நின்று போய் விட்டது. ஆனாலும் எப்பொழுதாவது அவனை எங்கேயாவது சந்திக்க நேர்ந்தால், அன்போடு விசாரித்து விட்டுத்தான் மேலே நடப்பார் உஸ்தாத். நாகரத்தினத்துக்குச் சிலம்ப விளையாட்டில் இருந்த அந்த மிடுக்கு, உஸ்தாதை வெகு தூரம் கவர்ந்திருந்தது என்பது முற்றிலும் உண்மை.

இந்த நிலைமையிலேதான் இப்பொழுது அவருடைய வீட்டை நோக்கி நடந்தான் நாகரத்தினம்.

இரவு பன்னிரண்டு மணியிருக்கும், நாகரத்தினம் உஸ்தாத்தின் வீட்டுக் கதவைத் தட்டியபோது. இரண்டு தடவை தட்டுவதற்குள் ஒரு சீடன் வேகமாக ஓடி வந்து கதவைத் திறந்தான்.

உள்ளே பெரிய தோட்டம். தோட்டம் என்றால் மரங்கள் அடர்ந்து நின்ற சோலை இல்லை. ஓரத்தில் வரிசையாகத் தென்னை மரங்கள். இரண்டொரு மருத மரங்கள். தோட்டத்தின் மத்தியில் மணல் விரித்திருந்த மைதானம். அதில் அங்கங்கே பயிற்சிக்கான கோதாக்கள்.



அது பண்டிகைச் சமயம் ஆனதால், சுரீர் என்ற இரைச்சலோடு எரியும் 'பெட்ரோமாக்ஸ்' வெளிச்சத்தில் சீடர்களின் பயிற்சி அந்தப் பன்னிரண்டு மணி வேளையிலும் கோதாவில் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. உஸ்தாத் கோதா மணலிலே துண்டை விரித்து உட்கார்ந்துகொண்டிருந்தார்.

"யாரது? நம்ப நாகரத்தினமா இந்த நேரத்தில்?" என்று கேட்டுக்கொண்டே மிக்க பிரியத்தோடு கோதாவை விட்டு வெளியே வந்தார் உஸ்தாத். மிகவும் விநயத்தோடு தன்னுடைய இரண்டு கைகளையும் நெற்றியில் கொண்டு தூக்கி, அவருக்கு 'சலாம்' செய்து, அந்த வளையாத உடம்பை வளைத்தான் நாகரத்தினம்! உஸ்தாத் புன்முறுவலோடு அவனை ஆலிங்கனம் செய்து



கொண்டே கோதாவை விட்டுத் தள்ளி வந்தார்.

"உஸ்தாத், உங்களோடு ரகசியமாக ஒரு அவசர விஷயம் பேச வேண்டும்" என்றான் நாகரத்தினம்.

"தம்பிகளா! ஆட்டம் நடக்கட்டும். நான் இதோ வந்து விடுகிறேன்" என்று சீடர்களிடம் சொல்லி விட்டு, நாகரத்தினத்தைக் கூட்டிக் கொண்டு தம்முடைய வீட்டு மாடிக்கு வந்து பாயை உதறி விரித்தார் உஸ்தாத்.

"உக்காரு தம்பி நாகரத்தினம்!" என்றார் மீரான் அன்போடு.

அவர் உட்கார்ந்த பிறகு, அவருக்கு எதிரில் நாகரத்தினம் பவ்யமாக உட்கார்ந்து கொண்டான்.

"சரி, சங்கதியைச் சொல்லு சீக்கிரம். கோதாவிலே பிள்ளைகள் காத்திருக்குது!" என்றார் உஸ்தாத்.

நாகரத்தினம் காதும் காதும் வைத்தாற் போல் உஸ்தாத் மீரானிடம் ரகசியம் பேச ஆரம்பித்தான்.

* * *

தேவர் மன்றத்திலிருந்து அத்தனை குழப்பத்தோடு காரிலே புறப்பட்டுத் தன்னைக் கொண்டு வீட்டில் விட்டு விட்டு, அத்தனை வேகமாக ரவீந்திரன் ஆஸ்பத்திரிக்குச் சென்றது சந்திரிகாவைச் சஞ்சலப் படுத்தியது. 'நாட்டியமணி' என்று பட்டம் சூட்டிக் கொண்ட நேரம் என்ன நேரமோ தெரியவில்லையே!—என்று எண்ணி வருந்தினாள் சந்திரிகா.

கடந்த சில நாட்களாகவே அவளுடைய உள்ளத்தில் நிம்மதி கெட்டிருந்தது. அரங்கேற்றம் நடந்த அன்றிலிருந்து இந்தக் கலக்கம் அதிகரித்தது. இப்பொழுது இப்படி ஒரு சம்பவமும் சேர்ந்து கொண்டு அவளுடைய இதயத்தை வாட்டி எடுத்தது.

இந்த உலகில் சந்திரிகாவின் மனத்தைச் சரியாகப் புரிந்து கொண்ட ஒரே மனிதன் ரவீந்திரன்தான். அதேபோல் அவனுடைய மனத்தைப் பூரணமாகப் புரிந்துகொண்ட ஒரே பெண் சந்திரிகாதான். இப்பொழுது அந்த இரண்டு மனங்களுமே, பாவம், ஒரு நிலையில் இல்லை!

அமாவாசை இருட்டு 'கருங்கும்' என்று இருந்தது. இரவு வெகு நேரம் ஆகி விட்டதால் தெருவில் ஜன நடமாட்டம் இல்லை. வீட்டின் கதவை உள்ளே தாளிட்டுவிட்டு, மாடி அறையிலே மின்சார விளக்கைப் போட்டபடி வெகு நேரம் வரை நாற்காலியிலேயே உட்கார்ந்திருந்தாள் சந்திரிகா. ரவீந்திரன் தன்னோடு பேசிக் கொண்டிருக்கும்போது எத்தனை வேகமாகப் பொழுது ஓடி விடும்! இப்பொழுதோ பொழுது நகருவதாகவே தோன்றவில்லையே! சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். மணி பன்னிரண்டரை. பெரிய முள் ஆற அமர யோசித்து நகர்ந்து கொண்டிருந்தது. சின்ன முள்ளோ நகர மாட்டேன் என்று ஒரேயடியாகச் சாதித்துக் கொண்டே இருந்தது!

'அவர் இன்னும் திரும்பி வரக் காணோமே. போன இடத்தில் என்ன நேர்ந்ததோ தெரியவில்லையே!' என்று கவலைப்பட்டாள் சந்திரிகா.

'நாகரத்தினம் பொய்க் கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னாரே. ஒரு வேளை அப்படியில்லாமல் உண்மையிலேயே ஏதாவது இசைகேடாக நேர்ந்து விட்டிருக்குமோ? நாகரத்தினம் எழுதியிருந்தபடி மெய்யாகவே கல்யாணி அம்மாளுக்கு ஜன்னிதானோ? அப்படியானால் வாழ்க்கையில் இதுவரை தான் அவனிடம் சொல்ல வேண்டும், சொல்ல வேண்டும் என்று இதயத்துக்குள்ளேயே வைத்து வைத்துக் கலங்கிக் கொண்டிருக்கும் அந்த

முக்கியமான செய்தியை இனிமேல் அவளிடம் எப்படிச் சொல்வது?'

இப்படி நினைத்ததும் சந்திரிகாவுக்குக் கண் கலங்கியது. 'இராது. அப்படி ஏதும் நேர்ந்திருக்காது. ஆனால் இது வரை ஒரு தகவலும் வரவில்லையே! அதுவும் நல்லதுக்குத்தான். தகவல் வராதவரை க்ஷேமம்'—இப்படி ஒரு நினைப்பு நினைத்துக் கொண்டாள் சந்திரிகா.

மணி ஒன்று அடித்தது. ஒன்றரை அடித்தது. இரண்டும் அடித்து விட்டது. கடிகாரத்தின்முள்—பெரிது, சிறிது இரண்டுமே—நகர்ந்து கொண்டுதான் இருந்தன! பொழுது நிற்காமல் நடந்துகொண்டுதான் இருந்தது. ஆனால் ஆஸ்பத்திரிக்குச் சென்ற ரவீந்திரனைத்தான் காணோம்!

எங்கோ வெகு தொலைவில் ரயில் கூப்பிடும் ஓசை கேட்டது. திருச்சி ஜங்ஷன், பாலக்கரை, கோட்டை, டவுன் என்று எத்தனை ஸ்டேஷன்கள் வீட்டைச் சுற்றி அருகருகே இருக்கின்றன. ஏதாவது ஒன்றில்லா விட்டால் இன்னொன்றில் நின்று ரயில் ஊதிக் கொண்டுதான் இருந்தது. அந்த ஓசையைத் தவிர எங்கோ தெரு நாய்கள் இடையிடையே குரைக்கும் ஓசையும் கேட்டது. மற்றப்படி அந்த அமாவாசை இரவில் வேறு எந்த சப்தமும் கேட்க வில்லை.

மின்சார விளக்கின் ஸ்விட்சை அணைத்து விட்டுக் கட்டிலிலே வந்து கவலையோடு படுத்தாள் சந்திரிகா.

'நாகரத்தினம் ரொம்பப் பொல்லாதவன் ஆயிற்றே! ஆஸ்பத்திரிக்குப் போன இடத்தில் அவனோடு ஏதாவது சச்சரவு வந்து விட்டதோ? ஆஸ்பத்திரிக்குப் போகும் போதே அவனிடம் ஒரே ஆவேசத்தோடு அல்லவா போயிருக்கிறார்! ஐயோ, இவருக்குக் கோபம் பொங்கி வந்தது என்றால் யாராலும் அதைத் தடுத்து நிறுத்த முடியாதே!'



இப்படி எண்ணியதும் சந்திரிகாவுக்குக் கண்ணீர் கொட்டியது.

'கோபப்படுவார். ஆனால் அவசியம் இல்லாமல், தகுந்த காரணம் இல்லாமல் கோபப்படுகிறவர் இல்லையே. பொறுமையை இழந்தாலும் அறிவை இழக்க மாட்டாரே' என்று ஒரு நினைவு. அதில் சற்று ஆறுதல் உண்டாயிற்று சந்திரிகாவுக்கு. அடுத்த கணம்,

"சிறுமை கண்டு பொங்குவாய்"

என்ற பாரதியாரின் பாடல் அவளுக்கு நினைவு வந்தது. மனிதர்களின் சிறுமையைக் கண்டால் பொங்கவே செய்வார் அவர். சிறுமையைக் கண்டுதான் பொங்குவார். பெருமைக்குத் தலை வணங்குவார். அவருடைய சாந்தம் யாருக்கு வரும்? ஆனால் சிறுமை நிறைந்தவன்தானே இந்த நாகரத்தினம்!

"தெய்வமே' அவருக்கு ஒரு கெடுதலும் வரக் கூடாது. குழந்தை மாதிரி அவருடைய மனம். அந்த மனத்துக்குச் சிறு கெடுதலைக் கூடத் தாங்கும் சக்தி கிடையாது. சுக்குநூறாகச் சிதறி விடும் அவருடைய உள்ளம். பாடாகப் படுவாரே, துடியாகத் துடிப்பாரே அவர்! ஐயோ! என்ன செய்வது இதற்கு? என்னால் எத்தனை குழப்பம் எல்லாம் நேரிடுகிறது."

சந்திரிகா விம்மி அழுதாள். தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு ஒரு குழந்தையைப் போல் தேம்பினாள். மறு கணம் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு கைகளைக் கூப்பிய வண்ணம், "தெய்வமே! தாயுமானவனே, அவருக்கு ஒரு தீங்கும் நேரக் கூடாது. அப்படி நேர்ந்தால், அந்த விநாடியே, என்னுடைய உயிரைக் கொண்டு போய் விடு. அவருக்கு ஒரு கஷ்டம் நேர்ந்து அதைப் பார்க்கும்படி என்னை இந்த உலகத்தில் வைத்திருக்காதே!" என்று பிரார்த்தனை செய்தாள் சந்திரிகா. அப்படியே துவண்டு போய் மறுபடியும் படுக்கையிலே விழுந்தாள். துடித்தாள். கண்ணீர் விட்டாள்!

தெரு வீதியில் நாய்கள் குரைக்கும் சப்தம் பலமாகக் கேட்டது.

'நாய் குரைக்கிறதே. ஒருவேளை அவர் தான் வந்து விட்டாரோ? நாய்களுக்கு என்னதெரியும்? நல்லவர்கள் தெருவீதியில் போகும்போதுகூடக் குரைக்கத்தான் செய்கின்றன--நாகரத்தினத்தைப் போல்!'

இப்படி யெண்ணியதும் துக்கத்தைமீறி ஒரு புன்முறுவல் வந்தது. படுக்கையை விட்டு எழுந்து வந்து ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்தாள். யாரையும் காணோம்!

மனம் உடைந்துபோய்ச் சந்திரிகா மீண்டும் படுக்கையில் வந்து படுத்தாள். நாய் மறுபடியும் குரைத்தது. இப்பொழுது அந்தக் குரைப்பின் ஓசை முன்னைவிட அருகிலே கேட்டது.

சந்திரிகாவுக்கு இப்பொழுது பயம் உண்டாயிற்று. அந்த வீட்டில் இதற்கு முன்பு அவள் இப்படித் தனியாக இருந்ததே இல்லை. நாயின் குரைப்பு அதிகரிக்கும் வரை, தான் தனியாக இருப்பதான நினைப்பே அவளுக்கு ஏற்படவில்லை. அவ்வளவு தூரம், அவளுடைய உள்ளத்தில் வேறு எந்த நினைப்புக்கும் இடம் இல்லாதபடி, சஞ்சலம் ஆட்கொண்டிருந்தது.

ஆனால் இப்பொழுது நாய்களின் குரைப்பு அதிகரித்ததும் பயம் மெதுவாக மொட்டு விட ஆரம்பித்தது.



'தாயுமானவர் தெருவில் இண்டும் இடைஞ்சலுமான ஒரு வீட்டில் எங்கோ ஒரு மூலையில், கண்ணற்ற மாடியிலே தன்னந் தனியாக இருக்கிறோமே!' என்று ஒரு விநாடி எண்ணிப் பார்த்தாள். உடம்பெல்லாம் வியர்த்தது!

அளவு மீறிய சஞ்சலத்தின் போதெல்லாம் ரவீந்திரன் தன்னை மறந்து சொல்லிக் கொள்ளும் திருமூலர் திருமந்திரப் பாடல் சந்திரிகாவுக்கு நினைவு வந்தது. மனத்துக்குள்ளே அந்த மந்திரத்தைச் சொல்லிக் கொண்டாள்.

"மந்திரம் ஆவதும்
மாமருந்து ஆவதும்
தந்திரம் ஆவதும்
தானங்கள் ஆவதும்
சுந்தரம் ஆவதும்
தூய்நெறி ஆவதும்
எந்தை பிரான்தன்
இணையடி தானே!"

திரும்பத் திரும்ப அந்தப் பாடலையே சொல்லித் தன் மனத்தை அந்தப் பாடலிலேயே செலுத்துவதைத் தவிர வேறு வழி தோன்றவில்லை, சந்திரிகாவுக்கு. இடையில் ஒரு விநாடி உதடு அதைச் சொல்லாமல் இருந்து விட்டாலும், உடனே 'பகீர்' என்று ஒரு பயம்!

'எந்தை பிரான்தன் இணையடி தானே' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, கடும் சோதனையா? இதென்ன? மாடி ஓட்டில் ஒரு கல் விழுந்து உருண்டோடுகிறதே! சந்திரிகாவுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது.

'யாரோ வெளியே நாயைத் துரத்துவதற்காக எறிந்தகல்லாக இருக்குமோ?' என்று ஒருகணம் நினைத்தாள். அப்படியானால், வெளியே எறிந்த கல் இங்கு வந்து விழ வேண்டும் என்றால், ஓசை இன்னும் பெரிதாக அல்லவா இருக்க வேண்டும் என்று எண்ணுவதற்குள், இன்னொரு சிறு கல் ஓட்டிலே உருளுவது கேட்டது. அதைத் தொடர்ந்து ஏதோ 'சரசர' என்று சத்தம் வந்தது.



இதயம் 'திக்குத் திக்கு' என்று அடித்தது. முகத்தைத் தலையணையில் நன்றாகப் புதைத்துக் கொண்டு படபட என்று அடித்துக் கொள்கிற நெஞ்சத்தைக் கைத் தாங்கலாகக் குப்புற வைத்துச் சுருட்டி மடக்கிப் படுத்தவாறே, காதை மட்டும் கூர்மையாக வைத்துக் கொண்டு கேட்டாள். மறு விநாடி சிறு சிறு கற்களாக காலைந்து, ஓட்டிலே உருண்டு, மாடியை ஒட்டிய திறந்த 'தட்டொட்டி'யில் விழுந்தன. நிச்சயம் யாரோ ஓட்டின் மேல் நடக்கிறார்கள்!

கையும் காலும் பதறியவளாக, என்ன செய்வதென்று தெரியாமல் திகை மூட்டுவதற்குள், யாரோ மொட்டை மாடியிலே குதித்த ஓசை கேட்டது.

அறைக் கதவு நன்றாகத் தாளிடப்பட்டுத்தான் இருந்தது. அந்த நினைவில், சந்திரிகா கண்களைத் திறந்து பார்த்தாள். ஒரே இருட்டாக இருந்தது. ஜன்னலுக்கு வெளியே இருள். அறையினுள்ளே இருள். உள்ளத்திலும் இருள்தான்.

கண்ணை மூடி விழிப்பதற்குள் ஜன்னல் வழியாக டார்ச் விளக்கின் வெளிச்சம் அறைக்குள்ளே பாய்ந்தது.

உடம்பெல்லாம் நடுங்கிற்று. என்ன செய்கிறோம், என்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் யோசிப்பதற்கு ஓடாத சமயம் அது. படுக்கையிலிருந்து எழுந்து, உள்ளுணர்வின் போக்கிலே அப்படியே நடந்து போய், மின்சார விளக்கின் ஸ்விட்சைப் போட்டாள் சந்திரிகா. மின்சார வெளிச்சம் ஜன்னல் வழியாகப் பாய்ந்து அறைக்கு வெளியே இருந்த மொட்டை மாடியிலே விழுந்தது. என்ன ஆச்சரியம்! அந்த வெளிச்சத்தில் யாரோ முகமூடியணிந்த ஒரு கறுப்பான உருவம், அடுத்த மாடியின் விளிம்புச் சுவரிலிருந்து இந்த மாடிக்குள்ளே கையில் பிடித்த டார்ச்சுடன் குதித்தது தெரிந்தது. மின்சார வெளிச்சத்தில் ஒரு விநாடி உற்றுப் பார்த்தாள். அந்த உருவம் தன்னுடைய மற்றொரு கையில் பிடித்திருந்தது என்ன? கட்டாரியா அல்லது கைத் துப்பாக்கியா?

சந்திரிகாவுக்கு இரண்டு கண்ணும் இருண்டது. தலை 'கிர்' என்று சுற்றியது.

அதே சமயம் இன்னொரு மனித உருவம் பதுங்கிப் பதுங்கிச் சென்று எதிர் வரிசையில் இருந்த ராமநாதன் வீட்டுத் திண்ணையில் ஏறி ஒளிந்துகொண்டது! (தொடரும்)

Godrej கோத்ரெஜ் பூட்டுகளின் மூலம்

பாதுகாப்பை உறுதி செய்துகொள்ளுங்கள்



வலிமை வாய்ந்தது.

நீடித்து உழைப்பது

கைதேர்ந்த தொழிலாளிகளினால் பொருத்தப்படுவதற்கு முன், அதிசூக்ஷ்மமான இயந்திரங்களில் இன்றியமையாத பாகங்கள் வெகு நுட்பமான அளவுகளுக்கு உற்பத்தி செய்யப்படுவதால், கோத்ரெஜ் பித்தளை லிவர்-பாட்லாக்குகளை மறு சாவியினால் திறக்க முடிவதில்லை — அவைகளின் தரம் இணையற்றது. ஆயிரக்கணக்காக வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களில், 650 பேர்களுக்கு மேல் புகழ் பெற்ற கோத்ரெஜ் பூட்டுகளைச் செய்வதில் மாத்திரம் ஈடுபட்டிருக்கிறார்கள்.



பாதுகாப்பு இஞ்சினியரிங்கில் முதன்மையானவர்கள்

2 - அங்குலம்	6-லீவர்	ரூ.	★ 11/12
2½-அங்குலம்	6-லீவர்	ரூ.	13/8
3 - அங்குலம்	8-லீவர்	ரூ.	20/8

இதைவிட அதிகப் பாதுகாப்பையும் மதிப்பையும் பெற முடியாது


போலிகளினால் ஏமாறாதிருப்பதற்கு Godrej கோத்ரெஜ் பதிவு செய்யப்பட்ட வர்த்தகக் குறி இருக்கிறதா என்று கவனியுங்கள்.

பாதுகாப்புச் சாதனங்கள், வீடு, ஆபீஸ், ஆஸ்பத்திரிக்கான .. எஃகு பர்னிச்சர், எஃகு ஜன்னல்கள் ..


புடவைக் கடை
புடவைக் கடை
புடவைக் கடை






"அடே! கீழே வாழைப்பழத் தோல்
என்று கத்தாதேடா! வாழைப்பழத்
தோலை ஏன் கீழே போட்டேன்
என்று அப்பா திட்டுவார்:"


எங்கள் பொம்மைகளை உடைக்க முடியாது.
ஓஹோ!! அப்படியா!!


ரொம்ப உறுத்திக் கொண்டு இருக்கிறது என்ன செய்யலாம்!
கம்பளி அப்படித்தான் உறுத்தும், சூடும் வெய்யில் காலம்!


அமரா


என்னிடம் பேச்செல்லாம் வெட்டு ஒன்று துண்டு இரண்டுதான் தெரியுமா!
நானும் அப்படித்தானுங்க
டாக்டர் — கோபு
ஆஸ்பத்திரி சர்ஜன்


என்ன வெய்யில் சம்மர் டூரா செய்து கொள்ள வேண்டியது தான்.
1
ஜூன்
2
வருத்தமா இல்லாமல் வேறு என்ன பண்ணுவார்.. 'சம்மர் டூரா' செய்து கொண்டு வந்தார். மழை கொட்ட ஆரம்பித்து விட்டது.
3


அப்பா! நீங்கள் ஆபீசில் எல்லாப் பேப்பர் களிலேயும் கண்ணை மூடிண்டு கையெழுத்துப் போட்டு விடுகிறீர்களாமே!.... அதே மாதிரி இதிலேயும் ஒரு கையெழுத்துப் போட்டு விடுங்களேன்."


அவர்கள் விரும்புவது
பாரீஸ்
Parry's
டாபிகள்
அலங்கார வேலைப்பாடமைந்த
காலியன் காஸ்கட்
பெட்டிகளில் கொண்டது.
மிகத் தூய்மையான
பொருள்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது
பாரீஸ் கன்பெக்ஷனரி லிட்.



இளவரசி எழிலி பெயருக்கேற்ப அழகுப் பதுமையாக விளங்கினாள். அரசன் தன் மகளிடம் கொண்ட அளவு கடந்த அன்பு காரணமாக அவளை அருமையாக வளர்த்தான்; கல்வி கேள்விகளிலும் இணையற்றவளாக விளங்கினாள் எழிலி.

விவாக வயது வந்ததும், எழிலியின் வனப்பு மெருகு பெற்று விளங்கியது. தேவகன்னிகையைப் போல, அரண்மனையில் துள்ளி வரும் எழிலியைக் கண்டு இப்போதெல்லாம் அரசனுக்குத் துக்கம் பொங்கியது.

“என் அருமை எழிலரசிக்குத் தகுந்த கணவன் கிடைக்க வேண்டுமே!” என்று நினைத்து, தினம் மனம் வருந்தினான்.

தந்தையின் மன வருத்தத்தை அறிந்த எழிலி, “அப்பா, தாங்கள் ஒன்றுக்கும் வருந்த வேண்டாம். நான் கேட்கும் கேள்விகளுக்கு எவன் சரியான பதில் சொல்லி என்னை வெற்றி கொள்ளுகிறானோ அவனே என் கணவன். இதை நீங்கள் நாடு நகரமெல்லாம் பறையறைந்து தெரியப்படுத்துங்கள். வேறு நாடுகளுக்கும் தூதர்கள் மூலம் ஓலை அனுப்பி இவ் விஷயத்தை அறிவியுங்கள்!” என்றாள்.

“எழிலி, உன் யோசனை சரிதான். அதன்படியே செய்ய மந்திரிக்கு உத்தரவிடுகிறேன். ஆனால் நீ நன்றாக யோசித்து உன் கேள்விகளைத் தயார் செய்து கொள்ள வேண்டுமே! தேச தேசங்களிலிருந்தெல்லாம் ராஜ குமாரர்கள் வருவார்களே...!” என்று கேட்டுச் சற்று வருத்தம் தெரிவித்தான் மலைநாட்டு அரசன்.

உடனே எழிலி கிண்கிணி நாதம் போல் சிரித்தாள். “அப்பா, உங்கள் குமாரி எழிலியை வெறும் முட்டாள் என்று எண்ணி விட்டீர்களா? எத்தனை பெரிய மேதாவி வந்தாலும் என்னிடம் தோற்றுப் போய் விடுவான்......!” என்று கூறினாள்.

“மலை நாட்டு மன்னன் மகள் இளவரசி எழிலி கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லி அவளை வெல்லுபவனுக்கு அவள் மாலையிடுவாள். இருபத்தைந்து வயதுக்கு மேற்படாத எந்த ராஜகுமாரனும் இந்தச் சுயம்வரத்தில் கலந்து கொள்ளலாம்!” என்று ஊரெங்கும் தண்டோராப் போடப் பட்டது. வேறு நாடுகளுக்கும் ஓலைகள் மூலம் இந்தச் செய்தி அனுப்பப் பட்டது.

இந்தச் செய்தி பரவிய சில நாட்களுக்கெல்லாம் அரண்மனைக்குக் கூட்டம் கூட்டமாக ராஜகுமாரர்கள் எழிலியை மணந்து கொள்ளும் ஆவலுடன் வந்து சேர்ந்தனர்.

இளவரசி எழிலியின் இணையற்ற எழிலைக் கண்டு, வந்த ராஜகுமாரர்கள் எல்லோரும் அயர்ந்து போனார்கள். தங்கச் சிலையே ஒரு ஒப்பற்ற அதிசயம். அது வாயைத் திறந்து மதுரமான குரலில் பேசவும் ஆரம்பித்து விட்டால் அப்புறம் கேட்க வேண்டுமா? ஒப்பற்ற அழகியான எழிலியைக் கண்டு பிரமித்த ராஜகுமாரர்கள், அவள் பேச்சைக் கேட்டதும் தங்களை மறந்து விட்டார்கள். ஒன்றும் தோன்றாமல் தோல்வியை ஒப்புக் கொண்டு மௌனமாக வெளியேறினார்கள்.

இப்படியே வருஷங்கள் இரண்டு ஓடி விட்டன. இதற்குள் எழிலியிடம் தோற்று ஓடின ராஜகுமாரர்களுக்குக் கணக்கே இல்லை. இதில் இளவரசி எழிலிக்குக் கர்வம் உண்டாகி விட்டது. ராஜகுமாரர்களைக் கண்டாலே அலட்சியம் ஏற்பட்டு விட்டது அவளுக்கு.

அரசனுக்குக் கவலை அதிகமாகி விட்டது. எழிலுக்கு எவ்வளவோ எடுத்

துச் சொல்லி இந்தச் சுயம்வர நிபந்தனையை மாற்றும்படி அரசன் கேட்டுக் கொண்டான். எழிலி தகப்பனார் பேச்சையே பொருட்படுத்த வில்லை.

எழிலியின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வரும் ராஜகுமாரர்களின் கூட்டமும் குறைந்து கொண்டே வந்தது; தன் குமாரிக்குக் கணவன் கிடைப்பான் என்ற நம்பிக்கையும் அரசனுக்குத் தளர்ந்து கொண்டே வந்தது.

அன்று அரண்மனைக்கு வந்த ராஜகுமாரன் மிகவும் களையாயிருந்தான். அவன் மகா புத்திசாலி என்பதும் மகா வீரன் என்பதும் அவனது அழகிய தோற்றத்திலிருந்தே தெரிய வந்தன.

வழக்கம் போல் இளவரசியின் அந்தப்புரத்துக்கு அந்த ராஜகுமாரனை அரண்மனைச் சேவகர்கள் அனுப்பி வைத்தார்கள். முன் மண்டபத்திலிருந்து அவனை வரவேற்ற அரசன் முகம் மலர்ந்தது. பணிப் பெண்கள் சென்று இளவரசியை அங்கு அழைத்துக் கொண்டு வருவதற்குள் அரசன் தானே அவளைத் தேடிக் கொண்டு வந்து விட்டான். எழிலி சாளரத்தின் பட்டுத் திரைச் சீலை வழியாக ராஜகுமாரனைக் கடைக்கண்ணால் பார்த்தாள்.

"எழிலி, தயவு செய்து உன் பிடிவாதத்தைக் கைவிடு, அம்மா! இவனை என் மனசுக்குப் பிடித்துப் போய் விட்டது. உன் அசட்டுக் கேள்விகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டுப் பேசாமல் இவனுக்கு மாலையிடு!" என்றான் அரசன்.

"அப்பா, அது மட்டும் முடியாது. இந்திரன் வந்தாலும் சந்திரன் வந்தாலும் நான் சொன்ன சொல் தவற மாட்டேன். இவரும் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லித்தானாக வேண்டும்......" என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டாள்.

சுயம்வரம் ஆரம்பித்து விட்டதற்கு அறிகுறியாக டாண், டாண் என்று மணி அடித்தது.

உடனே எழிலி மிகவும் மிடுக்காகத் தன் ஆசனத்தில் அமர்ந்து ராஜ குமாரனைப் பார்த்துக் கேள்வி கேட்கலானாள்.

"ராஜ குமாரரே, இதோ பாரும். என் நீண்ட கூந்தலுக்கு ஒரு உபமானம் சொல்லும்!" என்றாள் அலட்சியமாக.

இந்த முதல் கேள்விக்கே இது வரையில் எந்த ராஜகுமாரனும் சரியாய்ப் பதிலளிக்க வில்லை.

ஆனால் இந்த ராஜகுமாரன் மிகவும் அலட்சியமாக ஒரு புன்னகை புரிந்து, "இது ஒரு கேள்வியா? முதல் கேள்வி பிரமாதமாயிருக்கும் என்று எதிர்பார்த்தேன். ராஜகுமாரி, தங்கள் கூந்தலுக்கு இணை தங்கள் கூந்தலேதான். உம், அப்புறம், அடுத்த கேள்வி?" என்று கம்பீரமாகக் கேட்டான்.



இதற்கு முன் இந்தக் கேள்விக்குப் பதில் அளித்த ராஜ குமாரர்கள், சிரமப் பட்டு இளவரசியின் கூந்தலுக்குக் கார் மேகத்தையும், கருங் கடலையும் இணையாகக் கூறினார்கள். அவர்கள் இளவரசியின் மனத்தை அறிய வில்லை.

ராஜ குமாரனின் பதிலைக் கேட்டு இளவரசி எழிலி அயர்ந்துதான் போனாள். ஆனாலும் சமாளித்துக்கொண்டு, "இள



EPHRILIME
எப்ரிலைம்

அவன் கொடுக்கும் இந்த மருந்தை உட்கொண்ட ஒரு சில நிமிஷங்களிலேயே அவனது ஆஸ்த்மா உபாதைகள் மாயமாக மறையும்.

நீண்ட நாள்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஊனியற்ற மருந்து.

யூனியன் டிரக் கம்பெனி லிட்.

மதராஸ் டிப்போ: 2, ஜோன்ஸ்லேன், மதராஸ்-1

சுலேகா

பௌண்டன் பேனா இங்க்

("எஸ் - 100" ஸால்வெண்ட் கூடியது)

உலகத்திலுள்ள இதர மைகளுக்கு ஓர் அறைகூவல்

தரத்தில் உயர்ந்தது

உயர் ரக பொருள் வாங்கி சுதேசியை ஆதரியுங்கள்



SULEKHA WORKS LTD.

SULEKHA PARK :: CALCUTTA - 32

Branches : DELHI - BOMBAY - MADRAS

மதராஸ் ஆபீஸ்: 5, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை-1

அவர் ஷர்ட்டுகளின் கண்ணைப்பறிக்கும் வெண்மையைக் கண்டு அவர் அலுவலகம் முழுவதுமே ஆச்சரியம் அடைந்தது





எங்கள் அலுவலகத்திலேயே என் எஜமானரின் ஷர்ட்டுகள் அதிகமாக வெண்மையானவை. அவர் சகாக்கள் எல்லோரும், சலவைக்காக மிக்க செலவு செய்தும்கூட, தங்கள் ஷர்ட்டுகள் வெளுப்பாக இல்லாததற்கு காரணம் என்னவென்று அவரை, ஒரு நாள் கேட்கும் வரை ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்தார்கள்.







என் எஜமானர் தன் ஷர்ட்டுகள் வெண்மையாக இருப்பதற்கு, தான் உபயோகிக்கும், அதிசயிக்கத்தக்க புதிய வெளுக்கும் சாதனமான டிரேபால் தான் என தெரிவித்தார்.

வெள்ளை ஆடைகளை (பருத்தி ஆடைகள் அல்லது ஆர்ட் ஸில்க்குகள்) ஸோப்பினால் சுத்தம் செய்து அலசிய பிறகு, டிரேபால் கலந்த ஜலத்தில் ஊறவைத்தவுடன், எந்த ஸோப்பினாலும் அல்லது வெளுக்கும் சாதனத்தினாலும் அளிக்க முடியாத பிரகாசமான வெண்மையை ஆடைகள் அடைகின்றன. கால் ஸ்பூன் அளவு டிரேபால் ஒரு வாளி நிறைய உள்ள ஆடைகளை வெளுப்பாக்குகின்றது.



டிரேபால்

Geigy

துணிகளை மிகுந்த வெளுப்பாகச் செய்கிறது

SISTA'S-AML-4-TAM

வரசியின் கூந்தலுக்கு எந்த மலர் சூடினால் அழகா யிருக்கும்? மல்லிகையா, முல்லையா, ரோஜாவா, கனகாம்பரமா?'' என்று அடுக்கிக் கொண்டே போனான்.

உடனே ராஜகுமாரன் 'குப்' பென்று சிரித்தான். ''எழிலியின் கூந்தலில் சூடுவதனால் மலருக்கு அழகு ஏற்படுமே தவிர, எந்த மலரினாலும் எழிலியை அழகு படுத்திவிட முடியாது. யார் அழகுக்கு அழகு செய்வார்?'' என்றான்.

எழிலி இந்தப் பதிலைச் சிறிதும் எதிர் பார்க்க வில்லை. மேலும் சில கேள்வி களைக் கேட்டாள். ராஜகுமாரன் சளைக் காமல் பதில் சொன்னான்.

கடைசியில் எழிலி ராஜகுமாரனை வேறொரு விதமாக மடக்க எண்ணி, ''நீர் என்னை எந்தக் கேள்வி வேண்டு மானாலும் கேளும். பதில் சொல்லுகி றேன்.....'' என்றாள்.

''ராஜகுமாரி, என் கேள்விக்கு உங்க ளால் பதிலளிக்க முடியா விட்டால்...''

''......இதில் என்ன சந்தேகம் உமக்கு? நான் தோற்று விட்டேன் என்று தீர்மானித்துக் கொள்ளலாம்!''

''......சரி, ராஜகுமாரி! இதோ என் முதல் கேள்வி. எந்தக் கேள்வி கேட் டால் உங்களால் பதில் அளிக்க முடி யாது? சொல்லுங்கள் பதில்!''

இந்தக் கேள்வி எழிலியைத் தூக்கி வாரிப் போட்டது. 'இந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது' என்றால் அவள் தோல்வியை ஒப்புக் கொண்டதாகி விடும். ஒன்றும் சொல் லாமலிருந்தாலும் நிச்சயம் தோல்வி. இந்த நெருக்கடியான நிலையில் எழிலி அயர்ந்துபோய் மௌனமா யிருந்தாள்.

''இளவரசி, தோல்வியை ஒப்புக் கொள்கிறீர்களா?'' என்று கேட்டான் ராஜகுமாரன்.

எழிலி மௌனமாகத் தலை குனிந் தாள். சமயம் பார்த்துப் பணிப் பெண், ரோஜாப் பூமாலையை ராஜகுமாரனிடம் கொடுத்தாள். ராஜகுமாரன் அந்த மாலையை எழிலியின் கழுத்தில் அணிந்து அவளது அழகிய முகத்தை நிமிர்த்தினான். அப்பொழுது எழிலியின் முகம் இன்னும் எழிலுடன் பிரகாசித் தது. மலைநாட்டு அரசனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

பிறகு அரண்மனையில் பிரமாதமாக இளவரசி எழிலிக்கு விவாகம் நடந்தது.

சிறுவர்கள் சித்திரப் போட்டி




1



2

3



1. செ. மோகன், வயது 12, சேலம். 2. ராமு, வயது 6, சின்னக் காஞ்சி புரம். 3. ஆர். முனிசுவரன், வயது 10, பேட்டை, சோளவந்தான்.

பிரசித்திபெற்ற பாண்ட்ஸ் க்ரீம்களின் உதவியால்

உங்கள் வதனத்தை மென்மையாகவும் நிர்மலமாகவும் வைத்திருங்கள்



ஒவ்வொருவருடைய சரும இயல்புக்கும் உகந்தவாறு இரண்டு மேன்மையான க்ரீம்கள்.

எழிலரசியாகத்திகழ எந்தப் பெண்மணியும் ஆசைப்படுவது சகஜமே! அதை உத்தேசித்தே பாண்ட்ஸ் க்ரீம்களின் தயாரிப்பாளர்கள், உங்களுக்கு உதவியாக இதோ இரண்டு அழகு சாதனங்கள் வழங்குகின்றனர். பாண்ட்ஸ் க்ரீம்கள், வரட்சி அல்லது நசநசப்பு மிகுந்த பிரதேசங்களில் உங்கள் சருமத்தைப் பாதுகாப்பதற்கென்றே தயாரிக்கப்பட்டவை; உலர்ந்ததோ, இல்லை எண்ணெப்பசையுடையதோ ஆன எத்தகைய சருமத்திற்கும் பொருத்தமான வகையில் அமைந்தவை. உலகமுழுவதிலும் உள்ள எழில் நங்கையர்களைப் போல் நீங்களும் இந்த க்ரீம்களை பிரதிதினமும் உபயோகித்து. உங்கள் வதனத்தை புதுமலர்ப் புதுமையோங்க வைத்திருங்கள்!



உங்கள் முகப்பொலிவை பாழ்படுத்தும் வரட்சியான பிரதேசங்களில் — பாண்ட்ஸ் கோல்ட் கிரீம் உங்களுக்கு தேவை. அதிலடங்கிய செழிப்பான எண்ணெய்கள் சருமத்திற்கு சமனூட்டி, கடுமையான வெயில் மற்றும் வரட்சிக்காற்றினல் அது வாடி வதங்காமல் காப்பாற்றுகின்றன.



வெப்பம், நசநசப்பு மிகுந்த பிரதேசங்களில் — அல்லது சருமம் இயற்கையாகவே எண்ணெப்பசையுடையதானல்—பாண்ட்ஸ்வானிஷிங்க்ரீம் உபயோகியுங்கள். இம்மெல்லிய க்ரீம் சருமத்துவாரங்களில் படியும் பிசுக்கையும் செத்தஜீவாணுக்களையும் வெளியேற்றி உங்கள் மேனிக்கு சௌமியமான பாதுகாப்பு அளிக்கின்றது.

உங்களுக்கிஷ்டமான பாண்ட்ஸ் க்ரீமை நாள்தோறும் உபயோகியுங்கள். சொற்ப தினங்களில் உங்கள் வதனம் அன்றலர்ந்த மலர்போல் மென்மையாக, புதுமைப் பொலிவுடன் விளங்குவதைக் காண்பீர்கள்—உணரவும் செய்வீர்கள்!

உலகில் எழிலரசிகள் உபயோகிக்கும் க்ரீம்கள்

பாண்ட்ஸ்

கோல்ட் க்ரீம்

வானிஷிங் க்ரீம்



P. 9945



அரிந்து, எரிந்து, கொப்பளிக்கும் எக்ஸீமா 10 நிமிஷத்தில் குணமடைகிறது


நிக்ஸோடெர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸீமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுயாசமாக வைத்துக் கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு படலைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரிந்து, எரிந்து வெந்துபோவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப் போல வழுவழுப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழுவழுப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி - நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி



புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "12 வருஷமாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸீமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப் பிறகு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்.

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகாதவரை நிக்ஸோடெர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப் படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழுவழுப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதற்களித்த உத்தரவாதமே உங்களுக்கான உறுதி.

BD 21



யமுனாவின் கதை!

ஸ்ரீரங்கம் நரஸிம்மன்

வெளி வராந்தாவில் உட்கார்ந்துகொண்டிருந்த யமுனாவின் உள்ளம் வேதனையால் புழுங்கிக்கொண்டிருந்தது. அவள் தகப்பனார் வீட்டிலில்லை. தாயார் மட்டும் பின்கட்டில் ஏதோ காரியமாக இருந்தாள். கையிலிருந்த புஸ்தகங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்ப்பதும் நீண்ட பெருமூச்சு விடுவதுமாக இருந்தாள் யமுனா. முகத்தில் புன்னகைதவழ நின்றுகொண்டிருந்தான் அண்ணாஜி ராவ். அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே யமுனா அடியோடுமாறிவிட்டாள்.

கையில் வைத்திருந்த புஸ்தகங்களை அண்ணாஜியின் முகத்தில் வீசியெறிந்தவாறு, "இதற்கு என்ன அர்த்தம்?" என்று சீறினாள். இரண்டையும் சிறிதுநேரம் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான் அண்ணாஜி. யமுனாவின் கோமள வதனம் விநாடிக்கு விநாடி கோபத்தால் சிவந்து கொண்டிருந்தது. அண்ணாஜியின் முகமும் கலவரத்தால் வெளிறத் தொடங்கியது.

"இதற்கு என்ன அர்த்தம்?" என்று மறுபடியும் கர்ஜித்தாள்.

"அர்த்தமாவது!......வந்து..." என்று தடுமாறினான் அண்ணாஜி. அதற்கு மேல் யமுனாவால் தாங்க முடியவில்லை. உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்த எரிமலை வெடித்துச் சீறிக்கொண்டு வெளி வரத் தொடங்கி விட்டது.

"துரோகி! நயவஞ்சகன் நீ! நல்ல வேளை, இப்பொழுதாவது உன் சொரூபம் தெரிந்ததே! ....தயவுசெய்து என் முகத்தில் விழிக்காதே, போ!" என்று நெருப்பைக் கக்கினாள்.

மேற்கொண்டு அவனால் சிந்திக்க முடியாதபடி யமுனாவின் குரல் அண்ணாஜியின் செவிகளைத் துளைத்தது. "மரம் மாதிரி நிற்கிறாயே, உனக்கு வெட்கமாயில்லை? பொறுமைப் பிண்டமே!..." என்று கூறி விட்டு இலேசாகச் சிரித்தாள். கோப வெறியின் சேஷ்டைகளில் அதுவும் ஒன்று. ஏதோ சொல்ல நினைத்த அண்ணாஜியைப் பார்த்து இளக்காரமாகப் புன்னகை செய்தவாறு, "உனக்கு வாழ்க்கைப்பட வேறு இருந்தேனே!......" என்றாள். மேற்கொண்டு அவளால் பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழியத் தொடங்கியது.

சிறிது நேரம் மௌனமாக நின்று கொண்டிருந்தான் அண்ணாஜி. பிறகு மிகவும் சாந்தமாக, "யமுனா!" என்றான். சட்டென்று யமுனா தலைநிமிர்ந்து பயங்கரமாக அண்ணாஜியைப் பார்த்தாள்.

"பதட்டப்படாமல் நான் சொல்வதைக் கொஞ்சம் கேள், யமுனா!" என்றான் அவன் கெஞ்சும் பாவனையில்.

அவள் முகத்தில் கனல் வீசியது.

"உன்னைப் பற்றி என்னவெல்லாம் கனவு கண்டேன், தெரியுமா? 'நீ என்னுடையவன்' என்ற பெருமையில் பூரித்திருந்தேன். உன்னைக் காணாத ஒவ்வொரு கணத்தையும் நரக வேதனையாக அனுபவித்தேன். உன்னிடம் நான் வைத்திருந்த மதிப்புக்கு ஒரு எல்லை உண்டா? நான் எழுதுவதில் உண்மையாகச் சந்தோஷப் படுபவன் நீதானென்று எண்ணி ஒவ்வொரு கதையையும் எழுதியவுடன் உனக்குப் படித்துக் காண்பிப்பேன். எவ்வளவு முட்டாள் நான்!" துக்கம் நெஞ்சை அடைக்கப் பிரலாபித்தாள் யமுனா.

இப்பொழுது யமுனாவின் முகத்தைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான் அண்ணாஜி.

பிறகு, "யமுனா! இப்பொழுது நான் எது சொன்னாலும் உனக்கு ஏற்காது. தெய்வ சாட்சியாகச் சொல்லுகிறேன்; இது விதியின் கூற்றே தவிர வேறில்லை. நீ நினைப்பது போல நான் அவ்வளவு கிராதகன் அல்ல! நம் அன்பை வளர்த்த காலம், இப்பொழுது நம் பிரிவை விரும்புகிறது. அதன் விருப்பத்துக்கு முன் நாம் என்ன செய்ய முடியும்?" என்று கூறி விட்டு ஒரு கண நேரம் அவளையே வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் அண்ணாஜி. பிறகு விர்ரென்று வெளியேறி விட்டான். வாசற் பக்கமே பார்த்தபடி சிறிது நேரம் நின்று கொண்டிருந்தாள் யமுனா. கொந்தளித்துக் கொண்டிருந்த உள்ளத்திலிருந்து பீறிட்டு வந்த அழுகையை அடக்க முடியாமல் உள்ளே போய்க் கட்டிலில் தொப்பென்று விழுந்து விக்கி விக்கி அழுதாள்.

யமுனா, ஆத்திரக்காரியோ, அகங்காரியோ அல்ல; சகல நற்குணங்களும் கொண்ட சாந்த சொரூபிணிதான். ஆனாலும், அன்று மட்டுமென்னவோ தன்னையும் மீறிப் பேசி விட்டாள்! அதுவும் அவனைக் குறை சொல்ல முடியாது. அண்ணாஜியைப் பார்த்து அப்படியெல்லாம் பேசக் கூடியவளா அவள்?



உண்மையில் அண்ணாஜியிடம் தன் உயிரையே வைத்திருந்தாள் யமுனா. இளம்பருவத்திலிருந்தே வளரத் தொடங்கிய அவர்களது பவித்திரமான அன்பு, பருவ காலத்தில் காதலாகப் பரிணமித்தது. அதோடு அண்ணாஜி, அவளுக்கு முறைப் பிள்ளை. அடிநாட்களிலிருந்தே அவர்களுடைய நட்புக்குப் பெற்றோர்களின் ஆதரவு நிறைய இருந்தது. எனவே, எவ்விதத் தடங்கலுமின்றி அவர்களுடைய சிநேகம் நாளுக்கு நாள் வளர்பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்து கொண்டே வந்தது.

அண்ணாஜியின் வீடு அடுத்த தெருவில் இருந்தது. அவனும், யமுனாவைப் போலப் பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. பி. ஏ., வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவன் படிப்பு முடிய வேண்டுமென்ற ஒரே காரணத்தால்தான் யமுனாவின் திருமணம் நடைபெறாமலிருந்தது. அவளும், அவனுக்காக எவ்வளவு காலமானாலும் காத்திருக்கத் தயாராயிருந்தாள்.

யமுனா, எஸ். எஸ். எல். சி. வரையில்தான் படித்திருந்தாள். யாரும் விரும்பக் கூடிய ஒரு இனிய அழகை அவள் பெற்றிருந்தாள்.

படிப்பை நிறுத்தி விட்டு வீட்டோடு உட்கார்ந்ததும் நிறைய நாவல்கள் படிப்பதும், பத்திரிகைகள் படிப்பதுமாகப் பொழுதைக் கழித்தாள். படிப்பதென்றால், வெறும் மேலாகப் படித்து விட்டு வீசியெறியக் கூடியவளல்ல; ஆழ்ந்து படிப்பாள். பிறகு அதைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்துப் பார்ப்பாள். நாளுக்கு நாள் அவளுடைய இலக்கிய ரஸனை வளரத் தொடங்கியது. கடைசியில் அதற்கே அடிமையாகி விட்டான்! சதா சர்வகாலமும் ஏதாவது ஒரு புஸ்தகமும் கையுமாகத்தான் காட்சியளிப்பாள். அதன் பலனாக, அவளுக்கும் எழுத வேண்டுமென்றதொரு வெறி பிறந்து விட்டது!

இரண்டு வருஷம் சென்று விட்டது! காலமும் அனுபவமும் அவளுக்குச் சிறந்த சிறுகதை எழுதும் மார்க்கத்தைப் போதித்தன. போதாக்குறைக்கு அவளுடைய எழுதுகோலின் தூண்டுகோலாக இருந்தான் அண்ணாஜி.

காதல் வாழ்க்கையிலும் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தாள் யமுனா. அல்லும் பகலும் அண்ணாஜியின் நினைவாகவே கற்பனையை ஓட்டினாள். ஒருநாள் அவனைப் பார்க்காவிட்டாலும் அவளுக்கு ஒரு யுகம் போலிருக்கும். இந்த நிலையில் ஒரு மாதகாலம் அண்ணாஜியைப் பிரிய நேரிட்டது. கல்லூரி மாணவர் குழுவுடன் வெளியூர் சுற்றுப் பிரயாணத்துக்குக் கிளம்பினான் அண்ணாஜி.

பிரிவு என்ற சொல்லைக் கேட்டதுமே யமுனாவின் வயிற்றை என்னவோ செய்தது. "போய்த்தான் ஆகணுமா?" என்றாள். அண்ணாஜி இலேசாகச் சிரித்துவிட்டு, "நான்கு வாரங்கள் தானே யமுனா!... கூடிய சீக்கிரமே நாம் இருவரும் அந்த இடத்துக்கு ஒரு முறை போய் வருவோம். உனக்கும் கற்பனைகள் ஓடும்!" என்று அவளுக்குச் சமாதானம் சொன்னான்.

வேறு வழியின்றி அரை மனசோடு விடை கொடுத்தாள். ஒரு மாதம் தான்; ஆனால், அவள் அனுபவித்த வேதனை— அப்பப்பா! அதை விவரிக்க இயலாது.

அண்ணாஜி திரும்பி வந்ததும் முதல் கேள்வியாக, "எனக்கு என்ன கொண்டு வந்தாய்?..." என்று கேட்டாள்.

"உனக்கு என்ன வேண்டும்?"

"இது என்ன கேள்வி? எனக்கு நீதான் வேண்டும்!..."

"அப்புறம்?..."

"எனக்குத் தெரியாது!"

"உனக்குத் தெரியாது; ஆனால், எனக்குத் தெரியும். அதனால்தான் அதைக் கொண்டு வந்தேன்!" என்றான். யமுனாவின் அகன்ற விழிகள் ஆவலோடு மலர்ந்தன. அதிசயத்தைப் பார்க்கும் ஒரு குழந்தையைப் போல அண்ணாஜியைப் பார்த்தாள். "ஒரு ரஸமான விஷயம் கொண்டு வந்திருக்கிறேன், யமுனா. அதை வைத்துக் கொண்டு நீ அழகானதொரு கதை எழுதலாம்" என்றான். இப்பொழுது யமுனாவின் முகமும் மலர்ந்தது.

"என்ன, உனக்கு அது அவசியம் வேண்டியதுதானே?" என்றான்.

"உனக்குத் தெரியாததா?... என்ன, சொல்லேன்!" என்று கூறிவிட்டு அவன் முகத்தையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். சிறு வயதிலிருந்தே அண்ணாஜியிடம் கதை கேட்பதில் யமுனாவுக்கு ஒரு அலாதி பிரீதி. புஸ்தகங்களில் படித்ததையும் சினிமாவில் பார்த்ததையும் வெகு அழகாகச் சொல்லுவான். பிறகு யமுனா கதைகள் எழுத ஆரம்பித்ததும் அவன் சொல்லும் வழக்கம் நின்று விட்டது. இரண்டு வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுது மீண்டும் அவன் வாயால் கதை கேட்கத் தயாரானாள் யமுனா.

சிற்சில குறிப்புகளையும் புகைப்படங்களையும் வைத்துக் கொண்டு ரஸமானதொரு விஷயம் சொன்னான் அண்ணாஜி. விஷயம் மிகவும் சுவாரஸ்யமானதுதான். முன்னும் பின்னும் கொஞ்சம் சேர்த்துக் கதையாக எழுதினால், ஒரு நிலையான பெயரைச் சம்பாதித்து விடலாம். அந்தக் கணமே கதையை உருவாக்குவதில் ஈடுபட்டது யமுனாவின் சிந்தனையெல்லாம்.

"என்ன யமுனா, இதை வைத்துக் கொண்டு ஒரு கதை எழுத முடியாதா?" என்றான் அண்ணாஜி.

"ஏன் முடியாது? இரண்டே நாட்களில் எவ்வளவு அழகாகக் கதை எழுதி விடுகிறேன், பார்!" என்றாள்.

அப்படியே எழுதியும் முடித்தாள்!

அதைப் படித்த அண்ணாஜி, அப்படியே அசந்து விட்டான். "பேஷ்! நான் எதிர் பார்த்ததற்கும் மேலாக இருக்கிறது யமுனா...... உண்மையைச் சொன்னால், உன்னிடம் கொஞ்சம் பொறாமைகூட உண்டாகிறது!" என்றான் அவன் பலமாகச் சிரித்துக் கொண்டே.

"ஐய, போதுமே! ஏன் இந்தப் பரிகாசமெல்லாம்?" என்றாள் யமுனா. அப்படிச் சொன்னாளே தவிர உண்மையில் பெருமையால் பூரித்திருந்தது அவள் உள்ளம். கதையை அன்றையக் கட்டிலேயே அனுப்பி வைத்தாள்.

இரண்டு வாரத்துக்கெல்லாம் கதையும் வெளி வந்து விட்டது. கதையின் உயர்வுக்குத் தகுந்தவாறு சைத்ரிகரும் தம் திறமையைக் காட்டி யிருந்தார். அச்சில் படிக்கும் போது யமுனாவே ஆச்சரியப் படும்படி கதை அவ்வளவு அழகாகவும் கச்சிதமாகவும் அமைந்திருந்தது. அவ்வளவு உயர்வான கதைக்கு எவ்வளவோ பேரும் புகழும் வரவேண்டும். அதைத்தான் யமுனாவும் எதிர்பார்த்தாள். ஆனால் அவளுக்குக் கிட்டியது......

அபவாதம்!

ஏற்கெனவே வெளிவந்த கதையின் மறு உருவம் அது! அந்தக் கதையைப் படித்த வாசகர்களின் குரல் பத்திரிகைக் காரியாலயத்தை நோக்கிப் படையெடுத்தது! அதுவும் முன்னம் எந்தத் தேதியில் வெளியாகி யிருந்ததோ, அந்தத் தேதியையும் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

குறிப்பிட்ட பத்திரிகையைத் தேடிக் கண்டு பிடித்துக் கதையைப் படித்துப் பார்த்தாள் யமுனா. அவள் தலை சுழன்றது! சொல் வித்தியாசம் இருந்ததே



புதிய

'ASPRO'

REG. TRADE MARK




'ஆஸ்ப்ரோ'

வலி மற்றும் ஜுரத்தை

அதி துரிதமாக

நிறுத்துகிறது !



புதிய 'ஆஸ்ப்ரோ' ஒன்று தான் இந்த எல்லா அனுகூலங்களும் கூடியது.

✳ **உதிரி வில்லைகளே கிடையாது!** வில்லைகள் உதிரியாக இருந்தால் தூசியும் ஈரமும் அதை எளிதில் பாதித்து, அதன் விளைவாக வயிற்றுக்கு கோளாறு ஏற்படக் கூடும். புதிய 'ஆஸ்ப்ரோ' பரிபூரண பாதுகாப்புடையதாக இருப்பதற்கு காரணம் ஒவ்வொரு வில்லையும் தனித்தனியாக, காற்றுப்புகாத வகையில் விசேஷ முறையில் மூடி உறையிடப்பட்டுள்ளது.

✳ **பாதுகாப்பு!** 'ஆஸ்ப்ரோ' இருதயத்திற்கோ, வயிற்றுக்கோ கெடுதி விளைவிப்பதில்லை. துர்ப்பழக்கம் உண்டாக்கும் மருந்து எதுவும் இதில் சேர்க்கப்படவில்லை. புதிய 'ஆஸ்ப்ரோ'வை குழந்தைகள்கூட பயமின்றி உட்கொள்ளலாம்.

✳ **மதிப்பு:** இரண்டே அணா செலவில் உங்களுக்கு துரிதமாக வேலை செய்யும் மூன்று புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் கிடைக்கின்றன. எவ்வளவு மலிவு!

புதிய 'ஆஸ்ப்ரோ' ஒரு அற்புதமான புதிய முறையில் தயாரிக்கப்படுவதன் காரணமாக, அதை உட்கொண்டவுடன் மூன்று க்ஷணத்திற்குள்ளாகவே அதன் வேலையைத் தொடங்கி விடுகிறது. இப்பொழுது உங்களுடைய சகலவிதமான நோவுகள், தலைவலி, ஜலதோஷம் மற்றும் ஜுரத்தை வேறெந்த மருந்தைக் காட்டிலும் மிக துரிதமாக நிவர்த்திசெய்யக்கூடிய புதிய 'ஆஸ்ப்ரோ' கிடைக்கின்றது. 'ஆஸ்ப்ரோ' இருதயம் அல்லது வயிற்றுக்கு எவ்வித கெடுதியும் விளைவிக்காது.

276-TAM

✳ தாமதிக்காதீர் — இன்றே புதிய 'ஆஸ்ப்ரோ' கேட்டு வாங்குங்கள்

தவிர விஷயம் ஒன்றேதான். ஆரம்பம் முதல் கடைசி வரையில் இரண்டு கதைகளின் அமைப்பும் ஒன்ருகவே இருந்தன.

யமுனுவின் நெஞ்சம் வெடித்து விடும் போல இருந்தது. அவமானம் அவளை அணு அணுவாகச் சிதைத்தது. இவ்வளவுக்கும் யார் காரணம்? அண்ணுஜி! தன்னை இக்கதிக்கு ஆளாக்க வேண்டும் என்றே செய்த சதி! கதையைப் படித்து விட்டே இந்த விஷமம் செய்திருக்க வேண்டும். இப்படித்தான் அவள் யோசனை ஓடியது. பலவிதமான உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, தன் நிலை இழந்து அண்ணுஜியைக் கண்டதும் அனலைக் கக்கினுள்!

இரண்டு மாதம் சென்று விட்டது. அண்ணுஜி அவர்கள் வீட்டுக்கு வருவதை அடியோடு நிறுத்தி விட்டான். அவளுடைய பெற்றோர்களும் பலவிதமான கேள்விகளைப் போட்டுக் குடைய ஆரம்பித்தனர். அவர்களுக்கு நடந்ததெல்லாம் தெரியாது. "எங்கேம்மா அண்ணுஜியைக் காண்பதில்லை?" என்று அடிக்கடி அவளைக் கேட்டுக் கொண்டிருந்தனர். இப்படியே மேலும் இரண்டு மாதங்கள் பறந்தன.

வெகு நாட்களாகவே யமுனுவின் தகப்பனுருக்கு க்ஷேத்திராடனம் செய்ய வேண்டுமென்று ஒரு தாகமுண்டு. தவிர்க்க முடியாத பல காரணங்களால் அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார். இனியும் ஒத்திப் போடக்கூடாதென்று பிடிவாதமாக இப்பொழுது மூட்டையைக் கட்டினுர். இது விஷயத்தில் யமுனுவும் மிகுந்த சிரத்தை காட்டினுள். கொஞ்ச நாளைக்காவது நிம்மதியாகப் பல இடங்களைப் பார்த்து விட்டு வரலாமென்று எண்ணியது அவள் மனம். யமுனு, அவள் தாயார், தகப்பனுர் மூவருமாகக் கிளம்பினுர்கள். "கூடிய சீக்கிரம் நாம் இருவரும் ஒருமுறை போய் வருவோம், யமுனு!" என்று அண்ணுஜி அன்று கூறியது அவள் நினைவுக்கு வந்தது. "இந்தப் பிரயாணத்தில் அவனும்கூட இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்?" என்று ஒரு கணம் நினைத்தாள். மறுகணமே, "சீ! அவனை விட்டுத் தூர விலகிப் போவதற்காகத் தானே, இந்தப் பிரயாணமே!..." என்று சமாதானம் செய்து கொண்டாள்.

கிழக்குக் கடற்கரைப் பக்கமாகச் சென்று காசி, ஹரித்வார் இன்னும் மத்திய பாகத்திலுள்ள முக்கிய க்ஷேத்திரங்கள் எல்லாவற்றையும் சுற்றிக் கொண்டு மேற்குக் கடற்கரை பாகத்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஒரு மாத காலம் இதற்குள் ஓடி விட்டது. பம்பாயிலிருந்து ஊர் போய்ச் சேருவது என்பதுதான் அவர்கள் போட்டிருந்த திட்டம். ஆனுல், யமுனுவின் தகப்பனுருக்கு வழியில் இருக்கும் மந்திராலயத்துக்கும் போய்வர வேண்டுமென்று தோன்றியது.

'மந்திராலயம்' என்பது மாத்துவர்களின் சுவர்க்க பூமி. ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் அவர்களின் பிருந்தாவனம் அங்கேதான் இருக்கிறது. அந்த மண்ணில் காலை வைத்தாலே, சகல பாபங்களும், ரோகங்களும், கஷ்டங்களும் நிவர்த்தியாகி விடுமென்பது அவர்களுடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

பம்பாயிலிருந்து சென்னை வரும் பாதையிலே ராய்ச்சூருக்கும் ஆதோனிக்குமிடையிலே 'மந்திராலயம் ரோடு' என்ருெரு ஸ்டேஷன் உண்டு. அங்கிருந்து ஒன்பது மைல் மோட்டாரில் போக வேண்டும். துங்கபத்திரா நதிக்கரையிலே எழுந்தருளியிருக்கிருர் ஸ்ரீ ராகவேந்திரர் அவர்கள்.

யமுனுவும் அவளுடைய பெற்ருேர்களும் நதியிலே குளித்து விட்டுப் பிருந்தாவனத்தில் சேவை செய்துகொண்டார்கள்.

"நீ வேண்டுமானுல் சற்று வெளியில் உட்கார்ந்திரம்மா; நாங்கள் அங்கப் பிரதட்சணம் செய்து விட்டு வருகிருேம்" என்ருர் யமுனுவின் தந்தை. "சரி!" என்று கூறிவிட்டுக் கோவிலுக்கு வெளியில் வந்து நின்றபடி சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்தாள் யமுனு. பக்கத்திலே சிறிது தூரத்தில் இன்ருெரு சிறு கோவில் தெரிந்தது. அங்கே போய்க் கொண்டிருந்த ஒருவரைப் பார்த்து, "அது என்ன கோவில்?" என்ருள். "மஞ்சாலை அம்மன் சன்னதி! வா, அம்மா! அம்மனைத் தரிசித்து விட்டுப் போகலாம்!" என்று அழைத்தார் அவர். அவர்தான் அந்தச் சன்னதியின் குருக்கள்.

சேவையானதும் வெளியில் வந்து படிக்கட்டில் உட்கார்ந்தாள் யமுனு. குருக்களும் கூடவே வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, "இந்த அம்மனைப் பற்றி உனக்குத் தெரியுமா அம்மா?" என்ருர். தெரியாதென்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள் யமுனு. "இந்த அம்மன் மகா சக்தி வாய்ந்தவள் அம்மா! இந்தக் கிராமத்தின் தேவதை இவள். இந்தக் கிராமத்துக்குப் பெயர் மஞ்சாலா. இந்தக் கோவில் எப்படி உண்டாயிற்றென்பதே ரஸமான விஷயம்!" என்று தொடர்ந்து சுவாரஸ்யமான சில விஷயங்களைச் சொல்லிக் கொண்டே போனுர். யமுனுவின் சிந்தனை எங்கோ போய்க் கொண்டிருந்தது. ஜுரம் வருவதைப் போல உடம்பெல்லாம் தகித்தது.

சட்டென்று குருக்கள் பக்கம் திரும்பி, "போதும்; எல்லாம் எனக்குத் தெரியும்!" என்ருள். ஒரு விநாடி யமுனுவைப் பார்த்த

படி உட்கார்ந்திருந்தார் குருக்கள். பிறகு எழுந்து தம் வழியே போய் விட்டார்.

"அண்ணாஜி! உன்னை என்னவெல்லாம் பேசி விட்டேன்! இவர் பேச்சைக் கேட்டு விட்டல்லவா, நீ எனக்குக் கூறியிருக்கிறாய்? இன்னும் எவ்வளவு பேருக்கு இவர் இதைச் சொல்லி யிருக்கிறாரோ? அதைப் பத்திரிகைக்கு எழுதிப் பயன் படுத்துவதில் எவனோ ஒருவன் என்னை முந்திக் கொண்டான்! உன் மனம் எப்படியெல்லாம் வேதனைப் பட்டதோ?" என்றவாறு மனத்துக்குள்ளேயே புலம்பினாள் யமுனா. பிறகு சட்டென்று எழுந்து திரும்பவும் சன்னதிக்குள் ஓடினாள். அம்மன் முன்னால் நின்று கொண்டு, "அம்மா, மஞ்சாலை! ஊருக்கெல்லாம் நல்லது செய்யும் நீ, எங்களுக்கு மட்டும் ஏனம்மா தீங்கிழைத்தாய்? திரும்பவும் அவன் அன்பை எப்படிப் பெறுவேன், தாயே?" என்றவாறு சிறிது நேரம் புலம்பிக் கொண்டிருந்தாள். அப்பொழுது சன்னதியில் அவளைத் தவிர வேறு யாருமில்லை. பிறகு மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டு வெளியில் வந்தாள். அவள் கண்களையே அவளால் நம்ப முடியவில்லை. உண்மையாகவே சிறிது தூரத்தில் அண்ணாஜி வந்து கொண்டிருந்தான்!

"அண்ணாஜி!" என்று ஆனந்த பரவசத்தில் இரைந்து கூவினாள் யமுனா.

"யார்? யமுனாவா!" என்று கேட்டபடி பக்கத்தில் வந்தான் அண்ணாஜி. மேற் கொண்டு யமுனாவால் எதுவும் பேசமுடிய வில்லை. "உன்னை இங்கே சந்தித்தது கூட ஆச்சர்யமில்லை யமுனா; இவ்வளவு கனிவோடு நீ என்னிடம் பேசுகிறாயே என்றுதான்..." என்று இழுத்தான்.


"என்னை மன்னித்துவிடு, அண்ணாஜி!" என்று கூறிவிட்டுக் குருக்கள் சொன்னதையெல்லாம் ஒப்புவித்தாள்.

பிறகு தான் திடீரென்று நினைத்துக் கொண்டவள் போல், "ஆமாம்; நீ எதற்கு இப்பொழுது இங்கு வந்தாய்?" என்றாள்.

"அது ஒரு விசித்திரம்! சொன்னால் நம்ப மாட்டாய். இரண்டு நாளைக்கு முன்பு இந்த அம்மன் என் சொப்பனத்தில் வந்தாள். 'வா' என்று அழைப்பதைப் போல் இருந்தது. 'அவள்தானே நம்மைப் பிரித்து வைத்தாள்; அவளிடமே போய் முறையிடுவோம்' என்று தோன்றிற்று. கிளம்பினேன்..." என்றான்.

"இன்று அவளே நம்மைச் சேர்த்து வைத்து விட்டாள். விவாகத்துக்கு முன்பே இருவருமாக அவளைத் தரிசிக்க வேண்டுமென்று அவள் விருப்பம் போலும்! வா, இருவருமாகச் சேர்ந்து போய்த் தரிசிப்போம்!" என்று கூறி விட்டு அண்ணாஜியையும் அழைத்துக் கொண்டு மூன்றும் முறையாகச் சன்னதிக்குள் நுழைந்தாள் யமுனா.

"நிறுத்து! நிறுத்து!!"




வேலை நேரமோ
விளையாடும்
நேரமோ
எந்த
நேரமானாலும்
நாள் முழுதும் வேலை செய்த பிறகு உங்களுக்கு ஆனந்தமாக ஓடி விளையாட போதிய சக்தி யிருக்கிறதா? அப்படி அன்றுடம் விளையாடவும் வேலை செய்யவும் அபரிமிதமான சக்தியைப் பெற இனிய சுவை மிகுந்த 'ஓவல்டின்' அருந்துவதனால் பெறலாம். ஏனெனில் அளவு கடந்த நன்மை பயக்கும் தன்மையைக் கொண்டது ஓவல்டின். இன்றே அருந்திப் பாருங்கள்.
விநியோகஸ்தர்கள்:
ரேஹாம்ஸ் ட்ரேடிங் கோ.,
(இந்தியா) லிட்.
-அருந்துங்கள் ருசியான
ஓவல்டின்
...சக்திக்கும்
ஊக்கத்திற்கும்!
OVALTINE
ரேடியோ ஸிலோனிலிருந்து ஓவல்டின் அபிமெச்சூர் நேரங்களை கேளுங்கள் (அதிர்வு-41.72 மீட்டர்கள்), சனிக்கிழமைகள் இரவு 8 முதல் 8-30 மணி.
(இங்கிலிஷ் 3520 கிலோசைகிள்ஸ் 31 மீட்டர்கள்)
ஞாயிறுகள் இரவு 8 முதல் 8-30 வரை
IV.461



புதுமை பெறுங்கள்! முதலில் ஸ்நானம் செய்ததும் சார்மிஸ் டால்கம் பவுடரை உடல் முழுவதும் தூவுங்கள். எத்தகைய புதுமை உணர்ச்சி அது அளிக்கும் தெரியுமா?

மிருதுத்தன்மை பெறுங்கள்! உடலில் சுரணையுள்ள இடங்களிலும் பவுடரை நன்றாக தடவிவிடுங்கள். அது பட்டைப்போல படர்ந்து எரிச்சல் வராமல் பாதுகாக்கிறது.




நீடித்த இனிமையுடன் இருங்கள்! சார்மிஸ் டால்கம் பவுடரை தாராளமாக அடிக்கடி உபயோகியுங்கள். அது செலவில்லாமல் பெருவாழ்வு அளிக்கும் சாதனம் அழகிற்கும் காதல் கவர்ச்சிக்கும் இதுவே சிறந்த ரகசியம்.

சார்மிஸ்
டால்கம் பவுடர்

பரவசப்படுத்தும் மனோ ஹரமான நறுமண முள்ளது.

அநூமகரத்வஜா

ஷட்குண மகாத்வஜா சக்தி வாய்ந்தது



சுத்தமான ஷட்குணத் தங்கத்தினால் மிகவும் சிறிய அளவில் ஆனால் பிரமாத சக்தி வாய்ந்ததாக உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டுப் பிறகு மாத்திரை வடிவம் ஆக்கப்பட்டிருக்கிறது. உபயோகிப்பதற்கு மிகவும் சுலபம். மற்ற மகரத்வஜங்களை விடச் சக்தி வாய்ந்தது.

○●○

14 மாத்திரைகள் ஒரு புட்டியில் இருக்கின்றன. (7 முழு அளவுகள்)

○●○

பெங்கால் கெமிகல்

கல்கத்தா - பம்பாய் - கான்பூர்

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்
ஆர். எல். கேனடர் & கம்பெனி
59, பந்தர் தெரு : சென்னை - 1

ஆந்திர ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்
சத்ய நாராயணா பார்மஸி
குமரி தெரு, விஜயவாடா-1 & விஜயநகரம்



நீலக் குயில்

நா. ஸரஸ்வதி

'உஸ்ஸ்' என்று ஒலி எழுப்பியவாறே சட்டையைக் கழற்றிக் 'கோட் ஸ்டாண்டில்' மாட்டினான் சுந்தரம். பிறகு ஆபீஸிலிருந்து வந்த களைப்புத் தீரச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். ஐந்து நிமிஷத்துக்குப் பிறகு அடுப்பங்கரையை நோக்கி, 'குக்கூ-கூ-கூ' என்று குயில் போலக் குரல் கொடுத்தான்.

"...............!"

"குக்கூ!"

"...............!"

"ஏ குயிலே!"

இதற்குப் பதில் 'களுக்' என்ற சிரிப்பொலி கேட்டது. சிறிது நேரம் சென்றது. மறுபடியும் சுந்தரம் 'குயி...' என்று ஆரம்பித்தவுடன் கையில் ஆவி பறக்கும் காப்பியுடனும், போலிக் கோபம் பொலியும் முகத்துடனும் அவன் மனைவி நீலா வந்து நின்றாள். அவள் கொடுத்த காப்பியை வாங்கி ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டே, தன் மனைவியின் கோபம் நிறைந்த முகத்தைப் பார்த்து மனத்துக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். ஆனாலும் அச்சிரிப்பின் அலைகள் முகத்திலும் அலையடித்தன. அவன் சிரிப்பு நீலாவின் கோபத்தை இன்னும் அதிகப் படுத்தியது.

"ஆமாம், நீங்கள் இந்தப் பெயரை விடப் போகிறீர்களா, இல்லையா!"

"ஏன்!" என்று கேட்டான் சுந்தரம், பொங்கும் சிரிப்புடன்.

"ஏனா! நன்றாயிருக்கிறது! உலகத்தில் எத்தனை பேர் என்னை விடக் கறுப்பாக இல்லை! அவர்களை யெல்லாம் இப்படித்தான் கூப்பிடுகிறார்களாக்கும்! நேற்று நீங்கள் இப்படிக் கூப்பிடுகிற சமயம் பார்த்து அடுத்த வீட்டு ராதா வந்து விட்டாள். நேற்று முழுவதும் இதைச் சொல்லிச் சொல்லிச் சிரித்தாள். என் அப்பா, அம்மா வைத்த பெயர் எனக்கில்லையா, என்ன!"

"ஏ அப்பா, என் குயிலுக்கு எவ்வளவு கோபம்!" என்று கூறி விட்டு, 'கொஞ்சும் குயிலே நீ கோபம் கொண்டாயோ!' என்று பாடியவாறே அவள் முகவாய்க் கட்டையைப் பிடித்தான். நீலா கலகலவென்று சிரிக்க ஆரம்பித்தாள். அவள் கோபம் இருந்த இடம் தெரியவில்லை. சுந்தரம் தன் பாட்டை நிறுத்திக் கொண்டான். நீலாவின் முகத்தருகே சென்று, "என் நீலக்குயிலுக்குக் கோபமும் ஒரு அழகுதான்!" என்றான் கொஞ்சலாக.

வெண் பற்கள் தெரிய இலேசாகச் சிரித்துக் கொண்டே அவனுடைய குயில் அடுப்பங்கரையை நோக்கிப் பறந்தது. சுந்தரத்தின் சிந்தனைக் குயிலும் பழைய சம்பவங்களை நோக்கிப் பறந்தது.

* * *

சுந்தரம், நீலா இருவருக்குமே அவர்களது பெற்றோர்கள் பொருத்தமாகத்தான் பெயர் வைத்திருந்தனர். சுந்தரம் அழகு வாய்ந்தவன். செந்நிற மேனி.

நீலாவின் மேனியோ மாநிறம். ஆனால் சுந்தரத்துடன் ஒப்பிட்டால் அவள் கறுப்புத்தான். ஆனால், அடர்ந்த அளகபாரம். எடுப்பான நாசி. கொடி போன்ற உடல். முல்லைப் பற்கள். துறு துறுவென நீரில் பாயும் கயல் மீன்களெனக் கண்கள். பார்த்தவுடன் யாவரையும் கவரும் ஒரு வகை அழகு அவளது முகத்தில் விகசித்துக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட நீலாவைச் சுந்தரம் முதலில் விரும்பவே இல்லை.

சுந்தரம் தன் தாயாரைக் கொண்டு பிறந்திருந்தான். கல்யாணி அம்மாளிடம் கர்வம்

என்பது மருந்துக்குக் கூடக் கிடைக்காது. எப்பொழுதும் எல்லோருடனும் அன்பாகப் பழகுவாள். திருவே குடிகொண்டிருந்தாள் அந்த அம்மாளிடம். பிள்ளையின் படிப்புக்காகக் காரைக்குடியில் ஒரு பெரிய வீட்டைப் பிடித்துக் குடி வந்தாள். சுந்தரத்தின் தந்தை கிராமத்தில் இருந்து, வயல் வெளிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நீலாவின் தாயார் வீடு தேடிக் கொண்டு வந்த பொழுதே அந்த அம்மாளைக் கல்யாணி அம்மாளுக்கு மிகவும் பிடித்து விட்டது. சுந்தரம் கலாசாலைக்குச் சென்ற பின் அந்த அம்மாளுக்குத் தனியாக உட்கார்ந்திருப்பது மிகவும் கஷ்டமாயிருந்தது. எனவே தான் நீலாவின் வீட்டாரைக் குடி வைத்துக் கொண்டாள். கல்யாணி அம்மாளை அதிகம் கவர்ந்தவள் நீலா தான். 'கல கல' வென்று அவள் வார்த்தைகளைப் பொரிந்து தள்ளுவதையும், படபடவென்று பட்டாம் பூச்சி போல் பறந்து காரியம் செய்வதையும் கண்டு பிரமித்துப் போனாள் கல்யாணி அம்மாள்.

அன்று மாலை சுந்தரம் வீட்டுக்கு வந்தவுடனேயே அவர்கள் குடிவந்து விட்டார்கள் என்பதை அறிந்தான். அம்மாவைத் தேடிக் கொண்டு சமையலறைப் பக்கம் சென்றான். கல்யாணி அம்மாள் காப்பி போட்டுக் கொண்டிருந்தாள். அவளருகே பதினாறு வயது இளமங்கை யொருத்தி எதையோ சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா!" என்ற குரலைக் கேட்டவுடன் அவள் தன் கையிலிருந்த சீசா மூடியைச் சீசாவில் வைத்துத் திருகினாள். பிறகு, "மாமி, நான் போகிறேன்" என்று கிளம்பினாள்.

"கொஞ்சம் இரு, நீலா! காப்பி சாப்பிட்டு விட்டுப் போகலாம்."

"பரவாயில்லை, மாமி" என்று கூறி விட்டு நீலா சுந்தரத்தைக் கடந்து சென்றாள். சுந்தரம் முகத்தைச் சுளித்துக் கொண்டான். அம்மாவின் அருகில் ஒரு சிறு தடுக்கை எடுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். கல்யாணி அம்மாள் காப்பியைக் கலந்து கொண்டு வந்து அவன் கையில் கொடுத்தாள்.



சுந்தரம் ஒரு வாய்க் காப்பியைக் குடித்தான். பிறகு நெற்றியைச் சுருக்கியவாறே, "ஏன் அம்மா! அவர்கள் நேற்றுக் காலையில்தானே இடம் பார்த்தார்கள்! அதற்குள் வந்து விட்டார்களா, என்ன!" என்று கேட்டான்.

"ஆமாம். இங்கே யிருந்து போனாளே, அவள்தான் அந்த அம்மாமியின் பெண். ஒரு பையன் இருக்கிறான். அவன்தான் மூத்தவன். வேலையாயிருக்கிறான்."

"அது சரி. எல்லாம் ஒரே குயில் கூட்டம் போலிருக்கிறதே!" சுந்தரத்தின் குரலில் ஏளனம் அளவு கடந்து ஒலித்தது.

"இதோ பார், சுந்தரம்! ஐந்து விரல்களும் ஒரே மாதிரியாகவா இருக்கின்றன! உலகத்திலே கடவுள் பலவிதமாகப் படைத்திருக்கிறார். நிறத்திலே என்ன இருக்கிறது! குணம் தானே வேண்டும்! ஆயிரம் பொன் பெறும் யானை கூடத்தான் கறுப்பு. இதெல்லாம் சொல்லலாமா!" என்றாள்.

"எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை, அம்மா! இப்பொழுதே இப்படிச் சத்தமாக இருக்கிறதே, நான் எப்படிப் படிக்கிறது! இதற்குத் தான் குடி வைக்க வேண்டா மென்றேன்."

"நன்றாயிருக்கிறதே, நீ சொல்லுவது. 'நீயும் நானுமடி எதிரும் புதிருமடி' என்று இந்தப் பெரிய வீட்டிலே சுவரைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கச் சொல்கிறாயா! நீ காலையில் போனால் சாயந்திரம் வருகிறாய். எனக்குப் பொழுது போவது பெரும் பாடாக இருக்கிறது. வீடு சூனியம் பிடித்தாற் போலிருந்தால் நன்றாகவா இருக்கும்!"

"உம். அப்புறம் உன் இஷ்டம்!" என்று கூறிய சுந்தரம் காப்பியைக் குடித்து விட்டுத் தன் அறைக்குச் சென்றான்.

பின் கட்டிலிருந்த ஒரு அறையும், மாடியும் தான் நீலா வீட்டாருக்குக் கொடுக்கப் பட்டிருந்தன. கீழே உள்ள அறையில் சமையல், சாப்பாடு நடக்கும். மற்றப் புழக்கங்களெல்லாம் மாடியில்தான். பேருக்குத்தான் இந்தப் பிரிவு. வேலைகளெல்லாம் முடிந்தவுடன் எல்லோரும் கூடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள். விடுமுறை நாட்களில் சுந்தரம் வீட்டிலிருக்கும் போது யாரும் பேசுவதற்கு வர மாட்டார்கள்.

சுந்தரம் நீலாவின் அண்ணனைக் கவனித்ததாகவே தெரியவில்லை. ஆனால் விடுமுறை நாட்களில் அவன் தன் அறையிலிருக்கும் பொழுது, அண்ணனும் தங்கையும் சேர்ந்து சிரிக்கும் சிரிப்பொலி மாடிப்படிகளில் தாவிக் குதித்து வந்து சுந்தரத்தின் செவிகளில் பாயும்.

ஒரு நாள் அவன் தன் தாயிடம், "ஏன் அம்மா, அதென்ன அப்படிச் சிரிக்கிறது அந்தப் பெண்! அதற்கு என்ன பைத்தியமா!" என்று கேட்டான்.

"போடா, போ! உனக்கு உன்னைத் தவிர எல்லோரும் பைத்தியந்தான். அவள் குணமே அதுதான். எதையுமே வேடிக்கையாக எடுத்துக்கிறாள். அவள்கிட்டே யாருமே கோபித்துக் கொள்ள முடியாது. நீதான் என்னமோ

'உர், உர்' என்று உறுமுகிறாய்'' என்று அவனை அடக்கி விட்டாள்.

மேலும் நாட்கள் பல ஓடின. இடையில் கல்யாணி அம்மாளுக்கு முடியாமல் இருந்த போது அவர்கள் வீட்டில் சாப்பிடவேண்டி வந்தது. வேண்டா வெறுப்பாகச் சுந்தரம் அதற்குச் சம்மதித்தான். அதன் பிறகு நீலா வின் அண்ணனுடன் ஓரளவு பழகினான்.

ஒரு நாள் காலை சுந்தரம் பல் தேய்க்கப் பின்கட்டுக்குச் சென்றான். அங்குதான் இரண்டு வீட்டுக்கும் பொதுவான குழாய் இருந்தது. குழாயடியில் நீலா டம்ளர்களைத் தேய்த்துக் கொண்டிருந்தவள் முற்றத்தின் மேற்பக்கமாக எங்கிருந்தோ குயிலோசை வருவதைக் கேட்டாள். முற்றத்தி லிருந்த வாறே பார்த்தபொழுது ஒரு பெரிய மரத்தின் தலைப்பாகம் தெரிந்தது. அங்கிருந்துதான் குயில் கூவியது. சாம்பல் கையுடன் எழுந்து நின்று 'குக்கூ' என்று பதிலுக்குக் கூவினாள்.

சுந்தரம் ஓசைப்படுத்தாமல் பின்கட்டு வாசற்படியிலேயே நின்று அவளது செய்கை களை வேடிக்கை பார்த்தான். அந்தக் குளிர்ந்த காலை வேளையில் அவளது தோற்றம் ரம்மியமாய் இருந்தது. கலைந்திருந்த கூந்தல் காற்றில் தவழ்ந்து விளையாடியது. முன் கொசுவத்தைச் சிறிதளவு எடுத்துச் செருகி யிருந்தாள். காற்றில் பறந்து முகத்தில் விழுந்த கூந்தலைப் புறங்கையால் ஒதுக்கிய வாறே, "குக்கூ, குக்கூ" என்று தொடர்ச்சி யாகக் கூவ ஆரம்பித்தாள். குயில் இருமுறை பதில் குரல் கொடுத்தது. பிறகு எதிர்க் குரல் வராமற் போகவே, குயில் பறந்து போய் விட்டது என்பதை நீலா அறிந்தாள். "ச்சு, பறந்து போயிடுத்தே!" என்று அங்கலாய்த்தாள்.

"நான் பிடித்துத் தரட்டுமா!" என்று கேட்டான் சுந்தரம் குறுநகையுடன்.

"ஊம்" என்று எங்கோ கவனமாகச் சொன்னவள் திரும்பிப் பார்த்தாள். சுந்தரத் தைக் கண்டவுடன் அவள் உடம்பு முழுவதும் ஒரு விதப் படபடப்பு ஏற்பட்டது. அதை மறைக்கச் சட்டென்று குனிந்து டம்ளர்களைத் தேய்க்கத் தொடங்கினாள்.

அவளது படபடப்பைக் கண்ட சுந்தரத் துக்குச் சிரிப்பாய் வந்தது. அவளையே பார்த் துக் கொண்டிருக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. இவ்வெண்ணம் தோன்றியதும் அவன் திடுக்கிட்டான். என்ன! நிறத்தைக் கொண்டு பிறரை மதிக்கும் அவனைக் கவரும் படி அப்படி அவளிடம் என்ன சக்தி இருந் தது! சுந்தரம் யோசித்துக் கொண்டே இருந்தான். தன்னிச்சையின்றியே அவன் கை பல் துலக்கியது.

நீலா குனிந்த தலை நிமிராமல் பாத்திரங் களைக் கழுவி எடுத்துக் கொண்டாள். சுந்தரம் பாதையை விட்டு விலகிக் கொண்டான். வில்லி லிருந்து புறப்பட்ட அம்பென நீலா 'விர்' என்று சென்று விட்டாள்.

சுந்தரத்துக்கு அன்று மனத்தில் இனந் தெரியாத ஒரு வகைப் பூரிப்பு இருந்து கொண் டிருந்தது. குளித்து விட்டுத் தலை வாரிக் கொள்ளும் போது அவன் முகத்தைக் கண் ணாடியில் பார்த்துக் கொண்டான். தன் முகத்திலிருந்த மலர்ச்சியை அவனாலேயே நம்ப முடிய வில்லை. ஆனால் அதற்குப் பின் நீலா அவனைக் கண்டால் ஒரு இளநகையுடன் ஓடி மறைந்து விடுவாள்.

அன்று தை வெள்ளிக் கிழமை. கல்யாணி அம்மாளும், நீலாவும், நீலாவின் அம்மாவும் கோவிலுக்குச் சென்றனர். வழியில் சுந்தரம் எதிரில் வந்தான். தாயின் அழைப்புக்கிணங்கி அவனும் அவர்களுடனேயே கோவிலுக்குச் சென்றான். நீலா அது வரையில் கல்யாணி அம்மாளுடன் வந்தவள் பின்தங்கி நடக்க ஆரம்பித்தாள். கோவிலில் வலம் வரும் போது "என்ன, நீலா! எங்கே கண்ணிலேயே காணோமே!" என்று நீலாவை அவளுடைய தோழி பிடித்துக் கொண்டாள்.

"என்ன, மாலதி, சௌக்கியமா! எப் பொழுது ஊரிலிருந்து வந்தாய்!" என்று நீலா பதில் கேள்வி போட, பேச்சு வளர்ந்தது.

நீலாவுக்காக மற்றவர்கள் நிற்க வேண்டிய தாயிற்று. சுந்தரம் சற்றுத் தள்ளி நின்றிருந் தான். அவன், "இதற்குத்தான் இவர்க ளுடன் கிளம்பக் கூடாது" என்று முணு முணுத்துக் கொண்டான்.

"ஏன் நீலா, அதுவா உங்க......" என்ற மாலதியை இடைமறித்து, நீலா, "ஏய், சத்தம் போட்டுச் சொல்லாதே. அவர் காதிலே விழுந்தால் உன்னை இங்கேயே கொன்று விடுவார். அவர் அதோ அந்த அம்மாமியின் பிள்ளை. அவர்கள் வீட்டிலேதான் நாங்கள் இப்பொழுது குடியிருக்கிறோம். அவர் மலான் வம்சமாக்கும்!" என்றாள்.

"ஓகோ!" என்று தலையை ஆட்டிக் கொண்டே சுந்தரத்தைப் பார்த்தாள். அவ ளுடன் வந்தவர்கள் அவசரப்படுத்தவே, "நான் வருகிறேன், நீலா! மறந்து விடாதே" என்று விடைபெற்றுக் கொண்டு மாலதி நகர்ந்தாள். சுந்தரத்தைக் கடந்து செல்லுகையில் மறுபடி யும் அவனை நன்றாகக் கவனித்தாள். சுந்தரத் தின் காதில் அவர்கள் பேச்சு விழுந்தது. 'வரட்டும்' என்று மனத்துக்குள் கருவிக் கொண்டான். சுந்தரத்தின் தாயாரும் நீலா வின் தாயாரும் ஏதோ பேசிக் கொண்டிருந்த தால் இப் பெண்களின் பேச்சை அவர்கள் கவனிக்க வில்லை. நீலா வந்தவுடன் அவர்கள் எல்லோரும் வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

இரவு சாப்பிட்டு விட்டுக் கை கழுவக் குழா யடிக்குச் சென்றான் சுந்தரம், நீலா பாத்



திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள். அவன் அவளைக் கவனித்ததாகவே தெரிய வில்லை. அவள் பாசாங்கு சுந்தரத்தின் ஆத்திரத்தைக் கிளறி விட்டது. "ஆமாம், கோவிலில் என்ன சொன்னாய்!" என்று கேட்டான்.

அவன் குரலைக் கேட்ட நீலா தலைநிமிர்ந்து பார்த்தாள். "யாரைக் கேட்கிறீர்கள், என்னையா!" அவள் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.

"உன்னைத்தான்!"

இதற்குள் நீலாவின் திகைப்பு நீங்கியது. கொஞ்சம் அவனைக் கேலிபண்ணித்தான் பார்க்கலாமே என்று எண்ணினாள். "கோவிலுக்குப் போகும் போது நான் உங்களிடம் பேசவே இல்லையே!" என்று தன்னுடைய ஆச்சரியத்தை வெளியிட்டாள்.

"என்னிடமில்லை. உன் அருமைச் சிநேகிதியிடம்தான்."

"அவளிடமா ஆ......" என்று இழுத்தாள் நீலா. குரல் தடுமாறியது.

"ஆமாம்" என்றான் அவன்.

"அதுவா, வந்து நீங்க..."என்று தயங்கினாள்.

"மலான் என்று சொன்னாய், அப்படித் தானே!" என்று கேட்டான்.

ஆமாம் என்பதற்கு அறிகுறியாகத் தலையாட்டினாள், சிரித்துக் கொண்டே.

"ஏன் அப்படிச் சொன்னாய்!" சுந்தரம் கையைக் கழுவிக் கொண்டே அவள் முக பாவத்தையும் நோட்டம் விட்டான்.

"ஏன், அவருக்குத்தான் கறுப்பர் வெள்ளையர் என்ற பேதமுண்டு. இந்தியராகிய உங்களுக்கும் அந்த எண்ணம் உண்டு இல்லையா...!"

அப்பொழுது காற்று சிலுசிலு வென்று வீசிற்று. நீலா உடம்பைக் குலுக்கிக் கொண்டே, "ஐயோ! இப்படியே நின்றேனானால் இந்தக் காற்று என் கறுப்பையெல்லாம் கொண்டு வந்து உங்கள் மேலே பூசிவிடுமே! நான் போகிறேன்" என்று கூறியபடி பாத்திரங்களை எடுத்துக் கொண்டு போய்விட்டாள். சுந்தரம் திகைத்து நின்றான்.

திங்கட்கிழமை கலாசாலை விட்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்த சுந்தரம் தன் வீட்டு வாசலில் ஒரு வண்டி நிற்பதைக் கண்டான். அவன் வீட்டு வாசலை அணுகிய பொழுது அவன் வீட்டுக்குள்ளிருந்து ஒரு அம்மாளும், ஒரு பெரியவரும், ஒரு இளைஞனும் வந்து வண்டியில் ஏறிக் கொண்டனர். அதன் பின்னர் ஒரு வைதீகரும் வந்து அவர்களுடன் ஏதோ பேசினார். வண்டி புறப்பட்டுச் சென்றது.

அவர்கள் தன் வீட்டுக்கு வந்திருந்தால் தன்னைப் பார்க்காமல் செல்ல மாட்டார்கள் என்று சுந்தரத்துக்குத் தெரியும். எனவே அவர்கள் தன் வீட்டுக்கு வரவில்லை என்று நிச்சயித்துக் கொண்டான். பின், நீலா வீட்டுக்கு வந்திருப்பார்களோ! இருக்கலாம். எதற்கு! சிந்தை குழம்பியவனாகச் சுந்தரம் வீட்டுக்குள் சென்றான். தாய் கொடுத்த பஜ்ஜியையும் கேசரியையும் கண்ட அவனுக்கு மறுபடியும் குழப்பமாகி விட்டது.

"அம்மா, இன்று நீலாவின் வீட்டுக்கு யார் வந்தார்கள்!" என்று வினவினான்.

"நீலாவைப் பார்க்கத்தான்."

"ஓஹோ!" — சிறிது நேரம் மௌனம். கேசரியை வாயில் போடக்கூடத் தோன்ற வில்லை அவனுக்கு. "கேசரி வேண்டாம். காப்பி மட்டும் கொடு" என்றான்.

"ஏண்டாப்பா, என்ன செய்கிறது உடம்பு!" என்று கவலையுடன் சுந்தரத்தின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள் கல்யாணி அம்மாள்.

"ஒன்றுமில்லையம்மா! பசியில்லை!"

காப்பி சாப்பிட்டுவிட்டுத் தன் அறைக்குச் சென்று சட்டையைக் கழற்றிப் போட்டான். மறுபடியும் தன் அறை வாசற்படிக்கு வந்தான். ஏதோ ஒன்று அவனுக்குத் துன்பம் கொடுக்கிறது. அது எது என்று ஆலோசித்தான். அப்பொழுது அடுப்பங்கரையிலிருந்து நீலா வெளியே வந்தாள். புதுப் பட்டுப் புடவை அவளை அலங்கரித்தது. தலையில் ஒரு பூச்சரம். அந்த அலங்காரத்தில் அவள் மிகவும் பொலிவுடன் இருந்தாள். ஆனால் அவள் முகத்தில் மகிழ்ச்சியே காணப்பட வில்லை. 'ஒருவேளை அது தன் மனப்பிரமையா யிருக்கலாம். ஐயமும் கூடவே எழுந்தது. அவளுக்கு மகிழ்ச்சி இல்லாமலிருக்குமா! நாம்தான் இப்படி வருந்துகிறோம். அப்படியும் அவளுக்குக் கல்யாண மென்றால் தன் மனம் இந்தப் பாடுபடுவானேன்!' இதற்குள் நீலா விடு விடென்று மாடிக்குப் போய் விட்டாள்.

இரவு ஏனோதானோ என்று சாப்பாட்டை முடித்துக் கொண்ட சுந்தரம் கைகழுவக் குழாயடிக்குச் சென்றான். நீலா ஒரு புறமாகப் பாத்திரங்களைப் போட்டுத் தேய்த்துக் கொண்டிருந்தாள். சுந்தரம் குழாயை நன்றாகத் திறந்து விட்டுத் தண்ணீரைக் கொட்டச் செய்தான். நீலா சுந்தரம் வந்திருப்பதை அறிந்து எழுந்து நின்றுகொண்டு தேய்க்க ஆரம்பித்தாள். ஆனால், தலைமட்டும் நிமிரவில்லை.

"நீலா!" அவன் குரலில் அளவுக்கு மீறிய படபடப்புத் தோன்றியது.

"என்ன!" என்று கேட்டாள் அவள், தலை நிமிராமலே.

"இந்த மாதம் எனக்கு ஒரு கல்யாணச் சாப்பாடு கிடைக்குமில்லையா!"

நீலா வெடுக்கென்று தலையை நிமிர்த்திச் சுந்தரத்தைப் பார்த்தாள். கண்களில் கண்ணீர் குளம் கட்டியிருந்தது.

"ஏன் நீலா, பிள்ளையை உனக்குப் பிடிக்க வில்லையா!"—சுந்தரம் ஆவலுடன் கேட்டான்.

"பிடித்தாலும் பிடிக்கா விட்டாலும் பெண்ணாகப் பிறந்தால் கல்யாணம் செய்து கொண்டு தானே ஆகவேண்டும்!"

"அதென்ன, அப்படிச் சொல்லுகிறாய்! உன் விருப்பத்தை அம்மாவும், அண்ணாவும் கேட்க மாட்டார்களா!"

"நானும் சொல்லி விட்டேன். அவர்களும் கேட்டு விட்டார்கள். பிள்ளையின் அம்மாவுக்கும் சம்மதம்தான். ஆனால், பிள்ளைக்குத் தான்..." நீலா மேலே சொல்லாமல் நிறுத்தினாள். பிறகு, "ஊம், அதெல்லாம் எதற்கு!" என்று பாத்திரங்களைக் கழுவ ஆரம்பித்தாள்.

"சொல்ல மாட்டாயா, நீலா!" சுந்தரத்தின் முகத்தில் ஏக்கம் தேக்கமிட்டது.

"சொன்னால் ......!"


"என்னால் முடிந்ததைச் செய்வேன்!"

"நிஜமாகவா!"


போட்டி விற்பனை
ஒவ்வொன்றும் ஸ்விஸ் தயாரிப்பு
3 வருஷ உத்திரவாதம்



15 ஜுவல்ஸ் க்ரோம் 29/- ரோல்டுகோல்டு 31/-




15 ஜுவல்ஸ் க்ரோம் 27/8/- ரோல்டுகோல்டு 29/-
17 ஜுவல்ஸ் க்ரோம் 35/- ரோல்டுகோல்டு 38/-



15 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேக் 35/-
15 ஜுவல்ஸ் 8½" சிறிய சைஸ் 40/-
17 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேக் 42/-

PRIMA WATCH CO. (X/2)
POST BOX NO. 983, CALCUTTA-1



காஸல்ஸ்

மின்சார
விசிறிகள்

மிகக் குறைந்த விலையில்
அதிகக் குளுமை.

தென் இந்தியாவுக்குப் பூரண விற்பனை ஏஜண்டுகள் :
கார்டன் வுட்ராப் அண்டு கோ., (மதராஸ்) லிமிடெட்
த. பெ. 42, சென்னை-1 போன்: 2978 (3 லைன்கள்)

5,00,000 கதிர்கள்

பருத்தி நூல்கள்

நெ. 80 வரை நூல்கள்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்., மதுரை

மில்கள் : மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்

○●○

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கான
சகலவிதமான நூல்கள்

○●○

விசேஷ ரகங்கள் :

கயிறுகள், விழுதுகள், கித்தான்கள், நாடாக்கள் முதலியவைகளுக்கான
விசேஷ நூல்கள்-தையல் நூல்-முறுக்கேற்றிய தீர்த்த சரடுகள் முதலியன

○●○

மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

பாண்டியன் பில்டிங்

போன் : 420 (4 லைன்) மதுரை தந்தி : "ஹார்வி"

"நிச்சயமாக!" அவளுக்காகத் தன் ஆவியை அர்ப்பணிக்கத் தயாராக இருந்தான் சுந்தரம்.

நீலா பாத்திரங்களை அடுக்கினாள். சுந்தரம் ஆவலுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பாத்திரங்களை அடுக்கிக் கையில் எடுத்துக்கொண்ட நீலா வானத்தின் இருளை ஊடுருவி நோக்கியவாறே, "பெண் கறுப்பாம். பின்னைக்குப் பிடிக்கவில்லை" என்று கூறி முடித்தவள் சரேலென்று சென்று விட்டாள்.

சுந்தரம் திகைத்து விட்டான். நீலா தன்னை விரும்புகிறாளா! ஆனால், தான்...! அவளைக் கண்டு ரசித்ததும், அவள் பரிகாசங்களை ஏற்றுக் கொண்டதும் எதனால்! தன் விருப்பத்தை அம்மாவிடம் தெரிவிப்பது எப்படி!

புதன்கிழமையன்று கலாசாலையிலிருந்து வந்த சுந்தரம் கைகால்களைக் கழுவிக் கொண்டு சமையலறைக்குள் சென்றான். அங்கு நீலாவும் இருக்கவே, படியிலேயே நின்றான். "உட்காரு சுந்தரம். இதோ, காப்பி போட்டு விட்டாள். கலந்து தரேன்" என்றாள் கல்யாணி அம்மாள். மேலும் அவள் தொடர்ந்து. "எனக்கு உடம்பே தள்ள வில்லை. அதனால் தான் இவளைக் காப்பி போடச் சொல்ல வேண்டியிருக்கிறது" என்றாள்.

மூன் பக்கத்திலேயே தடுக்கைப் போட்டுக் கொண்டு சுந்தரம் உட்கார்ந்து கொண்டான். பால் முதலியவற்றைக் கல்யாணி அம்மாளின் முன் வைத்தாள் நீலா. பிறகு சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டு கையில் கிடைத்த தாளைப் படிக்கலானாள். கல்யாணி அம்மாள் சுந்தரத்துடன் பேச்சுக் கொடுத்துக்கொண்டே காப்பி கலக்க ஆரம்பித்தாள்.

"சுந்தரம். அன்றைக்கு ஒரு நாள் இங்கே ஒரு பெண் வந்தாளே!"

"பார்த்தேன், அம்மா!" சுந்தரத்தின் கண்கள் அம்மாவின் பின்னால் அமர்ந்திருந்த நீலாவின் முக பாவத்தை ஆராய்ந்தன. அவள் முகத்தில் சிரிப்புத் தவழ்ந்து கொண்டிருந்தது. கல்யாணி அம்மாள் காப்பியைக் கலந்து சுந்தரத்தின் கையில் கொடுத்தாள்.

"அந்தப் பெண்ணின் அப்பா பெரிய பணக்காரராம். அவள் அம்மாவை நேற்றுக் கண்டேன். அந்தப் பெண்ணை உனக்குக் கொடுக்கிறேன் என்கிறார்கள்" என்று கூறிக் கொண்டே நீலாவுக்கும் காப்பியைக் கொடுத்தாள். கலங்கிய கண்ணைத் துடைத்துக்கொண்டு காப்பியை வாங்கிக் குடித்தாள் நீலா.

கல்யாணி அம்மாளும் காப்பி குடித்த பிறகு, நீலா பாத்திரங்களைக் கழுவக் குழாயடிக்குச் சென்று விட்டாள்.

நீலா சென்ற பிறகு, "ஊம். நீலாவைக்கூட உனக்குக் கொடுக்க நினைத்தார்கள்" என்று கல்யாணி அம்மாள் பெருமூச்சு விட்டாள்.

குருடனுக்குக் கண் கிடைத்தது போலிருந்தது சுந்தரத்துக்கு அவ்வார்த்தைகள். இவ்வளவு நேரம் மௌனம் சாதித்த சுந்தரம் ஆவலுடன், "நீ என்ன சொன்னாய்!" என்றான்.

"என்னத்தைச் சொல்வது! நீதான் அவளைக் கறுப்பு என்று பழித்தாயே! அதனால் 'பார்க்கலாம்' என்று சொல்லி விட்டேன். நான் பிடி கொடுத்துப் பேசாததினாலே அவர்கள் வேறு இடம் பார்க்கிறார்கள். மூந்தா நான் வந்தவர்களுக்கு நீலாவைப் பிடித்திருக்கிறதாம். பிடிக்காமல் என்ன செய்யும்! இப்படிப்பட்ட பெண் கிடைக்கிறதாயிருந்தால் அந்தப் பிச்சுக்களைப் போல நான் வரதட்சிணையைப் பற்றிப் பேசுவேனா! என்னமோ கொடுத்து வைத்ததுதானே கிடைக்கும்!"

இதுதான் நல்ல சமயம் என்று சுந்தரம், "அம்மா, அவர்களிடம் நான் சம்மதித்ததாகச் சொல்லு" என்றான்.

கல்யாணி அம்மாள் திகைத்துப் போனாள். "ஏண்டா, விளையாடுகிறாயா!"

"இல்லையம்மா. உண்மையாகத்தான்" என்று உறுதி மொழி தந்தான் மகன்.

"அப்படியானால், இதோ அவர்களிடம் போய்ச் சொல்லி விட்டு வருகிறேன். அப்பாவுக்கும் கடிதாசு எழுதி விடு, உடனே வரச் சொல்லி!" என்று கூறி விட்டு மாடியை நோக்கி விரைந்தாள்.

அம்மா சென்றவுடன் சுந்தரம் அங்கே பக்கம் முழுவதும் ஏதேதோ விளம்பரங்கள் கிடந்த தாளை எடுத்துப் பார்த்தான்.

அப்பொழுது நீலா பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அங்கே வந்தாள். அலமாரியில் பாத்திரங்களைக் கவிழ்த்தாள். சுந்தரம் மெதுவாக அவள் பின்னால் சென்று நின்றான்.

"ஆமாம். இந்தத் தாளிலே எதைப் படித்து விட்டு அப்படிச் சிரித்தாய்!"

"அதிலா! அதிலே ஒன்றுமில்லை. அம்மா அந்தப் பெண்ணைப் பற்றிச் சொன்னார்களில்லையா, உங்கள் கல்யாண விஷயமாக. எனக்கும் ஒரு கல்யாணச் சாப்பாடு கிடைக்கும் என்ற நினைப்பு வந்தது. ரொம்ப ஆனந்தமாய் இருந்தது. அதனால்தான்" என்றாள்.

"அவ்வளவுதானா! உன்னை..." என்றவாறே சுந்தரம் போலிக் கோபத்துடன் அவளை நெருங்கினான். அவள் சட்டென்று தலைநிமிர்ந்து இரக்கத்துடன் அவனைப் பார்த்தாள். "பயப்படாதே! நீ எனக்குச் சொந்தமாக வேண்டுமென்றிருக்கையில், மற்றொரு பெண் உன் இடத்தை அபகரித்துக் கொண்டுவிட முடியுமா!" என்றான். அவன் கண்களில் தோன்றிய அன்பைக் கண்டு நீலா அவனையே நன்றியுடன் சிறிது நேரம் பார்த்தாள். அவள் கண்களில் நன்றியினால் கண்ணீர் பெருக்கெடுத்தது.

அவள் கண்களைத் துடைக்கக் கை தூக்கிய சுந்தரம் அக்கினி, பெரியோர் இவர்களின் சாக்ஷியை எண்ணியவனாகக் கைகளைப் பின்னால் இழுத்துக் கொண்டான். சமையலறையின் வாசற்படியருகே சென்று மின்சார விளக்கின் விசையைத் தட்டி விட்டான். எங்கும் மின்சார ஒளி பரவியது. அவ்வொளியில் அந்த நீல மேனியாளின் அழகைக் கண்டு மகிழ்ந்தான்.

* * *

"என்ன நித்திரையோ!" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் நீலா.

கண் விழித்த சுந்தரத்தின் எதிரே மின்சார ஒளியில் தேவதை போல் நின்றாள் அவன் அன்புக் குயில். "ஊம் தூக்கமில்லை. குயில் பாடுமா, பேசுமா என்று யோசனை செய்தேன். இரண்டும் செய்யும் என்று குயில் கூறியது" என்றான் சுந்தரம் புன்னகையுடன். நீலாவும் பதிலுக்குப் புன்னகை பூத்தாள்.

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10. Editor: Mi. Pa. Somasundaram.


ஹிமாலயா புக்கே
உபயோகித்து அதன்
அதிகப்படியான
புதுப்பொலிவை
உணருங்கள்
–நாள்முழுவதும்!
வதனத்திற்கு ஹிமாலயா
டாய்லெட பொக்கே
பவுடர் ஒரு சிறந்த தின
சரி அழகு சாதனம்—
மணமுள்ளது.
மிருதுவானது.
குளிர்ச்சியானது.
ஹிமாலயா
புக்கே
டாய்லெட் அண்டு டால்கம்
பவுடர்ஸ்
செவப்புக் கோடிட்ட ஹிமாலயா பொக்கே
டாய்லெட் பவுடர் டின் ஒரு பவுடர்
பேடுடன் கூடியது.
HBP 13-50 TM
இராஸ்மிக் கம்பெனி லிட்., லண்டனுக்காக இந்தியாவில் செய்தது.

REGISTERED No. M. 4392
Registered as newspaper in Ceylon

